பக்கங்கள்: 20
விலை:20 ரூபா

# காலைக்கதிர்
Kalaikkathir

விடியல் 01 | வள்ளுவர் ஆண்டு 2048 | ஆடி 18, வியாழக்கிழமை 03.08.2017 | கதிர் 270

# புளொட் - ரெலோ - ஈ.பி.ஆர்.எல்.எவ். ஓரணியாக!

## மாவட்ட ரீதியில் செயற்பட முடிவு


வவுனியா, ஓக.03

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு பதிவு செய்யப்பட்டு ஒரு கட்டமைப்பாக இயங்காத நிலையில், தாங்கள் தமிழரசுக் கட்சியினால் திட்டமிடப்பட்டே ஓரங்கட்டப்படுகின்றனர் எனக் கருதும் ரெலோ, புளொட், ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய பங்காளிக் கட்சியினர், அதன் காரணமாகத் தங்களுக்குள் ஒன்றிணைந்து தனி அணியாகவும் செயற்படவும் முடிவு செய்திருக்கின்றனர்.

பக்கம் 18 >>>

# தேவைக்குப் படைகளை அழைப்பதை நியாயப்படுத்துகின்றார் முதலமைச்சர்!

## இராணுவத்தை விட்டு ஓடியவர்கள் போன்று இங்கும் யுத்தப் பயிற்சி பெற்றோர் குற்றங்களில் ஈடுபடலாமாம்



( எஸ்.நிதர்ஷன் )

யாழ்ப்பாணம், ஓகஸ்ட் 03

இராணுவத்தில் இருந்து ஓடிப்போனவர்கள் தெற்கிலே எவ்வாறு பாரிய குற்றங்களைப் புரிந்தார்களோ அதேபோல் யுத்தப் பயிற்சி பெற்றவர்கள் வடக்கிலும் அவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட வாய்ப்பிருக்கின்றது என கூறியிருக்கும் வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரன், இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்ற கொள்கையை நாம் கொண்டிருப்பதால் எது நடந்தாலும் இராணுவத்தின் ஒத்துழைப்பைக் கேட்கக்கூடாது என அது அர்த்தப்படுத்தக் கூடாது எனவும் கூறியுள்ளார்.

பக்கம் 18 >>>

## அரசியல் கைதிகளின் உறவினர்கள் முதலமைச்சருடன் நேற்றுச் சந்திப்பு



( எஸ்.நிதர்ஷன் )

இலங்கை சிறைகளில் அரசியல் கைதிகளாக தடுத்து வைக்கப்பட்டிருக்கும் தங்கள் உறவினர்களை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுதமிழ்அரசியல்கைதிகளின் உறவினர்கள் நேற்று காலை வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனைச் சந்தித்து கலந்துரையாடியுள்ளமையுடன், மகஜர் ஒன்றையும் அவரிடம் வழங்கியிருக்கின்றனர்.

பக்கம் 18 >>>

## மாகாண சபை உறுப்பினராக ஜெயசேகரம் பதவியேற்பு



( எஸ்.நிதர்ஷன் )

யாழ்ப்பாணம்,ஓக.03

வடக்கு மாகாண சபையின் புதிய அங்கத்தவராக யாழ்ப்பாணம் வர்த்தக சங்கத்தின் தலைவர் ஆர்.ஜெயசேகரம் நேற்று சத்தியப் பிரமாணம் செய்து பதவியேற்றுக் கொண்டார்.


இந்த நிகழ்வில் இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தலைவர் மாவை சேனாதிராசா, மாகாண சபைஉறுப்பினர்களான இமானுவேல் ஆர்னோல்ட், கேசவன்

பக்கம் 18 >>>

அரசுடன் தமிழ்க் கூட்டமைப்பு

## நம்ப நடக்கின்றது நம்பி நடக்கவில்லை

### இப்படிக் கூறுகின்றார் மாவை



( எஸ்.நிதர்ஷன் )

யாழ்ப்பாணம்,ஓக.03

மைத்திரி – ரணில் கூட்டு அரசாங்கத்துடன் 'நம்ப நட; நம்பி நடவாதே!' என்பது போலவே தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு செயற்பட்டு வருகின்றது எனக் கூட்டமைப்பின் யாழ். மாவட்ட நாடாளுமன்றஉறுப்பினரும்தமிழரசுக்கட்சியின் தலைவருமான மாவை சேனாதிராசா தெரிவித்தார்.

தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் சார்பில் வடக்கு மாகாண சபையின் புதிய உறுப்பினராக நியமிக்கப்பட்டுள்ள ஆர்.ஜெயசேகரம் பதவிப் பிரமாணம் செய்யும் நிகழ்வு யாழ். வர்த்தக சங்கத்தில்

பக்கம் 18 >>>

## 'நல்லாட்சி', 'நல்லிணக்கம்' என பேசுவதை இனி நிறுத்துங்கள்!

### அரசியல் கைதியின் மனைவி வேண்டுகோள்

( எஸ்.நிதர்ஷன் )

யாழ்ப்பாணம்,ஓக.03

'தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள், மாகாண சபை உறுப் பினர்களை 'நல்லாட்சி', 'நல்லிணக்கம்' எனப் பேசாதீர்கள் என கேட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதி ஜோசப் செபஸ்தியான் என்பவரின் மனைவி, 'நல்லாட்சி', 'நல்லிணக்கம்' என்பவற்றுக்கான உண்மையான

அர்த்தம் இந்த அரசாங்கத்திற்கு தெரி யாது, அவர்களுக்கு தெரிந்திருந்தால் எமக்கு இந்த நிலை வந்திருக்காது எனவும் கூறியிருக்கின்றார்.

பக்கம் 18 >>>

## பொலிஸ் விசேட நடவடிக்கை ஒரே நாளில் 2,717 பேர் கைது

கொழும்பு, ஓக.03

பொலிஸாரால் மேற்கொள்ளப்பட்ட நாடு தழுவிய விசேட பொலிஸ் நடவடிக்கைகளில் 2ஆயிரத்து 717 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

பொலிஸ்மா அதிபரின் மேற் பார்வையின் கீழ் நேற்றுமுன்தினம் நள்ளிரவு முதல் நேற்றுக் காலை வரை நாட்டின் அனைத்து பொலிஸ் பிரிவுகளும் உள்ளடங்கும் வகையில் மேற்கொள்ளப்பட்ட நடவடிக்கைகளின் போதே இவர்கள் கைதுசெய்யப்பட்டனர் எனப்

பக்கம் 18 >>>

## வடக்கில் சரணடையாமல் 260 புலிகள் உள்ளனராம்!

### சிங்கள நாளிதழின் 'கணக்கு' இது

கொழும்பு,ஓக.03

இராணுவத்திடம் சரணடையாத சுமார் 260 விடுதலைப் புலி உறுப்பினர்களின் வடக்கில் உள்ளனர் எனச் சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

புனர்வாழ்வுக்கு உட்படுத்தப்படாத 260 தமிழீழ விடுதலைப் புலிப் போராளிகள் வடக்கில் இருக்கின்றார்கள் எனப் புலனாய்வுப் பிரிவினர் நடத்திய விசாரணைகள் மூலம் தெரியவந்துள்ளது. வடக்கில் இடம்பெற்று வரும் சட்டவிரோத வர்த்தக

பக்கம் 18 >>>

## பொலிஸ் மீது வாள்வெட்டு; இதுவரையில் ஐவர் சிக்கினர்!



யாழ்ப்பாணம்,ஓக.03

யாழ்ப்பாணம்,கொக்குவில், பொற்பதிப் பகுதியில் சீருடையில் சென்ற பொலிஸாரை வாளால் வெட்டிய விவகாரம் தொடர்பில் இதுவரைஐந்து பேரைப்பொலிஸார்கைது செய்திருக்கின்றனர் என்று தெரிகின்றது.

அவர்களில் இருவர் நேற்று யாழ். நீதிவான் எஸ்.சதீஸ்வரன் முன்னிலையில்முற்படுத்தியபோது அவர்களை விளக்கமறியலில் வைக்குமாறுஉத்தரவிட்ட நீதிவான் அவர்களை எதிர் வரும் 10 ஆம்

பக்கம் 18 >>>

## அரசமைப்புக்கு விரைவில் 20ஆவது திருத்தம் வருகிறது?

கொழும்பு, ஓக.03

சகல மாகாண சபைகளினதும்தேர்தலைஒரே தினத்தில் நடத்துவதற்கான ஏற்பாடுகள் உள்ளடங்கலாக அரசமைப்பிற்கான 20 ஆவது திருத்தம் விரைவில் வரவிருப்பதாக கொழும்புச் செய்திகள் தெரிவித்தன.

புதிய அரசமைப்பை ஏற்படுத்துவதற்கான நடவடிக்கைகள் ஒருபுறம் நடைபெற்றுக்கொண்டிருக்கையில் அதற்கு முன்னதாக

பக்கம் 18 >>>




## சந்தேகத்தை கடற்படையினர், ராணுவத்தினர் மீது திருப்பும் வகையில் வித்தியாவின் சடலம் கிடந்தது

### 'ட்ரயல் அட்பார்' வழக்கில் புலனாய்வு அதிகாரி சாட்சியம்

யாழ்ப்பாணம்,ஓக.03

புங்குடுதீவு மாணவி வித்தியாவின்சடலம்கிடந்த நிலையைப் பார்த்த போது, இராணுவம் மற்றும் கடற்படையினர் மீது இந்தக் குற்றத்தைத் திசை திருப்புவதற்கான முயற்சிகள் இடம்பெற்றிருந்தன சந்தேகங்கள் இருந்தன என குற்றப் புலனாய்வு பிரிவின் சப் இன்ஸ்பெக்டர் ஏ.ஜே. நிஷாந்த சில்வா தெரிவித்துள்ளார். சம்பவம் இடம்பெற்ற இடத்தில் இருந்து 2கிலோமீற்றர்தொலைவில் கடற்படை முகாம் இருந்த

பக்கம் 18 >>>

# நல்லிணக்கத்தை சீர்குலைக்கும் சிலர் தெற்கில் மட்டுமன்றி வடக்கிலும் உள்ளனர்

## தயாசிறி, ராஜித கூட்டாகத் தெரிவிப்பு

நல்லிணக்கத்தைச் சீர்குலைக்கும் சிலர் தெற்கு போன்றே வடக்கிலும் இருக்கின்றனர். இவ்வாறானோராலேயே அங்கு சில சம்பவங்கள் இடம்பெறுகின்றன என்று விளையாட்டுத்துறை அமைச்சரும் அமைச்சரவை துணைப் பேச்சாளருமான தயாசிறி ஜயசேகர மற்றும் சுகாதார போசாக்கு மற்றும் சுதேச வைத்தியத்துறை அமைச்சரும் அமைச்சரவை துணைப்பேச்சாளருமான டாக்டர் ராஜித சேனாரத்ன ஆகியோர் தெரிவித்தனர்.

அரச தகவல் திணைக்களத்தில் நேற்று இடம்பெற்ற அமைச்சரவை தீர்மானங்களை அறிவிக்கும் செய்தியாளர் மாநாட்டிலேயே அவர்கள் இவ்வாறு குறிப்பிட்டனர்.

தமிழ்த்தேசியக்கூட்டமைப்பு நல்லிணக்கத்தை விரும்பியே செயற்படுகின்றது. இவர்களுள் பெரும்பாலானோர் நல்லிணக்கத்துக்கு ஆதரவு அளித்துள்ளனர். நல்லிணக்கத்தைக் கட்டியெழுப்புவதே அரசின் நோக்கம். இதற்காக அரசு தேவையான நடவடிக்கைகளை மேற்கொள்கின்றது என்றும் அமைச்சர்கள் மேலும் தெரிவித்தனர்.

யாழ்ப்பாணத்தில் மீண்டும் செயற்படுவதாகக் கூறப்படும் ஆவா குழு தொடர்பாக ஊடகவியலாளர் ஒருவர் கேட்ட கேள்விக்கு அமைச்சரவை துணைப் பேச்சாளர் அமைச்சர் டொக்டர் ராஜித சேனாரத்ன பதிலளிக்கையில்:-

'ஆவாக்குழு ராஜபக்ஷவின் காலத்தில் இருந்தது. அவர்களுக்கு யார் பணம் கொடுத்தார்கள் என்று அனைவரும் அறிவார்கள். இப்பொழுது மீண்டும் அவர்கள் இருக்கின்றார்கள்.' என்றார்.

இதேவேளை, கோப்பாயில் 2 பொலிஸார் மீது மேற்கொள்ளப்பட்ட தாக்குதல் தொடர்பில் 7 பேர் அடையாளம் காணப்பட்டுள்ளனர். அவர்களில் 2 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

ஏனையோரைக் கைது செய்வது தொடர்பில் நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டுள்ளது என்று பொலிஸ் ஊடகப்பேச்சாளர் ருவான் குணசேகர தெரிவித்தார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சந்தேகநபர்கள் கைது செய்யப்படுவதும் அவர்களை நீதிமன்றில் ஆயர்செய்வதும் பிணையில் விடுவதும் நடைமுறையில் இருந்து வருகின்றது.

சமீபத்திய பொலிஸார் மீதான தாக்குதல் தொடர்பில் கைதுசெய்யப்பட்டுள்ள 2 சந்தேகநபர்களும் ஆவா குழுவைச் சேர்ந்தவர்கள் என்றும் அவர்களில் ஒருவர் முன்னாள் விடுதலைப்புலி உறுப்பினர் என விசாரணைகளில் இருந்து தெரியவந்துள்ளது என்றும் அவர் மேலும் குறிப்பிட்டார். (எ)



### கலைமுதற் தேர்வு மாணவர்களுக்கான கலந்துரையாடல்

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலைய கலை முதற் தேர்வு மாணவர்களுக்கான, முதலாம் அரையாண்டு நேரடிக் கலந்துரையாடல் நாளை மறுதினம் 5 ஆம் திகதி தொடக்கம், அடுத்த மாதம் 3 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை வரை -

யாழ்.பல்கலைக்கழகத்தின் கலைப்பீட விரிவுரை மண்டபத்தில் நடைபெறும் என்று அறிவிக்கப்பட்டுள்ளது.

இந்தக் கலந்துரையாடலுக்கான நேர அட்டவணையை இணையத்தளத்திலும் (WWW. codl.jfn.ac.lk) மற்றும் முகப் புத்தகத்திலும் (w.w.w.facbook.com/uoj.codl) பார்வையிட்டு மேற்படி கலந்துரையாடலில் பதிவு செய்யப் பட்ட மாணவர்களை பங்கு பற்றிக் கொள்ளுமாறு யாழ். பல்கலைக்கழக மாணவர்களை பங்குபற்றிக் கொள்ளுமாறு யாழ்.பல்கலைக்கழக திறந்த மற்றும் தொலைக்கல்வி நிலையப் பணிப்பாளர் பேராசிரியர் பா.நிமலதாசன் அறிவித்

## சங்கிலி அபகரித்த இளைஞர்கள் கையை வெட்டிவிட்டு தப்பி ஓட்டம்

வவுனியா, ஓக 03

வவுனியா மூன்று முறிப்புப் பகுதியில் பெண் ஒருவரின் தங்கச் சங்கிலியை அபகரித்துக் கொண்டு அந்தப் பெண்ணின் தாயாரின் கையை வெட்டிவிட்டு இரு இளைஞர்கள் தப்பிச் சென்ற சம்பவம் ஒன்று இடம்பெற்றுள்ளது.

நேற்று முன்தினம் இடம்பெற்ற இந்தச் சம்பவம் பற்றி மேலும் தெரிய வருவதாவது,

மேற்படி குடும்பத்தினர் இரவு 10.30 மணியளவில் தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த போது வீட்டு வாசலில் உறவினர்கள் அழைத்தமை போல் அவர்களை இளைஞர்கள் இருவர் அழைத்துள்ளனர். அப்போது அவ்விடத்துக்கு அந்த வீட்டில் வசித்த பெண் சென்றபோது அவர் அணிந்திருந்த தங்கச் சங்கிலியை இளைஞர்கள் அறுத்துள்ளனர். அதன்போது குறித்த பெண் கூக்குரலிட்ட வேளை பெண்ணின் தாயார் அவ்விடத்துக்கு ஓடி வந்துள்ளார். இதன் போது தாயாரான பரமசிவம் ஷ்கந்த லோஜினி (வயது 60) என்பவரின் கையை வெட்டி விட்டு அந்த இளைஞர்கள் தப்பியோடியுள்ளனர்.

மோட்டார் சைக்கிளில் வந்த இரு இளைஞர்களும் தங்களை இனங்காட்டிக் கொள்ளாத வகையில் முகத்தை மறைத்து கறுப்புத்துணியால் கட்டியிருந்தனர்.

இந்தச் சம்பவத்தின் போது காயமடைந்த பெண் சிகிச்சைக்காக வவுனியா வைத்தியசாலையில் சேர்க்கப்பட்டுள்ளார். மேலதிக விசாரணைகளை வவுனியா பொலிஸார் மேற்கொண்டுவருகின்றனர். (எ-100)

## சைட்டத்துக்கு எதிராக கிளிநொச்சியில் நேற்று கவனவீர்ப்பு




சைட்டத்துக்கு எதிர்ப்புத் தெரிவித்து கிளிநொச்சியில் கவனவீர்ப்புப் போராட்டம் மேற்கொள்ளப்பட்டுள்ளது. நேற்று நண்பகல் 12 மணி முதல் 2 மணி வரை கிளிநொச்சி மாவட்ட வைத்தியசாலைக்கு முன்பாக மருத்துவர்கள் மற்றும் மருத்துவபீடம் மற்றும் பொறியியல் பீட மாணவர்கள் ஆகியோர் இணைந்து இந்த கவனவீர்ப்புப் போராட்டத்தை மேற்கொண்டனர்.

சைட்டம் தனியார் மருத்துவக் கல்லூரிக்கு எதிர்ப்புத் தெரிவித்து, அதனை நிறுத்தக் கோரியே இந்தக் கவனவீர்ப்பு மேற் கொள்ளப்பட்டுள்ளது. 'சைட்டம் எதிர்ப்பு மக்கள் அரண்' எனும் அமைப்பினர் இதனை மேற்கொண்டுள்ளனர். (எ)

## துணிப்பை தயாரிப்பு ஆரம்ப விழா இன்று

சாவகச்சேரி நகர இளைஞர் கழகமும் சாவகச்சேரி நகராட்சி மன்றமும் இணைந்து துணிப்பை தயாரிக்கும் ஆரம்ப விழாவை இன்று வியாழக்கிழமை காலை 9.30 மணிக்கு சாவகச்சேரி பொன்விழா மண்டபத்தில் நடத்தவுள்ளன.

ஞா. கிஷோர் தலைமையில் இடம்பெறவுள்ள இந்த நிகழ்வில் பிரதம விருந்தினராக வடமாகாண மகளிர் விவகார மற்றும் புனர்வாழ்வு அமைச்சர் அனந்தி சசிதரன் கலந்து கொள்ளவுள்ளார்.

சிறப்பு விருந்தினர்களாக இலங்கைத் தமிழரசுக் கட்சியின் தென்மராட்சி அமைப்பாளர் க.அருந்தவபாலன், தேசிய இளைஞர் சேவைகள் மன்ற உதவிப் பணிப்பாளர் ஏ.தவேந்திரன் ஆகியோரும் கௌரவ விருந்தினராக வர்த்தகர் ந. ரவிச்சந்திரனும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர். (எ-21)

## அபிவிருத்திகளை துரிதப்படுத்தக் கோரி மன்னாரில் நேற்று கையெழுத்து வேட்டை!

மன்னார் நகர் நுழை வாயில் பகுதியில் வரவேற்பு கோபுரம், அடுத்து மணிக்கூட்டுக்கோபுரம் ஆகியன அமைப்பதற்கு நீண்ட கால மாக பல்வேறுபட்ட வர்களால் இந்தத் திட்டம் முன் னெடுக்கப்பட்டும் இது விடயமாக எந்த முயற்சியும் மேற்கொள்ளாதிருப்பதைமுன்னிட்டு மன்னார் தமிழமுது நண்பர்கள் வட்டம் மன்னார் மாவட்டத்தின் அபிவிருத்தியில் தற் பொழுது 16 முக்கிய கோரிக்கைகளை முன்வைத்து 'மன்னாரின் எழுச்சி அதுவே எங்களின் முயற்சி' என்னும் கருப்பொருளில் நேற்று பொது மக்களிடம் கையெழுத்து வேட்டை நடத்தியது.

மன்னார் மாவட்ட செயலகத்துக்கு முன் தனியார் மற்றும் இ.போ.ச. போக்குவரத்து நிலையங்களுக்கு அருகாமையில் நேற்றுக் காலை தொடக்கம் மாலை வரை இந்தக் கையெழுத்து வேட்டை நடைபெற்றது.



இந்த நிகழ்வில் திருக்கேதீஸ்வர பௌத்த விகாரை தேரர் வண. ஜெரிவன கந்தானந்த, மன்னார் மாவட்ட சைவக்கலை இலக்கிய மன்றத் தலைவர் மஹா.தர்மகுமார சர்மா, அகில இலங்கை ஜம் இமாவத்துல் உலமா மன்னார் கிளை இணைத் தலைவர் மௌலவி எஸ்.ஏ.அஸீம், மன்னார் மறை மாவட்ட குரு முதல்வர் ஏ.வி.சோசை, ஆயுர் வேத வைத்திய கலாநிதி எஸ். லோக நாதன் உட்பட கையெழுத்து ஆரம்ப நிகழ்வில் கலந்து கொண்டனர்.

மக்களின் கையெழுத்துக்களுடன் கோரிக்கைகள் அடங்கிய மகஜர் வட மாகாண முதலமைச்சர் சி.வி. விக்னேஸ்வரன், மாவட்ட அபிவிருத்தி ஒருங்கிணைப்புக்குழு இணைத் தலைவர்கள், மாவட்ட அரச அதிபர், மன்னார் நகர சபையின் செயலாளர் ஆகியோருக்கு அனுப்பப்படும் என்று தமிழமுது நண்பர்கள் வட்டம் இயக்குநர் வை. கஜேந்திரன் தெரிவித்தார். (எ-112)




யாழ்ப்பாணம், ஓக 03

இலங்கை இளங்கலைஞர் மன்றம் நல்லூர் முருகன் உற்சவ காலத்தை ஒட்டி தெல்லிப்பழை துர்க்காதேவி தேவஸ்தானத்தின் அனுசரணையுடன் நடத்தும் தெய்வீக இசையரங்கு இன்று வியாழக்கிழமை மாலை 6.45 மணிமுதல் இரவு 8 மணிவரை நல்லூர் துர்க்காதேவி மணிமண்டபத்தில் இடம்பெறும்.

இன்றைய நிகழ்வில் பாட்டு:சிவரஞ்சினி ரமணா, வயலின்: எஸ்.கோபிதாஸ், மிருதங்கம்: வி.ரமணா, கடம்: கே.ரவிசங்கர்.

★★★

நல்லூர் உற்சவத்தில் உலக சைவத் திருச்சபை இலங்கை நடத்திவரும் தெய்வீகச் சிறப்பு நிகழ்வு நல்லூர் ஸ்ரீலஸ்ரீ ஆறுமுகநாவலர் மணிமண்டபத்தில் மாலை 6.45 மணிமுதல் 7.45 மணிவரை நடைபெற்று வருகிறது. அந்த வகையில் இன்று சைவப் புலவர் குமரநாதன் 'கந்தபுராணத்தில் சைவ சித்தாந்தம்' என்னும் தலைப்பில் ஆன்மீக உரையாற்றுவார். (இ)

# இந்தியாவில் தயாரிக்கப்பட்ட அதிநவீன கப்பல்; இலங்கைக் கடற்படை நேற்று பொறுப்பேற்றது




இலங்கைக் கடற்படையின் முதலாவது அதி தொழில்நுட்ப ஆழ்கடல் கண்காணிப்புக் கப்பல் 'சயுரல' எனப் பெயரிடப்பட்டு, ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவினால் நேற்றுப் பிற்பகல் கொழும்புத் துறைமுகத்தின் கிழக்கு இறங்குதுறையில் வைத்து கடற்படையினரிடம் சம்பிரதாயபூர்வமாகக் கையளிக்கப்பட்டது.

இந்திய கோவா கப்பல் கட்டும் தளத்தில் இலங்கை கடற்படைக்காக இந்த கப்பல் கட்டப்பட்டது. இலங்கைகடற்படையின்தேவைக் கமைய கப்பல் கட்டும் நிறுவனத்தினால் கட்டப்பட்ட முதலாவது கப்பல் இது என்பது குறிப்பிடத்தக்கது.

இந்த நவீன கப்பல் கடந்த மாதம் 28 ஆம் திகதி கொழும்பு துறைமுகத்தை அடைந்த போது கடற்படை பாரம்பரியத்துக்கமைய அது வரவேற்கப்பட்டது.

இந்த கப்பல் இலங்கை கடற்படையின்67 ஆண்டுவரலாற்றில் முதற்தடவையாக புதிதாக கொள்வனவு செய்யப்பட்ட அதி தொழில்நுட்பத்தை கொண்ட கப்பலாகும்.

இந்த நவீன போர்க் கப்பல் இலங்கையின் கடல் எல்லையில் ரோந்து, தேடுதல், மனிதாபிமான உதவிகள் மற்றும் அனர்த்த நிவாரண செயற்பாடுகள் போன்றவற்றை மேற்கொள்ளக்கூடிய ஆற்றல் உள்ளது. வெளிவாரி தீயணைப்பு நடவடிக்கைகளுக்கும் உதவ முடியும். இலகுரக ஹெலிகொப்டர் இறங்குதளமும் கப்பலில் உள்ளது.

105.7 மீற்றர் நீளமான இந்த கப்பல் 13.6 மீற்றர் அகலமானது. அதன் வேகம் மணித்தியாலத்துக்கு 26 கடல் மைல்களாகும்.

துறைமுக வளாகத்துக்கு வருகை தந்த ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, கடற்படை தளபதி வைஸ்அட்மிரல்ரவீந்ரவிஜேகுணவர்த்தன வரவேற் கப்பபார்.

விசேடகடற்படைஅணிவகுப்பு ஜனாதிபதிக்கு வழங்கப்பட்டது.

ஜனாதிபதி, புதிய கப்பலின் கட்டளை அதிகாரி கப்டன் நிசாந்த அமரோஸாவிடம் கப்பலுக்கான அதிகார பத்திரத்தை வழங்கினார்.

சர்வமத ஆசீர்வாததத்துடன் கப்பலின் பெயர்ப்பலகை மற்றும் உத்தியோகபூர்வசின்னம் ஜனாதிபதியால் திறந்து வைக்கப்பட்டது.

கப்பலில் கண்காணிப்பில் ஈடுபட்ட ஜனாதிபதி கப்பலின் செயற்பாடுகள், தயார்நிலை மற்றும் தயாரிப்பு தொடர்பில் கண் காணித்தார்.

அமைச்சர் மகிந்த சமரசிங்க, ராஜாங்க அமைச்சர் ருவன் விஜேவர்த்தன, இந்திய பாதுகாப்பு உற்பத்தி செயலாளர் ஏ.கே.குப்தா, இந்தியத் தூதுவர் தரன்ஜித் சிங் சந்து, கடற்படைத் தளபதி வைஸ் அட்மிரல் ரவீந்ர அபேகுணவர்த்தன, இந்திய தெற்கு கடற்படை பிரதம அதிகாரி வைஸ் அட்மிரல் ஏ.ஆர். கார்வ் உள்ளிட்ட பலர் நிகழ்வில் கலந்து கொண்டனர்.

## மேல் நீதிமன்ற நீதிபதியின் எண்ணிக்கை 10 ஆல் உயரும்

கொழும்பு, ஓக. 03

மேல் நீதிமன்றத்தின் நீதிபதிகளின் எண்ணிக்கையை அதிகரிப்பதுதொடர்பானசட்டதிருத்தத்திற்கு அமைச்சரவையில் அனுமதி கிடைத்துள்ளது.

மேல் நீதிமன்றத்திற்காக தற்போது அனுமதிக்கப்பட்டுள்ள நீதிபதிகளின் எண்ணிக்கையை 75 இலிருந்து 85 வரை அதிகரிப்பது தொடர்பில், சட்ட வரைஞர் திணைக்களத்தின் மூலம் இந்த நீதிமன்ற அமைப்பு (திருத்தச்) சட்ட மூலம் தயாரிக்கப்பட்டுள்ளது.

இதனை அரச வர்த்தமானியில் பிரசுரிப்பதற்கும், பின்னர் அனுமதிக்காக நாடாளுமன்றத்தில்சமர்ப்பிப்பதற்கும், அமைச்சரவை அனுமதியளித்துள்ளது.

அமைச்சர் விஜயதாச ராஜபக்ஷவினால் இந்த யோசனை முன்வைக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது.

## நல்லிணக்கத்தைக் குழப்பவே வடமாகாணத்தில் வன்முறைகள்

### அமைச்சரவைப் பேச்சாளர் தெரிவிப்பு

கொழும்பு, ஓக.03

வடமாகாணத்தில் அண்மைக்காலமாக இடம்பெறுகின்ற வன்முறை சம்பவங்களின் பின்னணியில், நல்லிணக்கத்தை குழப்பும் எண்ணமே இருக்கிறது எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அமைச்சரவைத் தீர்மானங்களை வெளியிடும் ஊடக சந்திப்பில் வைத்து அமைச்சர் தயாசிறி ஜெயசேகர இதனை நேற்றுத் தெரிவித்துள்ளார்.

வடக்கில் செயற்படும் அடிப்படைவாதிகளைப் போன்று ஏனைய அடிப்படைவாதிகளுக்கும் நாடு வன்முறையுடன் தொடர வேண்டும் என்ற எண்ணம் உள்ளது.

இந்த பிண்ணனியிலேயே வன்முறைகள் ஏற்படுத்தப்படுகின்றன என்று அவர் குறிப்பிட்டுள்ளார்.

## குளவி கொட்டியதால் 38 பேர் பொகவந்தலாவையில் பாதிப்பு

கொழும்பு, ஓக.03

பொகவந்தலாவை - கொக்கஸ்வோல்ட் மத்திய பிரிவு தோட்டத்தில் கொழுந்து பறித்துக் கொண்டிருந்த 38 பேர் குளவி கொட்டுக்கு இலக்காகி பொகவந்தலாவை பிரதேச வைத்திய சாலையில் அனுமதிக்கபட்டுள்ளனர் எனப் பொகவந்தலாவ பொலிஸார் தெரிவித்தனர்.

இந்த சம்பவம் நேற்று முன்தினம் செவ்வாய்க்கிழமை பிற்பகல் இடம்பெற்றது எனப்பொலிஸார் தெரிவித்தனர்.

பொகவந்தலாவ கொக்கஸ் வோல்ட் இல. 02 தமிழ் வித்தியாலயத்தில் பணிபுரியும் ஆசிரியர் ஒருவரும் இதில் உள்ளடங்குகிறார் என வைத்தியசாலையின் பேச்சாளர் தெரிவித்தார்.

குளவிக் கொட்டுக்கு இலக்கான 38 பேரில் 08 பெண்தொழிலாளர்கள் சிகிச்சை பெற்று வீடு திரும்பினர் எனவும் ஆசிரியர் மற்றும் 29 பெண் தொழிலாளர்கள் மொத்தம் 30 பேர் தங்கி சிகிச்சை பெற்று வருகின்றனர் எனவும் வைத்தியசாலையின் பேச்சாளர் மேலும் தெரிவித்தார்.

தேயிலை மலையின் அடிப் பகுதியில் இருந்த குளவிக் கூட்டில் இருந்த குளவிகள் கலைந்து வந்து தாக்கியமையினால் இந்த அனர்த்தம் ஏற்பட்டது எனவும் பாதிப்புக்குள்ளான தொழிலாளர்களில் எவரினது நிலைமையும் மோசம் இல்லையென வும் தெரிவிக்கப்படுகின்றது.

## மட்டு. விபத்தில் இளைஞன் பலி

மட்டக்களப்பு பிள்ளையாரடியில், நேற்றுமுன்தினம் நள்ளிரவு இடம்பெற்ற விபத்தில் கும்புறுமூலையைச் சேர்ந்த பி.நிசாந்தன் (28 வயது) என்ற இளைஞன் உயிரிழந்துள்ளார்.

இவர் கும்புறுமூலையிலிருந்து மட்டக்களப்பு நோக்கி, மோட்டார் சைக்கிளை மிகவும் வேகமாகச் செலுத்தி வந்த வேளை, வீதியில் நின்ற மாட்டுடன் மோதி, இவ்விபத்துச் சம்பவித்துள்ளதாக, மட்டக்களப்புப் பொலிஸார் தெரிவித்தனர். இந்தச் சம்பவத்தில்மாடும்உயிரிழந்துள்ளது.

## நம்ப...

(18ஆம் பக்கத் தொடர்ச்சி)

முறித்துக் கொண்டால் நாங்கள் தனிமைப்படுத்தப்பட்டுவிடுவோம்.

ஏனெனில் இன்றைக்கு எமக்கு இருக்கின்ற சர்வதேச ஆதரவும் சர்வதேச தலையீடும் எப்போதும் இருக்குமென்று நம்ப முடியாது. ஆகவே இருக்கின்ற ஆதரவுடன் கிடைத்திருக்கின்ற சந்தர்ப்பத்தை நாம் சரியான வழியில் பயன்படுத்திக் கொண்டு இந்த முயற்சியில் வெற்றி பெற வேண்டும்.

அவ்வாறுநாம்வெற்றிபெறும் வரைக்கும் அரசியல் சாணக்கியத்துடன் நிதானமாகவும் அதே நேரம் கவனமாகவும் சர்வதேசத்தை அணைத்துக் கொண்டு செயற்பட வேண்டும். ஓர் எல்லை வரைக்கும் நாம் இதனையே மேற்கொண்டு வருகின்றோம். மக்கள் எமக்கு தந்த ஆணையும் அதுதான். அந்த அடிப்படையில் நாம் தொடர்ந்தும் பயணிப்போம். - என்றார்.

## முன்னாள் கடற்படைப் பேச்சாளர் தொடர்ந்தும் விளக்கமறியலில்!

கொழும்பு, ஓக.03

முன்னாள் கடற்படை ஊடகப் பேச்சாளர் கொமாண்டர் டீ.கே.பி. தசநாயக்க உள்ளிட்ட 6 பேரை எதிர்வரும் 10 ஆம் திகதி வரை தொடர்ந்தும் விளக்கமறியலில் வைக்குமாறு கொழும்புக்கோட்டை நீதிவான் நீதிமன்றம் உத்தரவிட்டுள்ளது.

2008 ஆம், 2009 ஆம் ஆண்டுகளில் கொழும்பு மற்றும் அதன் புறநகர்ப் பகுதிகளில் 11 தமிழ், முஸ்லிம் இளைஞர்கள் காணாமல்போன சம்பவம் தொடர்பிலேயே இவர்கள் கைது செய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தனர்.

இந்த வழக்கு நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்ட போதே விளக்கமறியல் நீடிப்பு உத்தரவு பிறப்பிக்கப்பட்டது.

மேலும் இந்தச் சம்பவத்துடன் தொடர்புடைய - இதுவரை கைது செய்யப்படாத - அனைவரையும் பாரபட்சம் பாராது கைது செய்து நீதிமன்றில் முன்னிலைப்படுத்துமாறு கொழும்பு கோட்டை நீதிவான் நீதிமன்றம் குற்றப் புலனாய்வுப் பிரிவினருக்கு உத்தரவிட்டது.

இதேவேளை, நேற்று வழக்குத் தவணைக்கு முன்னாள் கடற்படை பேச்சாளர் உடல்நிலை சரியின்மை காரணமாக சமுகமளித்திருக்கவில்லை. அவரின் உடல் நிலை தொடர்பான மருத்து அறிக்கை நீதிமன்றில் சமர்ப்பிக்கப்பட்டமை குறிப்பிடத்தக்கது. (உ)

### ராஜீவ் கொலை வழக்கில் 25 ஆண்டுகள் சிறையிருக்கும்

## பேரறிவாளன் விரைவில் 'பரோலில்' விடுவிப்பு?

### சட்டத்துறை முதல்வருக்கு சிபார்சு



முன்னாள் இந்திய பிரதமர் ராஜீவ்காந்தி கொலை வழக்கில் சிறையில் உள்ள பேரறிவாளனை பரோலில் விடுவிக்க சட்டத்தில் எந்தத் தடையும் இல்லை என தமிழக முதலமைச்சருக்கு தெரிவிக்கப்பட்டுள்ளதாக தமிழக சட்டத்துறை அமைச்சர் சி.வி.சண்முகம் கூறியுள்ளார்.

பேரறிவாளன் உள்ளிட்டவர்கள் கடந்த 25 ஆண்டுகளாக சிறையில் அடைக்கப்பட்டுள்ள நிலையில் பேரறிவாளனை சிறையில் இருந்து பரோலில் விடுவிக்குமாறு அவரது தாய் அற்புதம்மாள் தொடர்ந்து கோரிக்கை விடுத்து வருகிறார். அண்மையில் இந்த விவகாரம் தொடர்பாக தமிழக சட்டப்பேரவையிலும் வலியுறுத்தப்பட்டது.

இந்நிலையில், நேற்றுமுன்தினம் செய்தியாளர்களைச் சந்தித்த சட்ட அமைச்சர் சி.வி.சண்முகம் பேரறிவாளனை பரோலில் விடுவிப்பது தொடர்பாக சட்டத்துறையின் கருத்தைக் கேட்டு அதன் மீது நடவடிக்கை எடுக்கப்படும் என பேரவையில் முதலமைச்சர் பழனிசாமி அறிவித்திருந்தார் எனவும் பேரறிவாளனை பரோலில் விடுவிக்க சட்டத்தில் எந்த தடையும் இல்லை எனவும் தெரிவித்துள்ளார்.

மேலும் விடுதலை செய்வதற்கான நடவடிக்கையை எடுக்கலாமென என்று சட்டத்துறை சார்பில் பரிந்துரைத்துள்ளதாகவும் இந்த கோப்புகளின் அடிப்படையில் முதலமைச்சர் நல்ல முடிவு எடுப்பார் என்று எதிர்பார்ப்பதாகவும் தெரிவித்துள்ளார்.




உங்கள் எதிர்காலத் திட்டம் எதுவாயினும் உங்கள் ஒளிமயமான வாழ்வுக்குக் கைகொடுக்க நாம் தயார்....

கல்வி ★ வேலைவாய்ப்பு ★ வெளிநாடு

- சிறந்த உயர்தர கல்வி வழிகாட்டலை பெற,
- தகுதிக்கேற்ப விரும்பிய வேலைவாய்ப்பு பெற,
- கனவு நாட்டினை நேர்மையான முறையில் சென்றடைய

எதுவாக இருந்தாலும் எம் இளஞ் சந்ததியின் கலங்கரை விளக்காக விளங்கும் WINSTAR CONSULTANTS உடன் தொடர்பு கொள்ளுங்கள்

Plan your bright future with us.
WINSTAR CONSULTANTS
106, தபார் பெட்டி சந்தி, பலாலி வீதி,திருநெல்வேலி, யாழ்ப்பாணம்.
தொ.பே.021 320 2789

# நமது பார்வை

உண்மை - நேர்மை - பக்கம் சாராமை

ஆசிரியபீடம்: 30, கல்லூரி வீதி, யாழ்ப்பாணம்
செய்தி: 021 222 3000, kalaikkathirnews@gmail.com
தொலைநகல் (fax) : 021 221 9440, ads@kalaikkathir.lk
விளம்பரம்/விநியோகம்: 021 222 2600

## பிரசாரங்களின் பின்னணியில்...!

யாழ்ப்பாணத்தில் நடைபெற்ற இரு வன்முறைச் சம்பவங்களை வைத்துக் கொண்டு, இங்கு மீண்டும் 'பயங்கரவாதம்' தலைதூக்கி விட்டது போன்ற ஒரு பிரமையை நாடு முழுவதிலும், சர்வதேச மட்டத்திலும் ஏற்படுத்துவதற்கான முயற்சிகள் தாராளமாகவே நடைபெறுகின்றன போலவே தென்படுகின்றது.

இந்தச் சம்பவங்களை அடுத்து பொலிஸ் மா அதிபர் பூஜித ஜெய சுந்தர இங்கு விழுந்தடித்து வந்து நடத்திய சந்திப்புகள், கூட்டங்கள், அந்தக் கூட்டங்களில் அவர் ஆற்றிய உரைகள் எல்லாமே அத்தகைய ஒரு முயற்சியின் அங்கங்களோ என்றே சந்தேகிக்கப் பட வைக்கின்றன.

இந்த இரு சம்பவங்களையும் வைத்துக் கொண்டு, அவற்றுக்குக் காரணம் முன்னாள் போராளிகள் என்று தீவிரப் பிரசாரத்தை முன்னெடுப்பதும் -

புனர்வாழ்வு அளிக்கப்பட்டு, விடுவிக்கப்பட்டு, சமூகத்தில் மதிப்பு, மரியாதையுடன் வாழ்ந்து கொண்டிருப்பவருக்கு யுத்த கால நடவடிக்கைக்காகத் தனது நீதிமன்றம் மூலம் ஆயுள் தண்டனை விதிக்கச் செய்வதும் -

பயங்கரவாத விதை எங்கோ முளைக்கின்றது என நாட்டின் பொலிஸ் தலைமை அதிகாரியான பொலிஸ் மா அதிபரே யாழ்ப்பாணத்தில் இருந்து கொண்டு அறிவிப்பு விடுவதும் -

இந்த நடவடிக்கைகளைக் கட்டுப்படுத்துவதற்காக முப்படைகளையும் வடக்கில் களமிறக்குவதற்கு ஜனாதிபதி அனுமதி அளித்துள்ளார் என்ற சாரப்பட பொலிஸ் மா அதிபர் ஊடகங்களுக்குத் தெரிவிப்பதும் -

'யாழ்ப்பாணத்தில் இப்போது நடப்பது ஆரம்பம்தான். இனி மேல் போகப் போக இன்னும் நடக்கும்' என்று முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ எச்சரிக்கை விடுப்பதும் -

சில செய்திகளையும், ஊகங்களையும் எச்சரிக்கைகளையும் தமிழர் தரப்புக்குத் தருவனவாகவே இருக்கின்றன.

இங்கு ஏதோ 'பயங்கரவாதம்' தலைதூக்கி விட்டதாகக் காட்டி, முப்படைகளை மீண்டும் களத்தில் இறக்கப் போவதான செய்திகளை மும்முரமாக முன்னெடுக்கின்றமை இருக்கின்ற படைகளைக் குறைத்து, இராணுவத்தினரைவிலக்கிக் கொள்கின்ற செயற்பாட்டைச் செய்யாமல் தவிர்ப்பதற்கான ஓர் எத்தனமாகக் காட்டப்படுகின்றது. நல்லாட்சி அரசுத் தரப்பில் ஐ.தே.கட்சியுடன் கூட்டுச் சேர்ந்துள்ள ஸ்ரீலங்கா சுதந்திரக் கட்சி இப்படி ஒரு நொண்டிச்சாட்டை ஏற்கனவே முன்வைக்கத் தொடங்கிவிட்டது.

ஏற்கனவே படைக்குறைப்பு, இராணுவத்தை பொதுமக்களின் காணிகளில் இருந்து விலக்கிக் கொள்ளல் ஆகிய விடயங்களில் ஐ.நா.மனித உரிமைகள் கவுன்ஸிலின் அடுத்தடுத்த தீர்மானங்கள் உட்பட பலத்த சர்வதேச வியூகங்களுக்குள் மாட்டியுள்ள கொழும்பு அரசு, அதிலிருந்து தற்காலிகமாகவேனும் தப்புவதற்கு - இல்லையேல் நேரத்தை மேலும் இழுத்தடித்து கால அவகாசம் பெறுவதற்கு - இந்தப் 'பயங்கரவாத விதை எங்கோ முளைத்துக் கொண்டிருக்கின்றது' என்ற கதை உதவும் என கொழும்பு எதிர்பார்க்கின்றது போலும்.

அதேசமயம், புனர்வாழ்வளிக்கப்பட்டு, விடுவிக்கப்பட்டவர்கள் என்று கூறப்படும் பன்னீராயிரம் முன்னாள் போராளிகள் உட்பட பல்லாயிரம் முன்னாள் போராளிகள் இன்று சமூகத்துக்குள் அமைதியான வாழ்க்கை வாழ்ந்து வருகின்றார்கள்.

வடக்கு மாகாண எதிர்க்கட்சித் தலைவர் சி.தவராசா கூறுகின்றமைபோல, விரல்விட்டு எண்ணக்கூடிய ஒரு சிலரின் செயற்பாட்டை வைத்துக்கொண்டு, அவர்கள் அனைவருக்கும் அவதூறும், நெருக்கடியும், சிக்கலும், அழுத்தமும் கொடுக்கும் வகையில் தெற்கிலிருந்து கருத்துகள் எழுவது கண்டிக்கத்தக்கதாகும்.

இலங்கையின் பொலிஸ் துறையை எடுத்துக் கொண்டால் அதன் தலைவர் பொலிஸ் மா அதிபர். அவருக்குக் கீழ் சில டசின் பிரதிப் பொலிஸ் மா அதிபர்கள் இருப்பார்கள். அப்படியானவர்களில் மூவர் கிரிமினல் குற்ற விவகாரங்களை எதிர்கொண்டு சிக்கலில் உள்ளனர். ஒருவர் மோசமான கிரிமினல் குற்றத்துக்காக சிறைத் தண்டனையை எதிர்கொண்டிருக்கின்றார். இன்னொருவர் பிணையில் நிற்கின்றார். மூன்றாமவர் விளக்கமறியலில் உள்ளார். இந்த மூன்று உயரதிகாரிகளும் கிரிமினல் குற்றங்களுடன் தொடர்புபட்டிருக்கின்றமையால் முழு பொலிஸ் திணைக்களத்தையும் அவதூறு செய்யும் விதத்தில் கருத்து வெளியிடலாமா என மாகாண எதிர்க்கட்சித் தலைவர் தவராசா கேட்பது சரியானதே.

வடக்குச் சம்பவங்கள் குறித்து முன்னெடுக்கப்படும் இத்தகையை போலியான பிரசாரங்களின் பின்னால் - தமிழர் தாயகத்தில் மீண்டும் படைகளைக் குவித்தல், படை விலக்கலுக்கான சர்வதேச அழுத்தத்தைச் சமாளித்தல், நிரந்தரமாகத் தமிழர் தாயகத்தில் பெரும் படை நிலை கொள்வதை உறுதிப்படுத்தல், தேசிய இனப்பிரச்சினைக்கு நியாயமான ஒரு தீர்வைக் கண்டு தமிழருக்கு நீதி செய்வதை முன்னெடுக்காமல் தவிர்த்தல், முன்னாள் போராளிகளை நெருக்கடிக்குள் தள்ளி, அவர்கள் மீதான கண்காணிப்பைத் தீவிரப்படுத்தலும் அதை நியாயப்படுத்தலும் - போன்ற பல காரணங்கள் இருக்கின்றன என்றே தோன்றுகின்றது.

## அத்தியாவசிய பொருள்களுக்கான வரி குறைப்பு உரிய முறையில் மக்களைச் சென்றடைவதில்லை

### நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் சுட்டிக்காட்டு

கொழும்பு, ஒக 03

அத்தியாவசிய பொருள்களுக்கான வரி குறைப்பானது உரிய முறையில் மக்களை சென்றடைவதற்கான முறை ஒன்றை மேற்கொள்ளுமாறு நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் வேண்டுகோள் விடுத்துள்ளது.

நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம், நிதிஅமைச்சர் மங்கள சமரவீரவுக்கு அனுப்பியுள்ள கடிதத்திலேயே இந்த வேண்டுகோள் விடுக்கப்பட்டுள்ளது.

வரிகள் குறைக்கப்படும் வேளையில் வியாபாரிகள் அதனைச் சரியான முறையில் நடைமுறைப்படுத்துவதில்லை என்றும், நுகர்வோர் அதிகார சபை இது தொடர்பில் நடவடிக்கை எடுக்கும் என்று சிறிதும் நம்பிக்கை இல்லை என்றும் அந்தக் கடிதத்தில் சுட்டிக் காட்டப்பட்டுள்ளது.

இதேவேளை, அத்தியாவசியப் பொருள்களுக்கான வரி குறைக்கப்பட்டமைக்கு நுகர்வோர் உரிமைகள் பாதுகாப்புக்கான தேசிய இயக்கம் நன்றியைத் தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

(க)

## இலத்திரனியல் கடவுச்சீட்டை அறிமுகப்படுத்த நடவடிக்கை

கொழும்பு, ஒக 03

இலங்கை பிரஜைகளுக்கு இலத்திரனியல் வெளிநாட்டு கடவுச்சீட்டு ஒன்றை அறிமுகம் செய்வது தொடர்பிலான நடவடிக்கைகள் ஆரம்பிக்கப்பட்டுள்ளன.

இதன்கீழ் அனைத்து வகை தகவல்களையும் உள் ளடக்கிய சிம் அட்டை வடிவிலான இலத்திரனியல் மாதிரி ஒன்று வெளியிடப்பட உள்ளது.

அதனடிப்படையில் இலத்திரனியல் வெளி நாட்டு பயணக் கடவுச் சீட்டை அறிமுகப் படுத்தல் மற்றும் வெளியிடல் வேலைத்திட்டத்தை முறையான ஆய்வின் பின்னர் அரச மற்றும் தனியார் இணைப்பின் கீழ் செயற்படுத்துவது தொடர்பான யோசனை முன் வைக்கப்பட்டுள்ளது.

உள்நாட்டலுவல்கள் அமைச்சர் எஸ்.பி. நாவின்ன மற்றும் தொலைத்தொடர்பு, டிஜிட்டல் உட்கட்டமைப்புகள் அமைச்சர் ஹரின் பெர்ணான்டோ ஆகியோர் இணைந்து இந்த யோசனையை முன்வைத்துள்ளனர்.

மேலும், இந்த யோசனைக்கு அமைச்சரவையின் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது.

## நல்லூரானைத் தரிசிக்க வரும் அடியார்களுக்கு அறிவுரைகள்

### மாநகர சபையினரால் வழங்கல்

யாழ்ப்பாணம், ஒக.03

நல்லூர் ஆலயச் சூழலில் அடியார்கள் ஒழுக்கத்தைப் பேணுமாறும் சுகாதார முறைகளைக் கைக்கொள்ளுமாறும் காலாசார விழுமியங்களைக் கடைப்பிடிக்குமாறும் யாழ். மாநகர சபையினர் வேண்டுகோள் விடுத்துள்ளனர்.

இது தொடர்பில் சபையினர் வெளியிட்டுள்ள செய்திக் குறிப்பில் -

★நல்லூர்க்கந்தன் ஆலயத்தின் உள்வீதியும் வெளிவீதியும் அடியவர்களின் தியான பூமியாகும். அவற்றின் அமைதியைப் பேணி பக்தர்களுக்கு உதவி புரியுங்கள்.

★ஆலயச் சூழலில் பாதணிகளுடன் செல்வதைக் கண்டிப்பாகத் தவிர்த்துக் கொள்ளவும்.

★ நல்லூர்க் கந்தனின் திருவிழாவுக்கு வருகை தரும் அடியார்கள் இலங்கைக்கான கலாசார உடையணிந்து எமது சமய, சமுதாய விழுமியங்களைக் கடைப்பிடித்து ஆன்மீக உணர்வை மேம்படுத்த உதவிடுவீர்.

★ முருகப்பெருமானின் பெரும் புகழைப் பாடிப் பணிதலின்றி வேறு செயல்களை ஆலயத்துக்குள்ளும், ஆலயச் சூழலிலும் தவிர்த்துக் கொள்ளுங்கள்.

★வெண்மணல் பரப்பிய வீதியிலே அடியவர்கள் அங்கப்பிரதட்சணம், அடியழித்தல் செய்வதனால் கழிவுப் பொருள்களை குப்பைத் தொட்டியிலிட்டு வீதியைச் சுத்தமாக வைத்திருக்க உதவிடுவீர்.

★அடியார்கள் இறைசிந்தனையுடன் மனதை ஒரு நிலைப் படுத்தி வணங்குவதற்கு ஏதுவாக ஆலயச்சூழலில் உணவகங்கள், ஒலிபெருக்கிகள், உணவு தயாரிக்கும்போது ஏற்படும் ஒலிகள் என்பவற்றைக் கட்டுப்படுத்தி அமைதியைக் காத்திடுவீர்.

★ஆலய வெளிவீதியில் புனிதம் பேணும் பொருட்டு விளம்பர பாதகைகள் அமைப்பதையும் அலங்கார விளக்குகள் அமைத்துக் காட்சிப்படுத்துவதும் தவிர்க்கப்படல் வேண்டும்.

★ஆலயச் சூழலில் மாமிச உணவு, மதுபானம், புகைப்பிடித்தல் என்பன தவிர்க்கப்படல் வேண்டும்.

★தேர், தீர்த்தம் ஆகிய திருவிழா நாள்களில் தூக்குக் காவடி நேர்த்திக் கடன் செய்வோர் சுவாமி இருப்பிடத்துக்குச் சென்ற பின்னர் வீதித் தடையினூடாகச் செல்ல முடியும். ஆதலால், தூக்குக் காவடி நேர்த்திக் கடன் செய்யும் அடியார்கள் நேரத்தைக் கவனத்திற்கொண்டு அதனால் ஏற்படும் காலதாமதங்களைத் தவிர்த்துக் கொள்ள முடியும் என்றுள்ளது.

(இ)

## நல்லூரில் இன்று முதல் இராமகிருஷ்ண மிஷன் புத்தகக் கண்காட்சி

உரும்பிராயில் இயங்கி வரும் இராமகிருஷ்ண மிஷனின் ஏற்பாட்டில் நல்லூர் ஆலய பின்புற வீதியிலுள்ள மூத்ததம்பி அன்னதான மண்டபத்தில் இன்று வியாழன் முதல் 23 ஆம் திகதி வரை தினமும் மாலை 4 மணி முதல் 8 மணி வரை -

புத்தக கண்காட்சியும் விற்பனையும் இடம் பெறும் என்று அறிவிக்கப் பட்டுள்ளது.

வருடம் தோறும் நல்லூர் உற்சவ காலத்தில் நடத்தப்படும் இக் கண்காட்சியிலும் விற்பனையில் சிறியோர் முதல் பெரியோர் வரை அனைவருக்குமான ஆன்மீக, யோகாசனம் தொடர்பான பல நூல்கள் உள்ளன என்றும் அனைவரையும் வந்து பார்வையிட்டு பயன் பெறுமாறும் மிஷனின் நிகழ்ச்சி ஒருங்கிணைப்பாளர் அழைப்பு விடுத்துள்ளார். (இ)

ஆரோக்கிய வாழ்க்கை முறை மூலம் தொற்றா நோய்களை தூர விரட்டுவோம்!

தொடர்பாடல், ஊடகங்களில் விளம்பரப்படுத்தப்படும் இனிப்பூட்டிய பானங்கள் மற்றும் உணவு பற்றி விவேகத்துடன் முடிவு எடுப்போம்.



தகவல்:- சுகாதார வைத்திய அதிகாரி பணிமனை. யாழ்.மாநகரசபை.

### நாளை

04.08.2017
வெள்ளிக்கிழமை

நட்சத்திரம் : மூலம் மு.இ 10.50 வரை
திதி : துவாதசி மு.இ 8.04 வரை
சுபநேரம் : 6.04 – 7.34 வரை
இராகுகாலம் : 10.34 – 12.04 வரை

காலைக்கதிர்
Kalaikkathir



## லஹிரு வீரசேகரவின் விளக்கமறியல் நீடிப்பு!

அனைத்து பல்கலைக் கழக மாணவர் ஒன்றியத்தின் ஒருங்கிணைப்பாளர் லஹிரு வீரசேகர உட்பட 5 மாணவர்களை எதிர்வரும் 8 ஆம் திகதி வரை விளக்கமறியலில்வைக்குமாறு மாளிகாகந்தை நீதிவான் நீதிமன்றம் நேற்று உத்தரவிட்டுள்ளது.

கொழும்பில் அண்மையில் நடைபெற்ற சைட்டம் எதிர்ப்பு ஆர்ப்பாட்டப் பேரணியின் போது சுகாதார அமைச்சுக்குள் பலவந்தமாக நுழைந்து அங்கிருந்த பொதுச் சொத்துக்களுக்கு சேதம் ஏற்படுத்திய குற்றச்சாட்டில் இவர்கள் கைது செய்யப்பட்டனர்.

பொதுச் சொத்துக்கள் சட்டத்தின் கீழ் இவர்களுக்கு எதிராக வழக்கு தாக்கல் செய்ய உள்ளதாக பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

# குடாநாட்டில் 1,000 சிறப்பு அதிரடிப் படையினர்; புலனாய்வுப் பிரிவு செயற்பாடுகளும் அதிகரிப்பு!

கொழும்பு, ஓக. 03

யாழ். குடாநாட்டில் வன்முறைகளைக் கட்டுப்பாட்டில் கொண்டு வரும் பொறுப்பு சிறப்பு அதிரடிப் படையினரிடம் கையளிக்கப்பட்டுள்ளது என சிங்கள நாளிதழ் ஒன்று செய்தி வெளியிட்டுள்ளது.

வடக்கில் பாதுகாப்பை உறுதிப்படுத்துவதற்காக, 1,000 இற்கும் அதிகமான சிறப்பு அதிரடிப்படையினர் நிறுத்தப்பட்டுள்ளனர்.

சிறப்பு அதிரடிப்படையினர் குழுக்களாக ரோந்து, உந்துருளி ரோந்து, சோதனை போன்றவற்றில் ஈடுபட்டு வருகின்றனர்.

இவர்கள் இரவில் மாத்திரம் பாதுகாப்பு நடவடிக்கைகளில் ஈடுபட்டு வந்தனர், அண்மையில் குடாநாட்டில் இடம்பெற்ற சில சம்பவங்களை அடுத்து, நாள் முழுவதிலும் சிறப்பு அதிரடிப் படையினர்பாதுகாப்புப் பணிகளில் ஈடுபட்டு வருகின்றனர் என அதிகாரி ஒருவர் தெரிவித்துள்ளார்.



சிறப்பு அதிரடிப்படைக்கு மேலதிகமாக சிறப்புப் பொலிஸ் குழுக்களும் யாழ்ப்பாணத்தில் பாதுகாப்புப் பணியில் ஈடுபடுத்தப்பட்டுள்ளன.

வன்முறைகள் தொடர்பான தகவல்களைத் திரட்டுவதற்காக, புலனாய்வுப் பிரிவுகளை வலுப்படுத்துவதற்கான நடவடிக்கைகளையும் பொலிஸ் தலைமையகம் மேற்கொண்டுள்ளது.

இதற்கென பொலிஸ் புலனாய்வுக் குழுக்கள் யாழ்ப்பாணத்துக்கு அனுப்பி வைக்கப்பட்டுள்ளன என்றும் அந்தச் செய்தியில் கூறப்பட்டுள்ளது.

## டெங்கில் பலியானவர்களின் எண்ணிக்கை 327 ஆக அதிகரிப்பு!

கொழும்பு, ஓக. 03

டெங்கு நோய் காரணமாக இந்த ஆண்டில் பலியானவர்களின் எண்ணிக்கை 327 ஆக அதிகரித்துள்ளது என சுகாதார அமைச்சு தொற்று நோய்த் தடுப்புப் பிரிவு தகவல் வெளியிட்டுள்ளது.

இந்த நிலையில், ஆண்டின் கடந்த ஜூலை மாதம் வரையான காலப் பகுதியில் டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களின் எண்ணிக்கை ஒரு லட்சத்துக்கு 15 ஆயிரத்து 605 ஆக அதிகரித்துள்ளது.

டெங்கு நோயால் பாதிக்கப்பட்டவர்களில் 30 வீதமானோர் 5 முதல் 19வயது வரையானமாணவர்கள் என்றும் சுகாதார அமைச்சின் தொற்று நோய் கட்டுப்பாட்டுப் பிரிவு தெரிவித்துள்ளது. (க)

# ரஷ்யா வழங்கிய புராதன வாள் தற்போது அருங் காட்சியகத்தில்!

### ஜனாதிபதி மைத்திரியால் ஒப்படைப்பு



கொழும்பு, ஓக. 03

அண்மையில் ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேனவிற்கு, ரஷ்ய ஜனாதிபதி விளாடிமிர் புட்டின் வழங்கிய நினைவுச் சின்னம், அருங்காட்சியகத்திடம் ஒப்படைக்கப்பட்டுள்ளது.

ரஷ்யாவிற்கு விஜயம் செய்திருந்த இலங்கை ஜனாதிபதிக்கு, ரஷ்ய ஜனாதிபதி புட்டின் புராதன வாள் ஒன்றை நினைவுச் சின்னமாக வழங்கியிருந்தார்.

இந்த வாளை தேசிய உரிமைப் பொருள்களில் ஒன்றாக பிரகடனம் செய்ய ஜனாதிபதி தீர்மானித்துள்ளார்.

இந்த புராதன வாளை அருங்காட்சியகத்திடம் ஒப்படைக்கும் நிகழ்வு நேற்று தேசிய அருங்காட்சியக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன, அமைச்சர் எஸ்.பி. நாவின்ன, பிரதி அமைச்சர் பாலித தேவரப் பெரும ஆகியோர் இந்த நிகழ்வில் பங்கேற்றிருந்தனர்.

# தொழிற்சங்கங்களின் குறுகிய நோக்கங்களுக்கான போராட்டங்களை நடத்தும் தரப்பை தடுக்க அரசு திட்டம்

குறுகிய நோக்கங்களுக்காக போராட்டங்களை நடத்தும் தரப்புக்களைத் தடுக்க அரசு திட்டமிட்டுள்ளது.

அரசியல் கட்சிகள் மற்றும் வேறும் தொழிற்சங்கங்களின் குறுகிய அரசியல் நோக்கத்தை பூர்த்தி செய்து கொள்வதற்காக சில தரப்பினர் போராட்டங்களை நடத்தி வருகின்றனர் என அமைச்சர் மஹிந்த சமரசிங்க தெரிவித்துள்ளார்.

கொழும்பில் நேற்றுமுன்தினம் நடைபெற்ற ஊடகவியலாளர் சந்திப்பில் அவர் இதனைத் தெரிவித்துள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

இந்தப் போராட்டங்களின் முதன்மை நோக்கம் அரசை நெருக்கடியில் சிக்க வைப்பதைத் தவிர வேறு ஒன்றுமில்லை.இவ்வாறு குறுகிய நோக்கங் களின் அடிப்படையில் மேற்கொள்ளப்படும் தொழிற்சங்கப் போராட்டங்களைத் தடுக்க அரசு நடவடிக்கை எடுக்கும். குறுகிய அரசியல் நோக்கங்களின் அடிப்படையில் முன்னெடுக்கப்படும் போராட்டங்கள், நாட்டு மக்களுக்காக நிறுத்தப்பட வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# அம்பாந்தோட்டைத் துறைமுக உடன்படிக்கை: தம்மிடம் பதில் இல்லை என்கிறார் சீனத் தூதுவர்!

அம்பாந்தோட்டைத்துறைமுகத்தை சீன நிறுவனம் குத்தகைக்குபெற்றுக் கொண்டமை தொடர்பாக தம்மிடம் பதில் இல்லை என இலங்கைக்கான சீன தூதுவர் யி சியாலியாங் தெரிவித்துள்ளார்.

கொழும்பில் இடம்பெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

சீன நிறுவனமான சீன மேச்சன்ட் போர்ட் ஹோல்டிங் நிறுவனத்துக்கும் இலங்கை துறைமுக அதிகாரசபைக்கும் இடையிலான வர்த்தக தொடர்பே இதுவாகும்.

ஏற்கனவே சீன நிறுவனம் அம்பாந்தோட்டைத் துறைமுகத்தின் நிர்மாணத்துக்காக 150 கோடி டொலர்களை செலவிட்டுள்ளது.

இந்த நிலையில், ஏன் சீன நிறுவனம் மேலதிகமாக 60 கோடி டொலர்களைச் செலவிடவுள்ளது என்று பலரும் கேட்கின்றனர்.

எனினும், இதற்கு தம்மிடம் பதில் இல்லை. இது ஒரு வர்த்தக விடயமாகும்.

இதேவேளை, சீனாவுக்கு மீள்செலுத்தவேண்டிய கடன் தவணைக் கட்டணங்களை இலங்கை உரியமுறையில் செலுத்தி வருகிறது. எனவே, இலங்கைக்கு சீனா தொடர்ந்தும் உதவும் என்றும் சீனத் தூதுவர் குறிப்பிட்டுள்ளார்.

# அமைதிகாக்கும் பணிக்காக மாலி செல்லும் இராணுவத்துக்கான போர்க் கருவிகள் தயார்!

### பார்வையிட்டார் இராணுவத் தளபதி மகேஷ்

அமைதிகாக்கும்பணிகளுக்காகமாலிநாட்டுற்கு செல்லும் இராணுவத்தினர்பயன் படுத்தக் கூடிய உபகரணங்கள் மற்றும் சுகாதாரக் கருவிகள் என்பனவற்றை இராணுவத் தளபதி லெப் டி னன்ட் ஜெனரல் மகேஷ் சேனநாயக்க பார்வையிட்டுள்ளார்.

பனாகொடை இராணுவ குடியிருப்பு வளாகத்தில் உள்ள இந்த உபகரணங்களை அவர் கடந்த திங்கட்கிழமை பார்வையிட்டுள்ளார்.

இராணுவத்தளபதிக்கு இராணுவ திட்டமிடல் பணிப்பாளர் பிரிகேடியர் டீ.டி.கமகே இந்த உபகரணங்கள் தொடர்பான மதிப்பீடு தொடர்பில் விளக்கியுள்ளார்.

அதனைத் தொடர்ந்து கேர்னல்ஜயசிங்க ஆய்வு தளத்தில் உள்ள உபகரணங்கள்மற்றும்கருவிகள் தொடர்பான விளக்கத்தையும் இராணுவத் தளபதி மற்றும் சிரேஷ்ட இராணுவஅதிகாரிகளுக்கு விளக்கியுள்ளார்.

கம்பட் வாகனங்கள், கண்ணிவெடி அகற்றும் மற்றும் வெடிக்கும் இராணுவத் தளவாடங்களின் சாதனங்கள் மற்றும் போர் கருவி உபகரணங்கள் இராணுவத் தளபதியின் பார்வைக்கு வைக்கப்பட்டன.

இதேவேளை, இந்த அமைதி காக்கும் பணிகளுக்காக எடுத்து செல்லும் வைத்திய உபகரணங்கள், அம்புலன்ஸ் வாகனங்களைநாரஹேன்பிட்டியில் அமைந்துள்ள இராணுவ வைத்தியசாலைக்கு சென்று இராணுவத் தளபதி பார்வையிட்டுள்ளார்.

இதன்போது இராணுவ வைத்திய பணிப்பாளர் மேஜர் ஜெனரல் சஞ்சீவ முனசிங்க, பிரிகேடியர் கமல் சுமணபால ஆகியோரும் இணைந்திருந்தனர். (க)

## ஜீ.சீ.ஈ. உயர் தர மாணவர்களுக்கு மேலதிக வகுப்புகள் நடத்தத் தடை!

கல்வி பொதுத்தராதர உயர்தர மாணவர்களுக்கான மேலதிக வகுப்புகள் மற்றும் கருத்தரங்குகளை நடத்த நேற்று நள்ளிரவு முதல் தடைவிதிக்கப்பட்டுள்ளது.

உயர்தர பரீட்சைகளை முன்னிட்டுத் தடை விதிக்கப்பட்டுள்ளது என பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சை எதிர்வரும் 8 ஆம் திகதி ஆரம்பித்து, செப்ரெம்பர் 2 ஆம் திகதி வரை இடம்பெறவுள்ளது.

இந்தநிலையில், உயர்தர பரீட்சைக்குத் தோற்றும் மாணவர்களுக்கானமேலதிக வகுப்புகள் மற்றும் கருத்தரங்களுக்குத் தடை விதிக்கப்பட்டுள்ளது.

இந்தத் தடைகளை மீறி செயற்படுவோர் தொடர்பில் முறையிடுமாறு பரீட்சைகள் திணைக்களம் அறிவுறுத்தியுள்ளது.

பொலிஸ் அவசர தொலைபேசி இலக்கமான 119 மற்றும் பரீட்சைகள் திணைக்களத்தின் உடனடி தொலைபேசி இலக்கமான 1911 அல்லது 0112784208 என்ற தொலைபேசி இலக்கத்திற்கோ முறைப்பாடு செய்யுமாறு பரீட்சைகள் திணைக்களம் அறிவித்துள்ளது.

# கிடைத்த சமாதானத்தை கண்மூடித்தனமாக பயன்படுத்துகின்ற சமூகமாக வடக்கு, கிழக்கு தமிழர்!

## வியாழேந்திரன் எம்.பி. காட்டம்

மட்டக்களப்பு, ஓக.03

கிடைக்கப்பெற்ற சமாதானத்தை கண்மூடித்தனமாகப் பயன்படுத்துகின்ற சமூகமாக வடக்கு, கிழக்கு தமிழ்ச் சமூகம் காணப்படுகின்றது என்று தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் வியாழேந்திரன் தெரிவித்துள்ளார்.

கல்குடா கல்வி வலயத்துக்கு உட்பட்ட வாழைச்சேனை நாசிவந்தீவு அரசினர் தமிழ்க் கலவன் பாடசாலையின் பரிசளிப்பு விழா வித்தியாலய அதிபர் ரீ.ஜெயப் பிரதீபன் தலைமையில் நேற்று முன்தினம் இடம்பெற்றது.

இந்த நிகழ்வில் பிரதம அதிதியாகக் கலந்து கொண்டு உரையாற்றும் போதே அவர் இவ்வாறு தெரிவித்துள்ளார். அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தமிழர்களாகிய நாம் இன்றைய சூழலில் யார் என்று கேள்வியைக் கேட்டால் நாம் அழிக்கப்பட்ட, ஒழிக்கப்பட்ட, காணாமலாக்கப்பட்ட சமூகத்தின் பிரதிநிதிகளாக இருக்கின்றோம்.



கல்வியால் வளர்ந்த, அடையாளப்படுத்தப்பட்ட சமூகம் தமிழ்ச் சமூகம். இந்த நாட்டில் மூன்று தசாப்தத்துக்கு முன்பு வடக்கு, கிழக்கில் மட்டுமல்ல இலங்கையின் சகல பாகங்களிலும் கல்வித்துறையில், அரச நிர்வாகத் துறையில் மிகப் பெரிய பதவியில் இருந்தவர்கள் தமிழர்கள்.

சாதாரண தரப் பரீட்சையில் கிழக்கு மாகாணம் ஒன்பதாவது இடத்தில் உள்ளது. இலங்கையிலுள்ள 98 கல்வி வலயங்களில் மட்டக்களப்பு, மண்முனை மேற்கு வலயம் கல்வியில் 98ஆவது இடத்தில் காணப்படுகின்றது.

போர்க்காலத்தில் பள்ளத்துக்குள்இருந்து,மண்ணெண்ணை விளக்கில் படித்த எங்களுக்குள் இருந்த கட்டுப் பாடு, ஒழுக்க விழு மியம், தமிழர் பண்பாடு, கல்வி ரீதியான முன்னேற்றம் முள்ளிவாய்க்காலில் ஈழப் போராட்டம் மௌனிக்கப்பட்ட பின் இன்று தலை கீழாக மாறியுள்ளது.

கிடைக்கப்பெற்ற சமாதானத்தை கண்மூடித்தனமாக பயன்படுத்துகின்ற சமூகமாக வடக்கு, கிழக்கு தமிழ்ச் சமூகம் காணப்படுகின்றது.

இழந்த பணத்தை சம்பாதிக்க முடியும், நாம் இழந்த காலத்தை சம்பாதிக்க முடியாது. எமது எதிர்காலத்தை நிகழ்காலத்தை எந்தவித திட்டமிடலும் இல்லாமல் பல இளைஞர்கள் தங்களுடைய வாழ்க்கையை சுதந்திரத்துக்குப் பின்பு வீணாகக் கழிக்கின்றார்கள்.

எதிர்கால சமூகத்தைக்காப்பாற்ற வேண்டிய பொறுப்பு ஒட்டு மொத்த சமூகத்தின் தலைமேல் உள்ளது என்பதை உணர்ந்து கொள்ள வேண்டும்.

கல்குடாவில் அமைக்கப்பட்ட 'எதெனோல்' தொழிற்சாலை இயங்கினால் இங்கிருந்து வரும் காபனீரொட்சைட் சுற்று வட்டாரத்தில் பரவி கண் பார்வை குறைவடையும் நிலைமை ஏற்படும்.

'எதனோல்' உற்பத்திக்கு தண்ணீர் எடுக்கும்போது கடல் தண்ணீர் இலகுவாக ஊருக்குள் வரும், பிரதேச குடிதண்ணீர் உவர் நீராக மாறுபடும். இதற்காகவே நாங்கள் வீதியில் இறங்கிப் போராடுகின்றோம்.- என்றார்.

## மட்டு.பட்டதாரிகள் வழக்கு நவ.6 இற்கு ஒத்திவைப்பு

மட்டக்களப்பு மாவட்ட வேலையற்ற பட்டதாரிகள் சங்கத் தலைவர் மற்றும் அகில இலங்கை ஒன்றிணைந்த வேலையற்ற பட்டதாரிகள் சங்க இணைப்பாளர் உட்பட நால்வர் மீது, மட்டக்களப்பு பொலிஸாரால் தாக்கல் செய்யப்பட்ட வழக்கு, எதிர் வரும் நவம்பர் மாதம் 6ஆம் திகதி வரை ஒத்தி வைக்கப்பட்டுள்ளது.

காந்திபூங்கா முன்பாக சத்தியாக்கிரகப் போராட்டத்தில் ஈடுபட்ட வேலையற்ற பட்டதாரிகள் நடத்திய கவனவீர்ப்புப்போராட்டத்தின் போது, மாவட்ட செயலகத்துக்கு முன்னால் நடைபெற்ற போராட்டத்தில், பொதுமக்களின் அமைதிக்கும் சமாதானத்துக்கும் பங்கம் ஏற்படுத்தும் வகையிலான செயற்பாடுகள், அரச கரும நடவடிக்கைகளுக்கும் குந்தகம் அல்லது இடையூறு ஏற்படுத்தும் வகையில் நடந்து கொள்ள முற்பட்டனர் என்று தெரிவிக்கப்பட்டு மட்டக்களப்பு நீதிவான் நீதிமன்றில், கடந்த மார்ச் மாதம் 7ஆம் திகதி இவ் வழக்குத் தாக்கல் செய்யப்பட்டிருந்தது.

இந்த வழக்கு, நீதிபதி எம்.கணேசராஜா முன்னிலையில், நேற்று மீண்டும் விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட்டது.

## காத்தான்குடியில் பாரம்பரிய உணவுக் கண்காட்சி



*மட்டக்களப்பு,ஓக.03*

*மட்டக்களப்பு மாவட்ட விவசாயத் திணைக்களத்தின் ஏற்பாட்டில் பாரம்பரிய உணவுக் கண்காட்சி, புதிய காத்தான்குடி கிழக்கு பலநோக்கு மண்டபத்தில், நேற்று முன்தினம் நடைபெற்றது.*

*இந்தப் பாரம்பரிய அரிசி உணவுகளின் கண்காட்சியில், அரிசி மாவால் செய்யப்பட்ட 42 வகையான உணவுகள் வைக் கப்பட்டிருந்தமையுடன், விற்பனையும் செய்யப்பட்டன.*

## அக்கரைப்பற்றில் யானை தாக்கி விவசாயி உயிரிழப்பு

அக்கரைப்பற்று பொலிஸ் பிரிவுக்குட்பட்ட அலிக்கம்பை வயல் பிரதேசத்தில் யானை தாக்கியதில் பரணில்(காவலரண்) உறக்கத்திலிருந்த விவசாயி ஒருவர், நேற்று அதிகாலை உயிரிழந்துள்ளார் என்று அக்கரைப்பற்று பொலிஸார் தெரிவித்தனர்.

ஆலையடிவேம்பு பிரதேச செயலகத்துக்கு உட்பட்ட கோளாவில் - 3 பிரதேசத்தைச் சேர்ந்த இரு பெண் பிள்ளைகளின் தந்தையான (வயது 63) வைரமுத்து நடராசா என்பவரே உயிரிழந்தவர் ஆவார்.

நள்ளிரவு 12 மணியளவில் தாக்குதலுக்கு உள்ளான அவரை அதிகாலை 3 மணியளவில், அக்கரைப்பற்று ஆதார வைத்தியசாலையில் உறவினர்கள் சேர்த்திருந்த போதிலும், சிகிச்சை பலனின்றி அதிகாலை 5 மணியளவில் அவர் உயிரிழந்தார் என்று வைத்தியசாலை தகவல்கள் தெரிவித்தன.

(வ)

# கிழக்கு மாகாண கல்வி அபிவிருத்தி மிகச் சிறந்த முன்னேற்றப் பாதையில்

## மாகாணக் கல்விப் பணிப்பாளர் நிஸாம் தெரிவிப்பு

கடந்த இரண்டரை வருட காலப்பகுதியில் கிழக்கு மாகாணத்தின் கல்வித் துறையின் அபிவிருத்தி மிகச் சிறந்த வகையில் முன்னேற்றம் கண்டுள்ளதாக கிழக்கு மாகாணக் கல்விப் பணிப்பாளர் எம்.ரீ.ஏ. நிஸாம் தெரிவித்துள்ளார்.

கிழக்கு மாகாணத்தின் கல்வி அபிவிருத்தி மற்றும் பௌதீக வள அபிவிருத்திகள் தொடர்பாக நேற்று ஊடகவியலாளர்களிடம் கருத்துத் தெரிவித்த போதே அவர் இதனைக் குறிப்பிட்டார்.

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



கடந்த ஐந்து வருட காலங்களில் கிழக்கு மாகாணத்தில் கல்வி அபிவிருத்திக்காகச் செலவிடப்பட்ட நிதியை விட அதிகமான நிதியைக் கொண்டு இந்த மாகாண சபையின் இரண்டரை வருட கால நிர்வாகத்தில் கல்வி அபிவிருத்தி இடம்பெற்றுள்ளது.

கிழக்கு மாகாணத்தில் கல்வி அபிவிருத்திக்காக நாம் வரைகின்ற 110 கோடி ரூபாவுக்கான திட்டங்களை மாற்றியமைத்து 550 கோடி ரூபாவுக்கான செயற்திட்டங்களை வகுக்குமாறு நிர்வாக முறைமையை ஏற்படுத்தித் தந்த பெருமை கிழக்கு மாகாண முதலமைச்சர் நஸீர் அஹமட்டைச் சாரும்.

இதன் பிரதிபலனாக கிழக்கின் கல்வி அபிவிருத்தி அடைவு மட்டம் என்பது மெச்சத்தக்க அளவில் வெகு விரைவில் நிதர்சனமாகிவிடும். இந்த யதார்த்தத்துக்கு அப்பால் மாகாண நிர்வாகத்தைப் பற்றியும் அரசைப் பற்றியும் தவறான அபிப்பிராயங்கள் பரப்பப்படுகின்றமை அர்த்தமற்றது. -என்றார்.

(எ)

# பிணைமுறி மோசடிக்காரரின் விவரங்கள் விரைவில் வெளிவரும்: மஹிந்தானந்த!



கொழும்பு, ஓக. 03

இலங்கை மத்திய வங்கியில் நடைபெற்ற பிணைமுறி மோசடி விவகாரத்தில் சம்பந்தப் பட்டிருக்கும் சகலரின் பெயர் விவரங்களும் விரைவில் வெளிவரும் என மஹிந்த அணியான கூட்டு எதிரணியின் நாடாளுமன்ற உறுப்பினர் மஹிந்தானந்த அளுத்கமகே தெரிவித்துள்ளார்.

சிங்கள ஊடகம் ஒன்றுக்குக்கருத்துத் தெரிவிக்கும்போதே இவ்வாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

பிணைமுறி மோசடியின் பிரதான சூத்திரதாரி அர்ஜுன் அலோசியஸ், அமைச்சர் ரவி கருணாநாயக்கவுக்கு நன்றிக் கடனாக இரு சொகுசு வீடுகளை வழங்கியிருக்கும் விவகாரம் இப்போது அம்பலமாகியுள்ளது.

அவரைப்போலவே இந்த மோசடிக்காக அலோசியஸிடமிருந்து அன்பளிப்புகளைப் பெற்றுக் கொண்டவர்களின் விவரங்கள் விரைவில் அம்பலமாகும்.

இந்த நாட்டின் மிகப் பெரிய மோசடி எனக் கருதப்படும் பிணைமுறி மோசடியில் உதவி ஒத்தாசை வழங்கிய சகலருக்கும் அலோசியஸ் தாராளமாக அன்பளிப்புகளை அள்ளி வீசியிருக்கிறார் என்பதில்சந்தேகமில்லை.

இந்தப் பூனையும் பால் குடிக்குமா? என்ற தோரணையில் தன்னை உத்தமனாக சித்திரித்துக் கொண்டிருந்த ரவியின் குட்டு ஆணைக் குழுவின் முன்னிலையில் வெட்ட வெளிச்சமாகி விட்டதைப் போலவே ஏனைய மோசடியாளர்களின் முகத்திரைகளும் வெகுவிரைவில் கிழிக்கப்பட்டுவிடும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (க)

# ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் ஆலோசகர் இலங்கை இராணுவத் தளபதியைச் சந்தித்தார்!

ஐ.நா. மனித உரிமை ஆணையாளரின் மூத்த ஆலோசகர் ஒருவர் இலங்கைக்கு விஜயம் ஒன்றை மேற்கொண்டுள்ளார்.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் பணியகத்தின் மூத்த மனித உரிமைகள் ஆலோசகரான ஜூவான் பெர்னான்டஸ் என்ற அதிகாரியே இங்கு வந்துள்ளார்.

ஐ.நா. மனித உரிமைகள் பேரவையில் நிறைவேற்றப்பட்ட தீர்மானம் நடைமுறைப்படுத்தப் படுகிறதா என்பது குறித்தும், இராணுவ மறுசீரமைப்புத் தொடர்பான பரிந்துரைகளின் நடைமுறைப்படுத்தல்கள் குறித்தும் ஆராய்வதே இவரது இலங்கைக்கான விஜயத்தின் நோக்கம் என்று கூறப்படுகிறது.

ஐ.நா. மனித உரிமை ஆணையாளர் செயிட் ராட் அல் ஹுசேனின் ஆலோசகர்களில் ஒருவரான ஜூவான் பெர்னான்டஸ், இலங்கை விஜயத்தின் ஒருகட்டமாக நேற்று முன்தினம் இலங்கை இராணுவத்தளபதி லெப். ஜெனரல் மகேஸ் சேனநாயக்கவைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.



ஐ.நா. அமைதிப் படைக்கு இலங்கைப் படையினரை அனுப்பும் போது கடைப்பிடிக்கப் படும் ஆய்வு முறை உள்ளிட்ட இராணுவ மறுசீரமைப்புத் தொடர்பான பரிந்துரைகளின் நடைமுறைப் படுத்தல்கள் தொடர்பாக இதன்போது கலந்துரையாடப்பட்டுள்ளது எனத்தகவல்கள் தெரிவிக்கின்றன. (க)

# இனிமேல் மின் தடையோ கட்டண அதிகரிப்போ இல்லை!

## எரிசக்தி அமைச்சர் கூறுகிறார்

மின்சாரத் தடையோ அல்லது கட்டண அதிகரிப்போ மேற்கொள்ளப்படாது என மின்வலு மற்றும் எரிசக்தி அமைச்சர் ரஞ்சித் சியாம் பலாபிட்டிய தெரிவித்துள்ளார்.

வறட்சியான காலநிலை காரணமாக மின்கட்டண அதிகரிப்போ அல்லது மின் துண்டிப்போ மேற்கொள்ளப்படாது என அவர் குறிப்பிட்டுள்ளார். இதுதொடர்பில் அவர் வெளியிட்டுள்ள அறிக்கையில் குறிப்பிடப்பட்டுள்ளவைவருமாறு:-

கடந்த ஆண்டை விடவும் இந்த ஆண்டில் நாளாந்த மின் தேவை பத்து வீதத்தினால் அதிகரித்துள்ளது. வறட்சியான காலநிலை காரணமாக மின்சாரத்தின் தேவை உயர்வடைந்துள்ளது. நீர் மின் உற்பத்தி மேற்கொள்ளும் நீர் நிலைகளின் நீர் மட்டம் 36 வீதத்தினால் வீழ்ச்சியடைந்துள்ளது. சில நீர்நிலைகளின் நீர் மட்டம் 20 வீதம் வரையில் குறைவடைந்துள்ளது.

பிரதான மின் உற்பத்தி நிலையமான நுரைச்சோலை அனல் மின் நிலையத்தின் 300 மெகாவோட் மின் உற்பத்தி செய்யும் ஓர் இயந்திரம் பழுதடைந்துள்ளது.

இவ்வாறு பல்வேறு சவால்களை எதிர்நோக்கினாலும் மின்சாரத் துண்டிப்போ, கட்டண அதிகரிப்போ மேற்கொள்ளப்படாது என அவர் தனது அறிக்கையில் தெரிவித்துள்ளார்.

# அரச மருத்துவர்கள் கறுப்புப் பட்டிப் போராட்டம்!

கொழும்பு, ஓக. 03

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தைச் சேர்ந்த உறுப்பினர்கள் கறுப்புப் பட்டிப் போராட்டமொன்றை முன்னெடுத்துள்ளனர்.

மாலபே தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிரான தேசிய தினமான நேற்று இந்தப் போராட்டம் முன்னெடுக்கப்பட்டது.

அரச மருத்துவ அதிகாரிகள் சங்கத்தின் பொலன்னறுவை மாவட்ட செயலாளர் டொக்டர் ஏ.டி.பி. பண்டார இதுதொடர்பில் தெரிவித்தவை வருமாறு:-

மாலபே தனியார் மருத்துவ கல்லூரிக்கு எதிரான தேசிய தினத்தில் நாட்டின் அனைத்து மருத்துவர்களும் கறுப்புப் பட்டி அணிந்து கடமையில் ஈடுபட்டனர்.

மதிய உணவு விடுமுறையின் அந்த வைத்தியசாலைகளில் அரச மருத்துவ அதிகாரிகள் சங்க உறுப்பினர்கள் போராட்டத்தைமுன்னெடுத்தனர். வைத்தியசாலைக்குஎதிரிலேயே இந்தப் போராட்டம் நடைபெற்றது.

பொலனறுவை பெரியாஸ் பத்திரி உள்ளிட்ட மாவட்டத்தின் ஏனைய வைத்தியசாலைகளின் மருத்துவர்கள் இந்தப் போராட்டத்தில் பங்கேற்றிருந்தனர். என்றும் அவர் தெரிவித்தார். (க)

# கொக்குவில் வாள்வெட்டு குறித்து அமைச்சரவையில் சிறப்பு அறிக்கை!



கொக்குவிலில் பொலிஸார் மீது நடத்தப்பட்ட வாள்வெட்டுத்தாக்குதல் குறித்த சிறப்பு விசாரணை அறிக்கை நேற்று முன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

கடந்த ஞாயிற்றுக் கிழமை மதியம் இரண்டு பொலிஸார் இனந்தெரியாத குழுவினரால் துரத்தித் துரத்தி வெட்டப்பட்டனர்.

படுகாயங்களுக்கு இலக்கான இவர்கள் சிகிச்சை பெற்று வருகின்றனர்.

இந்தச்சம்பவம் தொடர்பாக நேற்றுமுன்தினம் அமைச்சரவைக் கூட்டத்தில் சட்டம் ஒழுங்கு அமைச்சர் சாகல ரத்நாயக்கவால் அறிக்கை ஒன்று சமர்ப்பிக்கப்பட்டுள்ளது.

பொலிஸாரின் ஆரம்ப கட்ட விசாரணைகள் மற்றும் கண்டறிவுகளின் அடிப்படையில் இந்த அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (க)

# கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்களுடன் அமெ. துணைத் தூதுவர் ஹில்டன் சந்திப்பு!

கொழும்பு, ஓக. 03

வடக்குக்கான விஜயத்தை மேற்கொண்டிருந்த இலங்கைக்கான அமெரிக்க துணைத் தூதுவர் ரொபேர்ட் ஹில்டன், தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களைச் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார்.

அமெரிக்கதுணைத் தூதுவர் ரொபேர்ட் ஹில்டன், கடந்த திங்கட்கிழமை யாழ்ப்பாணத்துக்கு விஜயம் மேற்கொண்டு பல்வேறு நிகழ்வுகளில் பங்கேற்றிருந்தார்.

இதன்ஒருகட்டமாக தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர்களையும் அவர் சந்தித்துப் பேச்சு நடத்தியுள்ளார் என்று தற்போது தகவல் வெளியாகியுள்ளது.

யாழ். நகரில் உள்ள விடுதி ஒன்றில் நடந்த இந்தச் சந்திப்பில் நாடாளுமன்ற உறுப்பினர்களான மாவை சேனாதிராசா, எம்.ஏ. சுமந்திரன், சி.சிறீதரன், சார்ள்ஸ் நிர்மலநாதன் ஆகியோர் பங்கேற்றுள்ளனர்.

இதன்போது, இராணுவத்தினரின் வசமுள்ள காணிகள் விடுவிப்பு, காணாமற்போனோர் பணியகத்தின் முன்நோக்கிய செயற்பாடுகள் குறித்தும், வடக்கு மாகாண அபிவிருத்திக்கு முதலீடுகள்மற்றும்வேலை வாய்ப்பை உருவாக்குதல் தொடர்பாகவும் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர்கள் வலியுறுத்தியுள்ளனர். (க)



# பெற்றோரை இழந்த சிறுவர் 31 பேர் கண்டாவளையில்!

கிளிநொச்சி மாவட்டத்தின்- கண்டாவளைப் பிரதேச செயலாளர் பிரிவில் உள்ள 104 கிராமங்களில் வாழ்கின்ற 8 ஆயிரத்து 203 சிறுவர்களில், தாய் தந்தையை இழந்த 31 பேர் உள்ளனர் என்று பிரதேச செயலகப் புள்ளிவிவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

மேலும், தந்தையை மட்டும் இழந்த சிறுவர்கள் 325 பேரும், தாயை மட்டும் இழந்த சிறுவர்கள் 40 பேரும், தந்தையைப் பிரிந்து வாழும் சிறுவர்கள் 13 பேரும், தாயைப் பிரிந்து வாழும் சிறுவர்கள் 12 பேரும், மாற்றுவலுவுள்ள சிறுவர்கள் 65 பேரும்,-

மனவளர்ச்சி குன்றிய சிறுவர்கள் 03 பேரும், சிறுவர் இல்லங்களில் 96 சிறுவர்களும், சான்று பெற்ற பாடசாலைகளில் 13 சிறுவர்களும் உள்ளனர் என்று பிரதேச செயலகப் புள்ளி விவரத்தில் தெரிவிக்கப்பட்டுள்ளது. (எ)

## தினசரி ராசி பலன் 03.08.2017

**2017 ஆம் ஆண்டு ஏவிளம்பி வருடம் ஆடித் திங்கள் 19 ஆம் நாள் ஏகாதசித்திதி மாலை 04.37 மணி வரை. பின்னர் துவாதசி.நட்சத்திரம்: கேட்டை மாலை 06.13 மணி வரை. பின்னர் மூலம் மரண யோகம். மாலை 06.13 மணி வரை. பின்னர் சுபயோகம். ராகுகாலம்: காலை 07.35 மணி முதல் 09.05 மணி வரை. சுபநேரம்: மாலை 04.35 மணி முதல் 06.04 மணி வரை.**

**இன்று ஏகாதசி விரதம். திவசம் செய்ய வேண்டிய திதி: ஆடிமாத வளர்பிறை ஏகா தசி. பிறந்த நட்சத்திர வழிபாடு:கேட்டை.**

'ஜோதிடமணி' பிரம்மஸ்ரீ சி.ஜெகதீஸ்வரசர்மா ஜே.பி.

**மேஷம் :** கவலையான நாள். குடும்பத்தில் வீண் சச்சரவுகள் உண்டாகும். கொடுக்கல், வாங்கலில் பெரும் சிக்கல்கள் உண்டாகும். .

**ரிஷபம்:** சமபலன்கள் காணப்படுகின்றன. பொருளாதாரம் சுமாராக இருக்கும். வரவுக்கு மீறிய செலவுகள் உண்டாகும். தொழிலாளர்கள் கடின உழைப்பால் நற்பலனைப் பெறுவார்கள். கொடுக்கல், வாங்கலில் கவனம் தேவை.

**மிதுனம் :** ஆக்கபூர்வமான பலன்கள் காணப்படுகின்றன. குடும்ப ஒற்றுமை பலப்படும். வியாபாரத் தொழிலால் ஆக்கபூர்வ முன்னேற்றம் காணப்படும். உத்தியோகத்தில் திறமையால் அதிகாரிகள் பாராட்டுகளைப் பெறுவார்கள்.

**கடகம் :** அனுகூலமான நாள். குடும்பத்தில் அன்னியோன்னியம் அதிகரிக்கும். விட்டுப் பிரிந்த உறவுகள் மீண்டும் ஒன்று சேரும் வாய்ப்புண்டாகும். தூர தேசப் பயணம் சிலருக்கு அனுகூலமாகும்.

**சிம்மம்:** யோசனையான நாள். குடும்பத்தில் அமைதி குறைந்து காணப்படும். தொழிலில் பிரயாசை அதிகரிக்கும்.

**கன்னி:** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. உறவினர், நண்பர்களால் வீண் தொல்லைகளும், செலவுகளும் அதிகரிக்கும். உத்தியோகத்தில் யாரையும் நம்பி தம் தொழிலை ஒப்படைத்தலாகாது.

**துலாம் :** யோகமான நாள். குடும்பத்தில் புரிந்துணர்வு அதிகரிக்கும். வீடு, வாகன யோகம் உண்டாகும். திருமண வாய்ப்புகள் வீடு தேடி வரும். சிலருக்கு வெளிநாட்டுத் தொழில் வாய்ப்புக் கிடைக்கும்.

**விருச்சிகம் :** அதிஷ்டமான நாள். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் உண்டாகும். தொழிலில் பல இடையூறுகள் ஏற்படும். சுயதொழில் விருத்தி குன்றும்.

**தனுசு :** துன்பமான நாள். குடும்பத்தில் வீண் வாக்குவாதங்கள் உண்டாகும். தொழிலில் பல இடையூறுகள் ஏற்படும். சுயதொழில் விருத்தி குன்றும்.

**மகரம்:** சுபீட்சமான நாள். எதிர்பார்த்த வெளிநாட்டுப் பணம் வந்து சேரும். சிலர் வாடகை வீட்டில் இருந்து சொந்த வீட்டுக்கு குடிபோவார்கள்.

**கும்பம் :** மத்திம பலன்கள் காணப்படுகின்றன. குடும்பத்தில் சிறுசிறு உட்பூசல்கள் காணப்படும். உறவினர்கள்,நண்பர்களால் தொல்லைகள் உண்டாகும். பயணங்களைத் தவிர்ப்பது நல்லது.

**மீனம் :** அனுகூலமான நாள். குடும்பத்தில் நல்லிணக்கம் காணப்படும். இதுவரை நோயால் அவதிப்பட்டவர்கள் நோய் நீங்கி குணமடைவார்கள்.

**சந்திராட்டமநாள்: அசுவினி, பரணி, கார்த்திகை முதலாம் பாதம் ஆகிய நட்சத்திரங்களில் பிறந்தோர் அவசியம் நற்கருமங்களைத் தவிர்க்கவும்.**

# மியன்மார் அகதிகளை வேறொரு நாட்டில் புகலிடம் பெற்றுக் கொடுக்க நடவடிக்கை

### அதற்கான நடவடிக்கையில் யு.என்.எச்.சி.ஆர். நிறுவனம்

இலங்கை கடற்பரப்புக்குள் சட்டவிரோதமாக நுழைந்த மியன்மார் அகதிகளுக்கு வேறொரு நாட்டில் புகலிடம் பெற்றுக்கொடுக்கத்தீர்மானிக்கப்பட்டுள்ளதாகத் தெரிவிக்கப்படுகின்றது.


ஐ.நா. சபையின் யூ.என்.எச்.சி.ஆர். நிறுவனம் இதற்கான நடவடிக்கைகளை மேற்கொண்டு வருகின்றது.

மேலும், மிரிஹானாதடுப்பு முகாமில் தற்காலிகமாகத் தங்கவைக்கப்பட்டுள்ள மியன்மார் அகதிகளை கல்கிஸ்ஸை பகுதிக்கு மாற்றும் நடவடிக்கையில் ஈடுபட்டுள்ளதாகவும், அதுவரையில்அவர்களுக்கான உணவு, தங்குமிட வசதி மற்றும் கல்வி நடவடிக்கைகளையும் வழங்க யூ.என்.எச்.சி.ஆர் தீர்மானித்துள்ளது.

எனினும், மிரிஹானா தடுப்பு முகாமில் உள்ள மியான்மார் அகதிகளை இடம் மாற்றுவதற்கு நீதிமன்ற அனுமதி பெற வேண்டியது அவசியமாகும்.

இதனால், எதிர்வரும் 17 ஆம் திகதி காங்கேசன் துறை நீதிமன்றத்தில் அவர்களை முன்னிலைப் படுத்தி நீதிமன்றத்தின் அனுமதியைப் பெறுக் கொள்வதற்கு நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன.

கடந்த ஏப்ரல் மாதம் 30 ஆம் திகதி காலை இலங்கைக்குள் படகின் மூலம் சட்டவிரோதமாக நுழைந்த மியன்மார் நாட்டை சேர்ந்த 30 ரோஹிஞ்சா முஸ்லிம் அகதிகள் கைது செய்யப்பட்டு மிரிஹானா சட்டவிரோத தடுப்பு முகாமில் தடுத்து வைக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ)



# 'தலதா' யானைத் தொழுவம் புனரமைக்கப்பட்டு கையளிப்பு

கண்டி ஸ்ரீதலதா மாளிகை வளவில் அமைக்கப்பட் டுள்ள யானைகளுக்கான தொழுவம் புனரமைக்கப்பட்டு தலதா மாளிகைக்கு கையளிக்கப்பட்டுள்ளது.

இது தொடர்பான நிகழ்வு அமைச்சர் பாட்டாலி சம்பிக்க ரணவக்க தலைமையில் இடம் பெற்றது. இதற்கான நிதி அமைச்சு செலவிட்டுள்ளது.

மாநகர மற்றும் மேல் மாகாண அபிவிருத்தி அமைச்சர் சம்பிக்க ரணவக்கவின் ஆலோசனைக்கு அமைவாக நகர அபிவிருத்தி அதிகார சபையால் இந்த யானை தொழுவத்தில் அடிப்படை வசதிகளுக்கான திட்டம் தற்போது பூர்த்தி செய்யப்பட்டுள்ளது. (எ)

## யாழ்.மரியன்னை பேராலய திருவிழா ஞாயிறு ஆரம்பம்

யாழ்ப்பாணம்,ஓக.03

யாழ். புனித மரியன்னை பேராலய வருடாந்த திருவிழா எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக் கிழமை மாலை 5.15 மணிக்குக் கொடியேற்றத்துடன் ஆரம்பமாகி நடைபெறும்.

தொடர்ந்து 14 ஆம் திகதி திங்கட்கிழமை திருநாள் திருப்பலியும் 15 ஆம் திகதி செவ்வாய்க்கிழமை காலை 5.30 மணிக்கு முதலாம் கூட்டுத் திருப்பலியும் மாலை 5.30 மணிக்கு ஓய்வு நிலை ஆயர் தோமஸ் சவுந்தரநாயகம் ஆண்டகையின் தலைமையில் 2 ஆம் கூட்டுத் திருப்பலியும் இடம் பெறும். (ப)

# ராணுவத்தினர் வசமிருந்து காணிகள் விடுவித்தமைக்கு பிரிட்டன் பாராட்டு

இராணுவத்தினர் வசமிருந்த பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டமைக்காக, பிரிட்டன் தன்னுடைய பாராட்டுகளைத் தெரிவித்துள்ளது.

அத்துடன், கடந்த வருடம் பிரிட்டன் மற்றும் இலங்கை ஆயுதப் படைகளுக்கிடையிலான தொடர்புகள் புதுப்பிக்கப்பட்டமையையும் பிரிட்டன் வரவேற்றுள்ளது.

பொதுமக்களின் காணிகள் விடுவிக்கப்பட்டமைக்காக, ஆயுதப் படைகளை பாராட்டுகின்றேன்.

மேலும், காணிகள் விடுவிக்கப்படின் இரண்டு சமுதாயத்தினருக்கும் இடையே பரஸ்பர நம்பிக்கையை உருவாக்கும் என்று பிரிட்டன் தூதுவர் ஜேம்ஸ் டௌரிஸ் தெரிவித்தார்.

வட அயர்லாந்து தொடர்பில் ஐக்கிய இராச்சியத்தின் சொந்த அனுபவத்தைச் சுட்டிக்காட்டிய அவர், மோதலின் பின்னரான நல்லிணக்கத்தின் முக்கியத்துவம் பற்றியும் குறிப்பிட்டார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தேசிய நலன் மற்றும் இராணுவத்துக்கான நலன் ஆகிய வற்றில் உண்மை மற்றும் பொறுப்புக்கூறல் என்பவை நவீன இராணுவத்துக்கு அவசியமானவை.

உண்மையறிதல் மற்றும் பொறுப்புக்கூறல் செயற் பாடு நல்லிணக்கத்தையும் செழிப்பையும் அதிகரிக்கும்.இது தேச நலனுக்கு உகந்தது.

2016 ஆம் ஆண்டு ஜனவரி தொடக்கம், ஐக்கிய



இராச்சியமும் இலங்கையும் பாதுகாப்பு உறவுகளைப் பலப்படுத்தியுள்ளன.

இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியவை சம்பந்தப்பட்ட நிகழ்ச்சித் திட்டங்கள் இதற்கு வழிவகுத்தன.-என்றார்.

# யாரைக் குறி வைத்து இந்த மலபார் கூட்டுப் பயிற்சி!

## சீனாவை அச்சுறுத்தும் நடவடிக்கையா?

வழிமூலம் - Geopolitical monitor
ஆங்கிலத்தில்- Dr. Rupakjyoti Borah
மொழியாக்கம் - நித்தியபாரதி

ஜப்பானியப் போர்க் கப்பல்களான ஜே..எஸ் இசுமோ (JS Izumo) மற்றும் ஜே.எஸ் சசானமி (JS Sazanami) ஆகியன இந்தியா மற்றும் அமெ ரிக்காவுடன் இணைந்து மலபார் 2017 கடல் சார் பயிற்சி நடவடிக்கையில் ஈடுபட்டமை ஜப்பானின் கடல் சார் ஆதிக்கம் தொடர்பான புதிய நிலைப்பாடு என்ன என்பதைச் சுட்டிக்காட்டுகிறது.

## அமெரிக்கா, இந்தியா, ஜப்பான் நாடுகளின் உறவில் பல்வேறு வகையிலும் நெருக்கம்





ஜே.எஸ் இசுமோ வெளிநாட்டுக் கடற்படைகளுடன் இணைந்து பயிற்சியில் ஈடுபட்டமை இதுவே முதற் தடவையாகும். 2007 தொடக்கம் மலபார் கூட்டுக் கடற்பயிற்சியில் ஜப்பான் ஈடுபட்டாலும் கூட 2015 இலேயே ஜப்பான் இக்கூட்டுப் பயிற்சியின் நிரந்தர உறுப்பு நாடாகியது. இந்தியா மற்றும் அமெரிக்கா ஆகிய இரு நாடுகளுக்கும் இடையிலான மலபார் இரு தரப்பு கூட்டுக் கடற்பயிற்சி 1992 தொடக்கம் இடம்பெற்று வருகிறது.

இந்திய-அமெரிக்க-ஜப்பான் மலபார் கூட்டுக் கடற்பயிற்சியில் ஈடுபடுவதற்கு முன்னர் 24 ஆயிரம் தொன் எடையுடைய ஜே.எஸ் இசுமோ, சிங்கப்பூர், பிலிப்பைன்ஸ், இந்தோனேஷியா போன்ற நாடுகளில் கடல் நடவடிக்கைகளில் ஈடுபட்டது.

இதன் பின்னர் ஜே.எஸ் இசுமோ மற்றும் ஜே.எஸ் சசானமி போன்றன சிறிலங்காவிற்குப் பயணம் செய்தன. இந்நிலையில் மலபார் 2017 கூட்டுக் கடற்பயிற்சி ஜப்பானுக்கு எத்தகைய பயனைக் கொடுத்துள்ளது?

முதலாவதாக, ஜப்பானுக்குச் சொந்தமான கடற்பரப்பில் குறிப்பாக சென்காகு தீவுகளைச் சூழவுள்ள கடற்பகுதிகளில் சீனாவின் ஆதிக்கம் வலுவாகி வருவதால் அதனை ஜப்பான் எதிர்க்க வேண்டிய நிலையிலுள்ளது. இதன் காரணமாகவே தற்போது நடைபெற்ற மலபார் கூட்டுப் பயிற்சி நடவடிக்கையில் ஜப்பான் பங்கேற்றிருந்தது.

மியாக்கோ நீரிணையின் ஊடாக சீன விமானப் படையின் குண்டுவீச்சு விமானங்கள் அண்மையில் பறப்பில் ஈடுபட்டதைத் தொடர்ந்து சீனாவுக்கும் ஜப்பானுக்கும் இடையிலான முரண்பாடு அதிகரித்துள்ளது. அண்மையில் தென்கொரிய ஏவுகணைகள் ஜப்பானுக்குச் சொந்தமான கடற்பகுதியைக் கடந்து சென்றுள்ளன. இந்தக் காரணத்தினாலேயே ஜப்பான் மலபார் கூட்டுப் பயிற்சி நடவடிக்கையில் பங்குபற்றியது.

இரண்டாவதாக, ஜப்பான் மற்றும் இந்தியாவிற்கு இடையிலான கூட்டுக் கடல் ஒத்துழைப்பை மேம்படுத்தும் நோக்கிலேயே ஜப்பான் மலபார் கூட்டுக் கடற்பயிற்சியில் ஈடுபட்டது. ஓகஸ்ட் 2007 இல், ஜப்பானியப் பிரதமர் சின்ஷோ அபே தனது முதலாவது ஆட்சிக் காலப்பகுதியில் 'பசுபிக் மற்றும் இந்திய மாக்கடல்களில் சுதந் திரமான நடமாட்டம் மற்றும் செழு மையை உறுதிப்படுத்துவது அவசி யமானதாகும்' என இந்திய நாடாளு மன்றின் முன்னால் 'இரண்டு மாக்கடல்களின் சங்கமம்' என்கின்ற தலைப்பின் கீழ் ஆற்றிய உரையின் போது குறிப்பிட்டிருந்தார்.

அதிலிருந்து இப்பிராந்தியத்தின் நிலைப்பாடு கணிசமானளவு மாறியுள்ளதுடன் இந்தோ-பசுபிக் என்கின்ற பதமும் அதிகம் பயன்படுத்தப்படுகிறது.

மூன்றாவதாக, ஜப்பானிய தற்காப்புப் படைகள் ஏற்கனவே டிஜி போட்டியில் தளம் ஒன்றை அமைத்துள்ளன. ஆகவே, இந்தத் தளத்துக்கு இந்தியாவின் அமைவிடம் பிரதான பாதுகாப்பை வழங்குகிறது.

நான்காவதாக, அமெரிக்காவுடனான இந்தியாவின் அதிகரித்து வரும் உறவு இந்திய-ஜப்பான் உறவில் முன்னேற்றத்தை ஏற்படுத்துவதற்கு வழிவகுத்துள்ளது. குறிப்பாக ஜப்பான் மற்றும் அமெரிக்கா ஆகியன நெருங்கிய கூட்டாளிகள் என்கின்ற உண்மையை எடுத்துரைக்க இது வழி வகுத்துள்ளது.

இதேவேளையில், அமெரிக்காவால் தயாரிக்கப்படும் ஆயுதங்களையே இந்தியா தற்போது அதிகமாகக் கொள்வனவு செய்வதில் ஆர்வம் காண்பிக்கின்றது. இதனால், இந்த மூன்று நாடுகளின் இராணுவப் படைகளுக்கிடையில் ஒத்துழைப்பு அதிகரித்துள்ளது. உதாரணமாக, தற்போது, அமெரிக்காவால் தயாரிக்கப்பட்ட பி81 கடற் கண்காணிப்பு விமானத்தை இந்தியா பயன்படுத்தி வருகிறது.

> சீனா தனது முத்து மாலை மூலோபாயத்துக்கு ஆதரவாக பாகிஸ்தான், சிறிலங்கா, பங்களாதேஷ் போன்ற இடங்களில் பல துறைமுகங்களை நிர்மாணித்துள்ளது. இது இந்தியாவுக்கும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

ஐந்தாவதாக, இந்திய-பசுபிக் பிராந்தியத்தில் சுதந்திரமான கடற் போக்குவரத்தை உறுதிப்படுத்துவது ஜப்பானின் பொருளாதாரத்துக்கு நலன் பயக்கும். 'சுதந்திரமானதும் வெளிப்படையானதுமான இந்திய-பசுபிக் மூலோபாயம்' என்பதே பிரதமர் அபேயின் கோட்பாடாகும். இதன்மூலம் ஜப்பான் இந்திய மாக்கடல் பிராந்தியத்துடன் தொடர்பை ஏற்படுத்துவதற்கு உதவுகிறது.

சீனா அண்மையில் 10 ஆயிரம் வீரர்களைக் கொண்ட தனது முதலாவது இராணுவத் தளத்தை டிஜி போட்டியில் நிறுவியது. அத்துடன் சீனா தனது முத்துமாலை மூலோபாயத்துக்கு ஆதரவாக பாகிஸ்தான், சிறிலங்கா, பங்களாதேஷ் போன்ற இடங்களில் பல துறைமுகங்களை நிர்மாணித்துள்ளது. இது இந்தியாவுக்கும் அதிருப்தியை ஏற்படுத்தியுள்ளது.

2016 நவம்பரில் இடம்பெற்ற வருடாந்த இரு தரப்பு உச்சி மாநாட்டில் கலந்து கொண்ட இந்தியப் பிரதமர் மோடி மற்றும் ஜப்பானியப் பிரதமர் அபே ஆகியோர் சுதந்திரமான கடற் போக்குவரத்து, விமானப் பறப்புக்கள், சட்ட ரீதியான வர்த்தக நடவடிக்கைகள் போன்றவற்றை அடிப்படையாகக் கொண்ட கடல் சட்டம் தொடர்பான ஐ.நா. சாசனத்தை சீனா கடைப்பிடிக்க வேண்டும் எனவும் குறிப்பாக தென் சீனக் கடல் விவகாரம் தொடர்பாகவும் மீண்டும் வலியுறுத்தியிருந்தனர்.

ஜப்பான் மற்றும் இந்தியா ஆகிய இரு நாடுகளும் பல்வேறு விடயங்களில் மிகவும் நெருக்கமான உறவைப் பேணி வருகின்றன. அணுசக்தியை வன்முறையற்ற நடவடிக்கைகளுக்காகப் பயன்படுத்துதல் தொடர்பான ஒத்துழைப்பு உடன்படிக்கை ஒன்றில் இந்தியாவும் ஜப்பானும் அண்மையில் கைச்சாத்திட்டன. இது ஜப்பானைப் பொறுத்தளவில் மிகப் பெரியதொரு வெற்றியாகும்.

இதேபோன்று தற்போது நடைபெற்று முடிந்த மலபார் 2017 கூட்டுக் கடல் நடவடிக்கை இந்தியா, அமெரிக்கா மற்றும் ஜப்பான் ஆகிய மூன்று நாடுகளுக்கும் இடையில் சுதந்திரமான கடல் சார் ஒத்துழைப்புக்களை மேலும் அதிகரிக்க வழிவகுத்துள்ளது. ★



# தென்மராட்சியில் உள்ள குறைபாடுகள் உடன் நிவர்த்தி செய்யப்பட வேண்டும்

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் வலியுறுத்தல்

சாவகச்சேரி, ஓக.03

தென்மராட்சியில் உள்ள குறைபாடுகள் உடன் நிவர்த்தி செய்யப்பட வேண்டும். குறிப்பாக, கொடிகாமம் சந் தைக் கட்டடத் தொகுதி புனரமைக்கப்பட வேண்டும், சாவகச்சேரி சந்தையில் உள்ள வடிகாலமைப்பு, சாவகச்சேரி பொதுவிளையாட்டு அரங்கு என்பன புனரமைப்புச் செய்யப்பட வேண்டும், கொடிகாமம் பொது வைத்தியசாலையைத் தரமுயர்த்துவதுடன் அதை 24 மணி நேரமும் இயங்கச் செய்ய வேண்டும் என்பன தொடர்பாக கோரிக்கைகள் முன்வைக்கப்பட்டன.

தென்மராட்சிப் பிரதேச ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம் நேற்று முன்தினம் சிறுவர் விவகார இராஜாங்க அமைச்சர் திருமதி விஜயகலா மகேஸ்வரன், நாடாளுமன்ற உறுப்பினர்களான எம்.ஏ.சுமந்திரன், அங்கஜன் இராமநாதன் ஆகியோரின் இணைத் தலை மையில் இடம்பெற்றது.

பிரதேச செயலாளர் திருமதி தேவந்தினி பாபுவின் விளக்க உரையுடன் ஆரம்பமான இக் கூட்டத்தில் பல்வேறு விடயங்கள் ஆராயப்பட்டன.

மேலும், தென்மராட்சியில் சிறுவர் பூங்கா ஒன்று அமைக் கப்பட வேண்டும் எனவும் வலியுறுத்தப்பட்டது. இங்கு அதிகளவான விவசாயிகள் நெற்செய்கையில் ஈடுபடுகின்ற போதிலும் நெற்களஞ்சியம் இல்லாத நிலையும் சுட்டிக்காட்டப்பட்டது.

மேலும், இந்தப் பிரதேசத்தில் உள்ள பாதுகாப்பற்ற ரயில் கடவைகளுக்கு உடனடியாக பாதுகாப்பு ஏற்பாடுகளை மேற்கொள்ளுமாறும் கோரிக்கை முன்வைக்கப்பட்டது. கோவிற் குடியிருப்பு பிரதேசத்தில் உவர் நீர் தடுப்பு அணை அமைக்குமாறும் கோரப்பட்டது.

தற்போதைய சமுர்த்தி மீளாய்வால் பல குடும்பங்கள் பாதிக்கப்பட்டுள்ளன எனச் சுட்டிக்காட்டினர். இது தொடர்பாக நடவடிக்கை எடுக்குமாறும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

மின்சார சபை மாதாந்தம் மின் பட்டியலை வழங்குவதில்லை எனக் குற்றஞ்சாட்டப்பட்டதுடன், இதனால் மக்கள் பாதிக்கப்படுகின்றனர் எனவும் இணைத் தலைமையின் கவனத்திற்கு கொண்டுவரப்பட்டது. இதற்கு நடவடிக்கை எடுக்குமாறும் கோரப்பட்டது.

அத்துடன், சங்கத்தானை ரயில் கடவைச் சந்தியில் குவிவு ஆடி அமைப்பது அவசியம் எனவும் கேட்டுக் கொள்ளப்பட்டது.

இக் கூட்டத்தில் வடக்கு மாகாண மகளிர் விவகார, கூட்டுறவு அமைச்சர் திருமதி அனந்தி சசிதரன், வடமாகாண சபை உறுப்பினர்களான கே.சயந்தன், எம்.கே.சிவாஜிலிங்கம், தமிழரசுக் கட்சியின் தென்மராட்சி கிளைத் தலைவர் க.அருந்தவபாலன் ஆகியோரும் பல துறை சார் அதிகாரிகள், மக்கள் பிரதிநிதிகளும் கலந்து கொண்டனர். (ம21)

## 'வண்ணக் கோலங்கள்' கலை நிகழ்வு இன்று

யாழ்ப்பாணம்,ஒக்.03

திருமறைக் கலாமன்றமும் சுனேரா நிறுவனமும் இணைந்து வழங்கும் 'வண்ணக் கோலங்கள்' என்னும் கலை நிகழ்வுகள் இன்று வியாழக்கிழமை மாலை 4 மணிக்கு இல 286, பிரதான வீதி, யாழ்ப்பாணத்தில் அமைந்துள்ள திருமறைக் கலாமன்றத்தின் கலைத்தூது கலையகத்தில் இடம்பெறவுள்ளன. உடுவில் ஆர்க் இல் உள்ள மாற்று ஆற்றல் உடைய பிள்ளைகள் வழங்கும் பல்வேறுகலை நிகழ்வுகளும் இடம்பெறவுள்ளன.

இந்த நிகழ்வுக்குப் பிரதம விருந்தினராக பிராந்திய சுகாதர சேவைகள் திணைக்களத்தின் கணக்காளர் ஆர்.சந்திரதாஸ், சிறப்பு விருந்தினராக பாசையூர் திருக்குடும்ப கன்னியர் மடத்தைச் சேர்ந்த அருட் சகோதரி யோலன்ட் மத்தாயஸ் ஆகியோரும் கலந்து சிறப்பிக்கவுள்ளனர்.

நிகழ்வில் கலை ஆர்வலர்கள் அனைவரையும் கலந்து சிறப்பிக்குமாறு திருமறைக் கலாமன்றமும் சுனேரா நிறுவனமும் அழைப்பு விடுத்துள்ளன.

## பூநகரி மத்தியஸ்தர் சபை ஞாயிறு முதல் விக்னேஸ்வராவில்!

பூநகரி மத்திய கல்லூரியில் தொடர்ந்து இயங்கிவந்த பூநகரி மத்தியஸ்த சபை க.பொ.த.உயர்தரப் பரீட்சை நடைபெற உள்ளதை முன்னிட்டு எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிறு தொடக்கம் மறு அறிவித்தல் வரும் வரை பூநகரி 4ஆம் கட்டை விக் னேஸ்வரா வித்தியாலயத்தில் நடை பெறும் என்பதை சகல தரப்பினருக்கும் அறியத்தருறேன் எனபூநகரி மத்தியஸ்தர் சபை தவிசாளர் எஸ்.யசோதரன் அறிவித்துள்ளார். (இ)

## க.பொ.த.சாதாரணதர பரீட்சையில் சித்திபெற்ற மாணவர் கௌரவிப்பு

பண்டத்தரிப்பு, ஓக.03

பண்டத்தரிப்பு காலையடி மறுமலர்ச்சி மன்றத்தால் 2016 ஆம் ஆண்டு க.பொ.த.சாதாரணதரப் பரீட்சையில் சித்தியடைந்த மாணவர்கள் கௌரவிக்கப்பட வுள்ளனர். காலையடி,காலையடி தெற்கு, பனிப்புலம், குஞ்சர் கலட்டி, கலட்டி, செருக்காப்புலம், சாந்தை, செட்டி குறிச்சி மற்றும் சில்லாலை தெற்கு ஆகிய கிராமங்களைச் சேர்ந்த மாணவர்களே கௌரவிக்கப்படவுள்ளனர்.

எனவே,மேற்குறிப்பிட்ட கிராமங்களைச் சேர்ந்த மாணவர்கள் தமது பெயர், முகவரி, சுட்டிலக்கம் பெறுபேற்று மற்றும் தொலைபேசி இலக்கம் என்பவற்றை நாளை வெள்ளிக்கிழமைக்கு முன்பாக மறுமலர்ச்சி அலுவலகத்தில் பதிவு செய்யுமாறு தெரிவிக்கப்பட்டுள்ளது. (இ)




இராகினிதேவி சிவலிங்கத்தின் 'தடம்மாறும் பாதைகள்' சிறுகதைத் தொகுப்பு வெளியீட்டு விழாவில் அதிபர்.சி.வேலழகன் தலைமையுரையாற்றுவதையும், ஜீவநதி ஆசிரியர் க.பரணிதரன் நூலை வெளியிடுவதையும், கருத்துரையை சுவந்தகுமார் நிகழ்த்துவதையும் படங்களில் காணலாம். (இ)



தெணியானின் பவளவிழாவும், ஜீவநதி தெணியான் சிறப்பிதழ், தெணியானின் குறுநாவல் வெளியீட்டில் 'ஜீவநதி' ஆசிரியர் க. பரணிதரன் தலைமையுரை ஆற்றுவதையும் இ.த.ஜெயசீலன்,ரவிவர்மா, வே.சிவராசலிங்கம், கலாநிதி த. கலாமணி, கலாநிதி பா. தனபாலன், இ.சு.முரளிதரன் உரையாற்றுவதையும் நூல்கள் வெளியிடுவதையும் படங்களில் காணலாம். (இ)

# வடக்கில் இராணுவத்தை களமிறக்கியமை பேரினவாத ஒடுக்குமுறையின் தொடர்ச்சியே

## புதிய ஜனநாயக மாக்சிச லெனினிசக் கட்சி கண்டனம்

வடக்கில் தொடரும் வாள்வெட்டுச் சம்பவங்கள், துப்பாக்கிச் சூடுகள் உள்ளிட்ட குற்றச்செயல்களைக் கட்டுப்படுத்துவதற்கு இராணுவம், கடற்படை, சிறப்பு அதிரடிப்படை என்பனவற்றைக் களமிறக்கி இருப்பதன் மூலம் அரசின் மீது தமிழ் மக்களுக்கு எஞ்சியிருந்த நம்பிக்கையும் அற்றுப்போயுள்ளது. இந்த நடவடிக்கையானது ஓரளவுக்கு அச்சமின்றியும் பதற்றம் இன்றியும் தமது அன்றாட அலுவல்களில் நடமாடிவந்த மக்களுக்கு பயப்பீதியை ஏற்படுத்தியுள்ளது என்று புதிய- ஜனநாயக மாக்சிச- லெனினிசக் கட்சி கண் டனம் தெரிவித்துள்ளது.

அதேவேளை தெற்கின் பேரினவாதிகளைத் திருப்திப்படுத்தி உள்ளதுடன் அரசியல் தீர்வு நல்லெண்ணம் என்று கூறப்படுவன வற்றின் மீதான மறைமுகத் தாக்குதலாகவும் காணப்படுகிறது எனவே, மேற்படி நடவடிக்கை பேரினவாத ஒடுக்குமுறையின் தொடர்ச்சி என்றே எமது கட்சி கருதுகின்றது என்று அது மேலும் தெரிவித்துள்ளது.

இது தொடர்பில் அந்தக் கட்சியின் பொதுச்செயலாளர் சி.கா.செந்திவேல் வெளி யிட்டுள்ள அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளவை வருமாறு:-

வடக்கில் வாள்வெட்டுக்கள், துப்பாக்கிச் சூடுகள், கஞ்சாக் கடத்தல்கள் போதைப்பொருள் பாவனைகள் மற்றும் சமூக விரோதச் செயல்கள் என்பன அதிகரித்துள்ளமை நிராகரிக்க முடியாதவையாகும். அவை தொடர்ந்து வளர்வதற்கும் உச்சமடைவதற்கும் இன்றைய அரசியல், பொருளாதார சமூகப் பண்பாட்டுச் சீரழிவுகளே அடிப்படைக் காரணங்களாகும்.

குறிப்பாகத் திறந்த கதவுப் பொருளாதாரக் கொள்கையால் இறக்குமதியாக்கப்படும் இந்திய மேற்குலக சினிமாவும் அவற்றின் மூலமான வன் முறைகளும் வக்கிரக்காட்சிகளும் இளைஞர்களால் உள் வாங்கப்படுவதும் பிரதான காரணமாகும். அத்துடன், புலம்பெயர்ந்த நாடுகளில் இருந்து கிடைக்கும் மிதமிஞ்சிய பணப்புழக்கமும் இளைஞர்கள் வழிதவறிச் செல் வதற்கு ஏதுவாகின்றன. அதேவேளை சட்டம், ஒழுங்கை முன்னெடுப்போர் மத்தியில் இருந்துவரும் முறையற்ற செயற்பாடுகளும், லஞ்சஊழல்களும் நீதி நியாயமற்ற பக்கசார்பு நடவடிக்கைகளும் பிரதான காரணங்களாக அமைகின்றன. -என்றுள்ளது. (எ)

காலைக்கதிர்
Kalaikkathir

வியாழக்கிழமை 03.08.2017





# சுதந்திர வேட்கை

முப்பது ஆண்டுகளுக்கு மேல் படிநிலை வளர்ச்சி கண்டு, நீட்சி கொண்ட தமிழீழ விடுதலைப் புலிகள் இயக்கத்தின் புரட்சிகர வரலாறு ஒரு பூகம்பமாக வெடித்துச் சிதறி, பிரளயமாகப் பொங்கிப் பிரவகித்து அடங்கியிருக்கின்றது.

அந்த இயக்கத்தின் வரலாற்றுக்குள்ளே பொதிந்து கிடக்கும் அதிசயிக்கத்தக்க நுட்பமான அம்சங்களும் தியாகங்களும் வீர வரலாறுகளும் நம்மில் பலருக்குத் தெரிவதில்லை.

விடுதலைப் புலிகள் இயக்கம் பற்றிய ஒரு பார்வையாக – அந்த இயக்கத்துடன் பங்காற்றிய ஒரு வரலாற்றுப் பயணத்தின் படிமமாக – கட்டவிழ்கின்றது இந்த நூல்.

புலிகளின் மதியுரைஞர் அன்ரன் பாலசிங்கம் எழுதிய 'போரும் சமாதானமும்' என்ற நூலின் ஊடாக விடுதலைப் புலிகள் இயக்கத்தைத் தரிசித்த நாம், அவரது துணைவியாரான – ஆஸ்திரேலியப் பெண்ணான – அடேல் பாலசிங்கத்தின் பட்டறிவுப் பதிவு மூலமும் புலிகள் இயக்கத்தின் உட்சூக்குமங்களை இந்தப் புதிய தொடரின் ஊடே அறிந்து கொள்ள முடியும்.

'சுதந்திர வேட்கை' என்ற இந்த நூல் முதலில் ஆங்கிலத்தில் 'Will To Freedom' என்ற தலைப்பில் வெளியானது. தமிழ்ப் பதிப்பு சரியாக பதினைந்து ஆண்டுகளுக்கு முன்னர் 2002 இல் 'தமிழீழ விடுதலைப் போராட்டம் – உள்ளிருந்து ஒரு நோக்கு' என்ற பீடிகையுடன் வெளியானது.



53




## அத்தியாயம் - IV

## திலீபனின் சாகும் வரை உண்ணாவிரதம்

யாழ்ப்பாணத்தைச் சேர்ந்த திலீபன் என்ற இளம் புலித் தலைவன் நல்லூர்க் கந்தவாமி கோவில் முன்றிலில் செப்ரெம்பர் மாதம் 14 இல் இருந்து சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தை ஆரம்பித்தார். இந்தியா தனது உறுதி மொழியை நிறைவேற்றத் தவறியதைச் சுட்டிக்காட்டும் வகையிலும், தமிழ் மக்களின் ஆற்றாமை உணர்வை, தேசிய மக்கள் எழுச்சியாக ஒன்று திரட்டும் வகையிலும் திலீபனின் உண்ணா மறியல் அமைந்தது. அவருடைய இந்த சாத்வீகப் போராட்டம் தனித்துவம் வாய்ந்தது. ஆயுதப் போராளியான திலீபன், மாபெரும் இந்தியத் தலைவரான மகாத்மா காந்தியால் உலகுக்கு அறிமுகப்படுத்தப்பட்ட, ஆன்மீகப் பண்பு கொண்ட அகிம்சைப் போராட்ட வழியைக் கையாண்டு, தமிழீழ மக்களின் இக்கட்டான நிலையை இந்திய மக்களுக்கு உணர்த்த முனைந்தார். தமிழ் மக்களும் சரி, விடுதலைப் புலிகளும் சரி, தமது விடுதலைக்காக எந்த எல்லைக்கும் செல்லத் தயாராக இருக்கிறார்கள் என்பது, விடுதலை மட்டில் அவர்கள் கொண்டிருக்கும் ஆழமான பற்றாகப் பிரதிபலிக்கிறது; அவர்கள் மீதான ஒடுக்குமுறையின் சகிக்க முடியாத ஆழத்தையும் அது பிரதிபலிக்கிறது. இத்தகைய தாங்கமுடியாத ஒடுக்குமுறைக்கு உள்ளாகி இருப்பவர்களும், இன அழிப்புக்கு உள்ளானவர்களும் மட்டுமே தமது இனத்தின் சுபீட்சத்துக்காகத் தம்மையே பலியாக அர்ப்பணிக்கத் தயங்க மாட்டார்கள் என்பது, திலீபன் என்ற அத்தியாயம் புகட்டும் ஒரு வரலாற்றுப் பாடமாகும்.

ஒப்பந்தம் கைச்சாத்திடப்படுவதற்கு முன்னதாக, பிரபாகரனுடைய அணியில் ஒருவராக திலீபனும் புதுடில்லி சென்றிருந்தார். அங்கே இந்தியப் பிரதமருக்கும் விடுதலைப் புலிகளின் தலைவருக்கும் இடையே இடம் பெற்ற பேச்சின் உள்ளடக்கம் திலீபனுக்கும் தெரிவிக்கப்பட்டிருந்தது. ராஜீவ் காந்திக்கும் பிரபாகரனுக்கும் இடையே எழுதப்படாத ஒப்பந்தம் ஒன்று ஏற்பட்டதைத் திலீபன் அறிந்திருந்தார். அது நிறைவேற்றப்படாது போனதைக் கண்டதும், தமது மக்களும், தமது போராட்டமும் ஏமாற்றப்பட்டு விட்டதை திலீபன் உணர்ந்து கொண்டார். எனவே, அந்த உறுதி மொழிகள் நிறைவேற்றப்படவேண்டும் என்ற கோரிக்கையோடு சாகும் வரை உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட அவர் முடிவு செய்தார். திலீபனின் இந்த உண்ணாவிரதம் பற்றிய செய்தியும் விடுதலைப் புலிகளுக்கும் அமைதிப் படைக்கும் இடையே அரசியல் உறவு சீர்குலைந்து போகும் செய்தியும் எமது செவிகளை எட்டியதும் இந்தியாவை விட்டு யாழ்ப்பாணம் புறப்படத் தீர்மானித்தோம்.

இந்திய - இலங்கை ஒப்பந்தம் கைச்சாத்தானதை அடுத்து சென்னையில் இருந்து சில விமானப் பயண வசதிகள் ஏற்பாடு செய்யப்பட்டன. நாடு கடத்தப்பட்டு இந்தியாவில் வாழ்ந்து கொண்டிருந்த சில ஈழத் தமிழ்ப் பிரமுகர்கள், வடக்குக் கிழக்கில் உள்ள தங்கள் இல்லங்களுக்குத் திரும்ப, இந்த விமானப் பயண ஏற்பாடுகளை இந்திய அதிகாரிகள் செய்திருந்தார்கள். ஆனால், இந்த வாய்ப்பைப் பயன்படுத்த நான் விரும்பவில்லை. கடந்த சில ஆண்டுகளாக எம்மைச் சந்திக்கச் சென்னைக்கு வந்த பல போராளிகள் பாக்கு நீரிணையை படகிலே கடந்து செல்லும்போது தாம் எதிர்கொள்ளும் ஆபத்துக்கள், இடர்





பாடுகள் பற்றி நிறையக் கூறியிருந்தார்கள். இந்த இடர்பாடுகளுக்கு முகம் கொடுக்க நாம் ஏன் தயங்க வேண்டும் என்ற கேள்வி என்னுள் எழுந்தது. அடிக்கடி சீர்மாறும் பாக்கு நீரிணையைக் கடக்க நாம் புறப்பட்ட அன்று விண்மீன் நிறைந்த நிர்மலமான வானமும், அமைதியான பளிங்கு போன்ற கடலும், இதமான கால நிலையும், எமக்குச் சாதகமாக அமைந்தன. குறுகிய கடற் பயணம். ஆபத்து எதுவும் கிடையாது. மகிழ்ச்சியான பயணமாக அமைந்தது. 1987 ஆம் ஆண்டு செப்ரெம்பரில் இருளின் போர்வையில் பாக்கு நீரிணையைக் கடந்து, வல்வெட்டித்துறை வெண் மணற் கடற்பரப்பில் கால்பதித்த போது, எனது நீண்ட கால வேணவா ஒன்று நிறைவேறியது. ஆனாலும், போராட்டத்துக்கு இத்தனை காலமாக வழங்கிய ஆதரவை அடுத்து, தமிழீழக் கரையை அடைந்தது மகிழ்ச்சியைத் தரவேண்டும் என்ற போதிலும், யாழ் மண்ணில் நிலவிய துயர நிலை, அந்த மகிழ்ச்சியின் இனிமையைக் கட்டுப் படுத்தியது. சாகும் வரையிலான உண்ணாவிரதத்தை திலீபன் தொடங்கிச் சில நாள்களே கழிந்திருந்தன. யாழ்ப்பாண தீபகற்ப மக்கள் இதனால் கவலையோடு இருந்தார்கள். ஆனாலும், உலகின் மிகப் பெரிய மக்களாட்சி நடைபெறும் நாட்டிடம் இருந்து நீதிகேட்டு, தனியொரு மனிதன் நடத்தும் இந்த அகிம்சைப் போராட்டத்தை அவர்கள் முழுமையாக ஆதரித்தார்கள். தீபகற்பத்தை நாம் சென்றடைந்த பின், எமது முதல் முக்கிய பணிகளில் ஒன்றாக வரலாற்று முக்கியத்துவம் வாய்ந்த நல்லூர் கந்தசுவாமி கோவில் முன்றிலுக்கு திலீபனைப் பார்க்கச் சென்றோம். யாழ்ப்பாணத் தமிழ் மக்களின் பண்பாட்டு மையம் நல்லூர் கந்தசுவாமி கோவில். அவர்களுடைய ஆன்மீக மையமும் அதுதான். சிறிலங்கா அரச ஒடுக்கு முறையை எதிர்க்க விடுதலைப் புலிப் போராளியாக முகிழ்த்த திலீபன், இந்திய அரசின் கபடத்தனத்தைத் தோலுரித்துக் காட்டத் தனியொருவராகப் புறப்பட்டிருந்தமை, அவருடைய போராட்ட இயல்பின் தன்மையைக் காட்டியது. கிட்டு காலத்தில் யாழ்ப்பாணத்தின் பாதுகாப்புக்காகப் பல தடவைகளில் அவர் ஆயுதச் சமரில் ஈடுபட்டிருந்தார். அப்போது அவரது வயிற்றில் பலத்த காயம் ஏற்பட்டது. தமது மக்களின் அரசியலையும் மனோபாவத்தையும் மிகத் தெளிவாகத் திலீபன் புரிந்து வைத்திருந்தார். தேசியப் போராட்டத்தில் பெண்களும் இணைக்கப்பட வேண்டும் என்பதை பலமாக ஆதரித்து வந்தார் என்று விடுதலைப் புலிகளின் மூத்த பெண் போராளிகள் அடிக்கடி குறிப்பிடுவர். பெண்கள் நிலையை உயர்த்தும் முயற்சியின் பிதாமகர்களில் ஒருவராகத் திலீபன் மதிக்கப்பட்டார். இத்தகைய வரலாறு உடைய ஒருவர் போராளிகளோடு மட்டுமல்ல யாழ்ப்பாணப் பொதுமக்களோடும் நன்றாக ஒட்டிக் கொண்டார் என்பது வியப்பல்ல. ஒப்பந்தத்துக்கு முந்திய பேச்சுக் கால கட்டத்திலேயே திலீபனை பாலா சந்தித்தார். புதுடில்லியில் ஒரே அறையில் இரண்டு பேரும் தங்கினார்கள். ஒட்டிக் கொள்ளும் இந்த இளைஞனை பாலாவுக்கு வெகுவாகப் பிடித்திருந்தது. இப்பொழுது யாழ்ப்பாணத்திலே மிக முரண்பாடான ஒரு சூழலிலே, அதுவும் திலீபனின் உயிர் ஒடுங்கிக் கொண்டிருக்கும் கட்டத்தில் அவரைச் சந்திப்பது, பாலாவுக்கு ஆற்றொணாத் துயர் தரும் ஒரு சந்திப்பாக இருந்தது.

(தொடரும்...)






## கறுப்பு ஜீலை தினத்தையொட்டி

# லண்டனில் நடைபெற்ற ஓவியக் கண்காட்சி

ஜீலை மாதம் தமிழ் மக்களின் ஆத்மாவில் என்றும் ஆறாத கடும் வடுவாக இன்றும் பதிவாகி உள்ளது. கறுப்பு ஜீலை தினத்தையொட்டி ஓவியக் கண்காட்சி லண்டனின் மத்திய பகுதியில் இடம்பெற்றது. இது பல்வேறு வேற்றின மக்களை கவரக் கூடியதாக இருந்தது.




# நாடு கடந்த தமிழீழ அரசு லண்டனில் நடத்திய விளையாட்டு விழா!

நாடு கடந்த தமிழீழ அரசின் ஏற்பாட்டில் லண்டன், மொடன் பார்கில் கடந்த ஞாயிற்றுக்கிழமை நடைபெற்ற விளையாட்டுப் போட்டியில் பங்குபற்றிய அணிகள் அழைத்துவரப்படுவதையும், விளையாட்டுக்குத் தயாராகிய நிலையில் அணி ஒன்று நிற்பதையும், கரப்பந்தாட்டத்தில் வெற்றி பெற்ற அணியையும் இங்கு காணலாம்.

(எ-100)





# பாரம்பரிய தமிழ்க் கலைகளை வெளிப்படுத்திய லண்டன் டார்ட்போர்ட் தமிழ் அறிவியற் கழக ஆண்டு விழா!






லண்டன் டார்ட்போர்ட தமிழ் அறிவியற் கழகத்தில் இடம்பெற்ற ஆண்டு நிறைவு விழா அண்மையில் நடைபெற்றது. இதில் ஏராளமானோர் பங்குபற்றினார்கள். லண்டன் மற்றும் கென்ற் எல்லைப்பகுதியில் கடந்த ஏழு வருடங்களாக தமிழ்ப் பிள்ளைகளுக்கு கல்வி பயிற்றுவித்து வரும் தமிழ் அறிவியற் கழகம் தனது ஆண்டு நிறைவையொட்டி கலை விழாவை ஏற்பாடு செய்திருந்தது.

மங்கல விளக்கேற்றலுடன் ஆரம்பித்த நிகழ்வில் முதலில் வீரமறவர்களுக்கு அகவணக்கம் செலுத்திய பின்பு பாடசாலை கீதத்துடன் கலை நிகழ்வுகளை ஆரம்பித்தார்கள்.

நூற்றுக்கும் அதிகமான மாணவர்களை கொண்டுள்ள பாடசாலையில் கடந்த ஆண்டு தமிழீழத் தேசியக் கொடியேற்றலுடன் மெய்வன்மைப் போட்டியைச் சிறப்பாக செய்து முடித்திருந்தார்கள். பலராலும் வர வேற்கப்பட்ட நிகழ்வுகள் மற்றும் தாயகம், தேசியம் போன்றனவற்றை அடுத்த தலை முறைக்கு எடுத்துச் சொல்லும் வகையில் அமைந்திருந்தன.

அதேபோல இந்த வருடம் கலை விழா




ஊடாக தமிழ் பாரம்பரிய கலைகளை வெளிக்கொண்டு வந்தார்கள். முப்பதுக்கும் மேற்பட்ட நிகழ்வுகள் ஏழு மணித்தியாலங்கள் தொய்வின்றி இடம்பெற்றன. சிறுவர்கள் முதல் இளையவர்கள் வரை தங்களது திறமைகளை வெளிக்கொண்டு வந்திருந்தார்கள். முக்கியமாக மண்ணின் மைந்தர்களை நாடகக் கலை மூலமும் பாடல்கள் மூலமும் அரங்கேற்றினார்கள். அத்தோடு மட்டும் நின்றுவிடாமல் தாயகத்தில் இரவிரவாக இடம்பெறும் காத்தவராயன் கூத்தினை அரங்கேற்றி பலத்த வரவேற்பைப் பெற்றார்கள் மாணவர்கள். நிகழ்வுகள் முடியும் வரை காத்திருந்த அனைத்து தமிழ் மக்களும் மாணவர்களை வாழ்த்தி வரவேற்றார்கள்.

நிகழ்வின் அடுத்த பகுதியாக யோக தினேஷ் வழங்கிய பட்டிமன்றம் இடம்பெற்றது. பட்டிமன்றத் தலைப்பாக ‘‘தமிழ் மக்களுக்கு மகிழ்ச்சி புலத்திலா தாயகத்திலா?’’ என்ற விவாதத்தோடு பெற்றோர்கள மிறங்கினார்கள் இறுதியில் தாயகம் அணி வெற்றியைத் தட்டிக் கொண்டது.

இதைவிட கும்மி நடனம், கோலாட்டம், வேப்பிலை நடனம், காவடி நடனம், பரதநாட்டியம், வயலின், கர்ணன் நாடகம், பண்டாரவன்னியன் நாடகம், தாளலயம் என பல்சுவை நிகழ்ச்சிகள் இடம்பெற்று ஆசிரியர்கள் மதிப்பளிப்போடு நிகழ்வு இனிதே நிறைவுபெற்றது. (எ)

# கடன் சுமையை எதிர்கால சந்ததியிடம் ஒப்படைப்பதற்கு அரசு தயாரில்லை

கொழும்பு, ஓக. 03

இலங்கையின் கடன் சுமையை அதிகரிக்க அரசு எதிர்பார்க்கவில்லை. அது மட்டுமன்றி அந்தக் கடன் சுமையை எதிர்காலச் சந்ததியிடம் ஒப்படைக்கவும் அரசு தயாரில்லை என பிரதமர் ரணில்விக்கிரமசிங்க தெரிவித்துள்ளார்.

மொறட்டுவை பிறின்ஸ் வேல்ஸ் கல்லூரியில் புதிதாக நிர்மாணிக்கப்பட்டுள்ள நீச்சல் தடாகத்தைத் திறந்து வைக்கும் நிகழ்வில் நேற்றுமுன் தினம் கலந்து கொண்டு பிரதமர் இந்தக் கருத்துக்களைவெளியிட்டுள்ளார்.



## பிரதமர் ரணில் விக்கிரம சிங்க தெரிவிப்பு

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

தற்போதைய சந்ததியுடன் இந்தக் கடன் சுமையை நிறைவுக்குக் கொண்டு வருவது அரசின் நோக்கமாகும்.

கல்வித்துறையின் அபிவிருத்திக்கு உதவும் வகையில் சிறந்த பொருளாதாரமொன்றைக் கட்டியெழுப்ப அரசு நடவடிக்கை எடுத்து வருகின்றது.

எதிர்வரும் 2 வருடங்களுக்குள் பாடசாலை மாணவர்களுக்கு 'டப்லெட்' கணினிகளை வழங்க திட்டமிட்டு வருகிறோம்.

தொழில்நுட்பத்துறையில் முன்னேறிய ஒரு நாட்டை எதிர்காலச் சந்ததியிடம் ஒப்படைக்க அரசு நடவடிக்கை எடுத்து வருகிறது.

போதைப்பொருள் பாவனையை ஒழிப்பதற்கும் பெரிய அளவில் கைத்தொழில்களை ஆரம்பித்து வாழ்க்கைத் தரத்தை மேம்படுத்துவதற்கும் அரசு நடவடிக்கை எடுத்துள்ளது என்றும் பிரதமர் சுட்டிக் காட்டியுள்ளார்.

# ஷிரந்தி, யோஷிதவுக்கு எதிராக நீதிமன்ற உத்தரவைப் பெறும் பொலிஸ்!



கொழும்பு, ஓக. 03

பிரபல ரக்பி விளையாட்டு வீரர் வசீம் தாஜுதீன் கொலை சம்பந்தமாக முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷவின் மனைவி ஷிரந்தி ராஜபக்ஷ மற்றும் அவரது மகன் யோஷித ராஜபக்ஷ ஆகியோர் விசாரணைகளுக்காக குற்றப் புலனாய்வுதிணைக்களத்திற்கு வராது தவிர்த்து வருவதால் அதற்கு எதிராக நீதிமன்ற உத்தரவை பெற்றுக்கொள்ள உள்ளோம் என பொலிஸ் உயர் அதிகாரி ஒருவர் கூறியுள்ளார்.

கடந்த மாதம் 27 ஆம் 28 ஆம் திகதி குற்றப் புலனாய்வுத் திணைக்களத்தில் ஆஜராகுமாறு இவர்களுக்கு அழைப்பு விடுக்கப்பட்டிருந்தது.

எனினும், பல்வேறு காரணங்களை முன் வைத்து இருவரும் குற்றப்புலனாய்வுத்திணைக்களத்தில்ஆஜராகவில்லை என்பதுகுறிப்பிடத்தக்கது.

இந்த நிலையிலேயே, இவர்களுக்கு எதிராக நீதிமன்ற உத்தரவைப் பெற முடிவு செய்யப்பட்டுள்ளது எனத் தெரிவிக்கப்படுகிறது.

(க)

# அமைச்சுப் பதவியை உடன் ராஜினாமா செய்க; ரவி கருணாநாயக்கவிடம் பந்துல வலியுறுத்தல்!



கொழும்பு, ஓக. 03

அமைச்சர் ரவி கருணாநாயக்க உடனடியாக தனது அமைச்சுப் பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்று மஹிந்த அணியான பொது எதிரணி வலியுறுத்தியுள்ளது.

கொழும்பில் நேற்று முன்தினம் நடைபெற்ற பொது எதிரணியின் ஊடகவியலாளர் சந்திப்பில் கலந்து கொண்டு உரையாற்றிய நாடாளுமன்ற உறுப்பினர் பந்துல குணவர்த்தன மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

முன்னாள் ஜனாதிபதி மஹிந்த ராஜபக்ஷ பெற்றுக்கொண்ட கடனை அடைப்பதாகக் கூறி இவர்கள் செய்த வேலை என்ன? அது பெரும் கொள்ளையாகும். வரலாற்றில் அதிகமான கடன் பெற்றுக்கொண்ட காலப்பகுதி 2001 தொடக்கம் 2004 வரையிலான காலப்பகுதியே.

அப்போதைய பிரதமராக இருந்த ரணில் விக்கிரமசிங்க அரச நிதி முகாமைத்துவ சட்டத்தின் கீழ் அதிகூடிய கடன்தொகையாக 100 இற்கு 80 வீதம்வரை பெற்றுக் கொள்ளும் வகையில் மறு சீரமைப்புகளை மேற்கொண்டு கடன்களைப் பெற்றுக் கொண்டார்.

அதேபோல் கடந்த இரண்டு வருடகாலமாக நிதி அமைச்சராக இருந்த ரவி கருணாநாயக்க இதனை 83 சதவீதம் வரை கொண்டு சென்றுள்ளார். இதுதான் இவர்கள் மேற்கொண்டுள்ள நடவடிக்கை.

ரவி கருணாநாயக்கவுக்கு வெட்கம், பயம் ஏதும் இல்லாமையாலேயே அனைத்தையும் மேற்கொண்டு விட்டு ஒன்றும் செய்யாதவர் போன்று செயற்பட்டுக் கொண்டிருக்கின்றார்.

பெரிய ஊழலில் ஈடுபட்டுள்ள அவர் உடனடியாகத் தனது பதவியை இராஜினாமாச் செய்ய வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

# தலதா மாளிகைக்கான பாதையை திறந்தால் அத்திபாரம் ஆட்டம் காணும்!

## உயர் நீதிமன்றில் சட்டத்தரணி



கொழும்பு, ஓக. 03

கண்டி தலதா மாளிகைக்கு எதிரில் உள்ள பாதை திறக்கப்பட்டால் மாளிகையின் அத்திவாரத்திற்கு பாதிப்பு ஏற்படும் என, மாளிகையின் சார்பில் ஆஜரான சட்டத்தரணி உயர் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

கண்டி தலதா மாளிகைக்கு எதிரில் தற்போது மூடப்பட்டுள்ள ஏ-26 வீதியை மீளத்திறந்தால் அது மாளிகையின் அத்திவாரத்திற்குப் பெரியளவு ஆபத்தை ஏற்படுத்தும் என ஜனாதிபதியின் சட்டத் தரணி சஞ்சீவ ஜயவர்த்தன நேற்றுமுன் தினம் உயர் நீதிமன்றில் தெரிவித்துள்ளார்.

தலதா மாளிகைக்கு எதிரிலுள்ள பாதையைத் திறக்குமாறு கோரி தாக்கல் செய்யப்பட்டுள்ள அடிப்படை உரிமை மீறல் மனு குறித்த விசாரணைகளின்போது அவர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

அஸ்கிரி, மல்வத்து பீடங்களின் பீடாதிபதிகள் மற்றும் தியவன நிலமே ஆகியோரின் சார்பில் இந்தச் சட்டத்தரணி நீதிமன்றில் முன்னிலையாகியிருந்தார்.

105 வருடங்கள் பழமையான ஏ-26 வீதி சில ஆண்டுகளாக மூடப்பட்டுள்ளதாகவும், சில தடவைகள்இடைக்கிடையே திறக்கப்பட்ட போதிலும் தற்போது முழுமையாக மூடப்பட்டுள்ளது என மனுதாரர்கள் சுட்டிக் காட்டியுள்ளனர்.

பாதை மூடப்பட்டிருப்பதனால் வளி மாசடைதல் மற்றும் பெரியளவில் போக்கு வரத்து நெரிசல் என்பன ஏற்படுவதாகவும் தெரிவித்துள்ளனர்.

இதனால் அடிப்படை உரிமைகள் மீறப்பட்டுள்ளன என்று மனுதாரர்கள் தெரிவித்துள்ளனர்.

எனவே பாதையைத் மீளத் திறப்பதற்கு நடவடிக்கை எடுக்குமாறு கோரி அடிப்படை உரிமை மீறல் மனு தாக்கல் செய்யப்பட்டுள்ளது.

இந்த மனு எதிர்வரும் நவம்பர் மாதம் 13 ஆம் திகதி மீள விசாரணைக்கு எடுத்துக் கொள்ளப்பட உள்ளது.

# 2020 ஆம் ஆண்டு வரை அரசை மாற்ற இடமளியேன்; ஜனாதிபதி மைத்திரி!

கொழும்பு, ஓக. 03

2020ஆம் ஆண்டுக்கு முன்னர் இந்த அரசாங்கத்தை மாற்றுவதற்கு எவரையும் அனுமதிக்கப் போவதில்லை என்று ஜனாதிபதி மைத்திரிபால சிறிசேன தெரிவித்துள்ளார்.

துறைமுக அதிகார சபையின் 38 ஆவது ஆண்டு நிறைவை முன்னிட்டு ஏற்பாடு செய்யப் பட்டிருந்த நிகழ்வில் உரையாற்றிய போதே ஜனாதிபதி மைத்திரி இவ்வாறு கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-

அம்பாந்தோட்டைத் துறைமுக அபிவிருத்தித் திட்ட வரைவு உடன்பாடு, மஹிந்த ராஜபக்ஷ ஆட்சியில் இருந்த போது, கடந்த 2014 ஆம் ஆண்டு செப்ரெம்பர் 4 ஆம் திகதி கைச்சாத்திடப்பட்டிருந்தது. அப்போது மஹிந்த ராஜபக்ஷவும் அமைச்சரவையில் ஓர் அமைச்சராக இருந்தார்.

அதற்குப் பின்னர் பதவிக்கு வந்த இந்த அரசு, சீன நிறுவனத்துடன் பேச்சு நடத்தி, அவர்களுக்கு வழங்கத் திட்டமிடப்பட்டிருந்த நிலத்தின் அளவையும், 50 வீதமாக குறைத்துக் குத்தகை உடன்பாட்டை திருத்தியுள்ளோம்.

துறைமுக நகர உடன்பாட்டிலும், சீன நிறுவனத்துக்கு 240 ஏக்கர் நிலத்தை வழங்க மஹிந்த அரசு இணங்கியிருந்தது. அதனையும் குறைத்திருக்கிறோம்.

சங்கிரிலா விடுதித் திட்டத்துக்காக வழங்கப்பட்ட 6 ஏக்கர் காணிகளை மாத்திரம் மீளப்பெற முடியாதது துரதிஷ்டம். அது உறுதி மூலம் விற்கப்பட்டிருக்கிறது.

நான் நாட்டின் ஜனாதிபதியாக இருக்கும் வரையில், ஒருஅங்குல நிலத்தையேனும் எந்தவொரு நாட்டுக்கோ, நிறுவனத்துக்கோ விற்பதற்கு அனுமதிக்கமாட்டேன்.



அடுத்த நாடாளுமன்றத் தேர்தல் இன்னும் மூன்று ஆண்டுகளில் நடைபெறும்.

அதற்கு முன்னர் ஆர்ப்பாட்டங்கள், வேலை நிறுத்தங்களினால் நாட்டையும், பொது மக்களின் இயல்பு வாழ்க்கையையும் குழப்புவதன் மூலம், இந்த அரசை மாற்றியமைப்பதற்கு அனுமதிக்கப்படமாட்டாது.

இதனை இத்தகைய குழப்பங்களில் ஈடுபடுவோர் விளங்கிக் கொள்ள வேண்டும் என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

## அணிகள் இணைப்பு குறித்து மீண்டும் இரகசியப் பேச்சு:

# தினகரனை ஒதுக்கிவிட்டு அ.தி.மு.கவை கைப்பற்றுவதற்குப் பழனிச்சாமி தீவிரம்

தினகரனை கட்சிக்குள் வரவிடாமல் தடுத்து கட்சியைக் கைப்பற்றும் முயற்சியில் அ.தி.மு.கவின் இரு அணிகளும் மீண்டும் தீவிரம் காட்டி வருகின்றன. இதற்காக ஓ.பி.எஸ். அணியுடன் முதல்வர் பழனிச்சாமி அணியினர் இரகசியப் பேச்சு நடத்தி வருகின்றனர்.

அ.தி.மு.கவில் தற்போது ஓ.பி.எஸ், முதல்வர் பழனிச்சாமி, டி.டி.வி. தினகரன் ஆகியோர் தலைமையில் 3 அணிகள் செயற்பட்டு வருகின்றன. இரட்டை இலைச் சின்னம் பெற லஞ்சம் கொடுத்த வழக்கில் கைதான தினகரன், கடந்த ஜூன் 2ஆம் திகதி பிணையில் வெளியே வந்தார்.

அவரை தங்க தமிழ்ச் செல்வன், வெற்றிவேல் உள்ளிட்ட 35 அமைச்சர்கள் சந்தித்து ஆதரவு தெரிவித்தனர். தினகரனை விலக்கி வைப்பதாக அறிவித்த அமைச்சர்களையும் விமர்சித்தனர்.

ஓ.பி.எஸ், முதல்வர் பழனிச்சாமி அணிகள் இணைய 60 நாள்கள் கெடு விதிப்பதாகவும், அதற்குள் இணையாவிட்டால் ஓகஸ்ட் 5 முதல் தீவிர கட்சிப் பணிகளில் ஈடுபட உள்ளோம் எனவும் தினகரன் தெரிவித்தார்.

அதேசமயம், அணிகள் இணைப்புக்காக அமைக்கப்பட்ட குழுவை ஓ.பி.எஸ். கலைத்தார். ஆனால், பழனிசாமி தரப்பில் இணைப்பு முயற்சிகள் தொடர்கின்றன எனக் கூறி வருகின்றனர்.



இந்நிலையில், அணிகள் இணைப்புக்காக தினகரன் விதித்த 60 நாள்கள் கெடு நாளை 4ஆம் திகதியுடன் முடிவடைகின்றது. அதற்குள் இணையா விட்டால் நாளை மறுதினம் 5ஆம் திகதி கட்சித் தலைமை அலுவலகத்துக்கு வந்து நிர்வாகிகளைச் சந்திக்க தினகரன் முடிவு செய்துள்ளார் எனவும் அதற்காக மாவட்ட நிர்வாகிகளுக்கு அழைப்பு விடுத்துள்ளார் எனவும் நேற்றுமுன்தினம் தகவல்கள் பரவின.

நிருபர்களிடம் தினகரன் நேற்று கூறும்போது, ''இரு அணிகள் இணைப்புக்கான முயற்சி நடக்கவில்லை. துணை பொதுச்செயலாளராக என் பணியை தொடங்க உள்ளேன். மாவட்ட ரீதியாகச் சுற்றுப்பயணம் செய்து கட்சியை வலுப்படுத்த உள்ளேன்'' என்றார். தினகரனின் இந்த அறிவிப்பு முதல்வர் பழனிச்சாமி அணியை அதிர்ச்சிக்குள்ளாக்கியுள்ளது.

கட்சிக்குள் தினகரன் ஆதிக்கத்தைவிரும்பாதஅமைச்சர்கள், தலைமைச் செயலகத்தில் முதல்வர் பழனிச்சாமியுடன் ஆலோசித்தனர்.

அதைத் தொடர்ந்து நேற்று முன்தினம் மாலை அ.தி.மு.க. தலைமை அலுவலகத்தில் அமைச்சர்கள், மூத்த நிர்வாகிகளுடன் முதல்வர் பழனிச்சாமி முக்கிய ஆலோசனை நடத்தினார். அதில், தினகரனின் செயற்பாடு குறித்தும், அணிகள் இணைப்பு குறித்தும் விரிவாக ஆலோசிக்கப்பட்டுள்ளது. சசிகலா, தினகரன் குடும்பத்தை முழுமையாக ஒதுக்கி விட்டு, கட்சியைக்கைப்பற்றும் முயற்சியில் பழனிச்சாமி, ஓ.பி.எஸ் . அணிகள் தீவிரம் காட்டி வருகின்றன என அ.தி.மு.க வட்டாரங்கள் தெரிவிக்கின்றன. (ப)

மேற்கு வங்காளத்தில்

## 62 வயது மூதாட்டி வன்புணர்ந்து கொலை

மேற்குவங்காளத்தில் சுந்தர்பன் மாவட்டம் சந்தேஷ்காலி என்ற கிராமத்தில் 62 வயது மூதாட்டியை வன்புணர்ந்து கொலை செய்த சம்பவம் பெரும் பரபரப்பை ஏற்படுத்தியுள்ளது.

இம் மூதாட்டியின் வீட்டிற்கு அருகில் புதர் ஒன்று உள்ளது. இங்கு சமூக விரோதிகள் அமர்ந்து மது குடிப்பது வழக்கம். இதை அந்த மூதாட்டி கண்டித்து வந்தார். இதனால், ஆத்திரம் அடைந்த அவர்கள் மூதாட்டியை பழிவாங்குவதற்குத்திட்டமிட்டனர்.

கடந்த மாதம் 4ஆந் திகதி இரவு 10 மணிக்கு சாப்பிட்டு விட்டு வீட்டுக்கு வெளியே சென்ற மூதாட்டியை அந்த நபர்கள் புதர் பகுதிக்குள் வலுக் கட்டாயமாக இழுத்துச் சென்றனர்.

இந்தக் கும்பலில் 5 பேர் வரை இருந்தனர். அவர்கள் அந்த மூதாட்டியை மாறி மாறி வன்புணர்ந்தனர். ஆனாலும், ஆத்திரம் தீராத அவர்கள் இரும்புக் கம்பியால் அவரது வயிற்றுப் பகுதியில்குத்திக்கிழித்தனர்.

அது மட்டும் அல்லாமல் மதுபானப் போத்தல்களை உடைத்தும் இதே போல்குத்திதிணித்தனர். இதில் அவரது கர்ப்பப்பை சிதைந்ததோடு மட்டும் அல்லாமல் குடலும் சேதம் அடைந்தது. பின்னர் அவரை அங்கேயே போட்டு விட்டு அவர்கள் தப்பி ஓடி விட்டனர்.

கொல்கத்தாவில் உள்ள அரசு வைத்தியசாலையில் ஆபத்தான நிலையில் இருந்த அவர் சிகிச்சை பலன் அளிக்காமல் 27 நாள்களுக்கு பிறகு உயிரிழந்துள்ளார்.

இந்தச் சம்பவம் தொடர்பாக ராஜேஸ்வர் மைதி (52 வயது) என்பவர் கைது செய்யப்பட்டுள்ளார். அவர் மட்டுமே இந்த செயலில் ஈடுபட்டார் எனக் கூறப்படுகிறது. இது சம்பந்தமாக பொலிஸார் வழக்கு பதிவு செய்து மேலதிக விசாரணையை நடத்தி வருகிறார்கள். (ப)



## 'அடிமைச் சங்கிலி' அணிந்து விவசாயிகள் போராட்டம்

டெல்லியில் நேற்று முன்தினம், தமிழக விவசாயிகள் தங்களது உடலில் 'அடிமைச்சங்கிலி' அணிந்து போராட்டம் நடத்தினார்கள்.

முதல்கட்டமாக 41 நாள்கள் போராட்டம் நடத்திய அவர்கள் கடந்த மாதம் 16ஆம் திகதி 2ஆம் கட்டப் போராட்டத்தைத் தொடங்கினர். 2ஆம் கட்டப் போராட்டம் நேற்று முன்தினம் 17ஆவது நாளாகவும் நீடித்தது.

இதனையொட்டி நேற்று 4 விவசாயிகள் தங்களது உடலில் அடிமைச் சங்கிலியை அணிந்து கொண்டனர். அவர்களுடன் சேர்ந்து அய்யாக்கண்ணு உள்ளிட்ட பிற விவசாயிகள் ஜந்தர் மந்தர் வீதியில் ஊர்வலமாகச் சென்றனர்.

இதற்கிடையே, போராட்டம் நடத்திய விவசாயிகளில் 4 பேர் காய்ச்சலால் பாதிக்கப்பட்டு அருகில் உள்ள அரச வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டுள்ளனர். கடந்த 2 நாள்களுக்கு முன்பும் சில விவசாயிகள் காய்ச்சலால் பாதிக்கப்பட்டனர்.

அவர்களுக்கும் அரச வைத்தியசாலையில் போதிய மருத்துவ வசதிகள் வழங்கப்படவில்லை எனக் குற்றம் சாட்டப்பட்டுள்ளது.

இது குறித்து அய்யாக்கண்ணு கூறுகையில், டில்லி அரசு வைத்தியசாலையில் 20 ரூபாவுக்கும் குறைவான மருந்துகளையே தருகிறார்கள். அதற்கும் கூடுதல் விலையுள்ள மருந்துகளை தனியார் வைத்தியசாலையில் விலை கொடுத்து வாங்கச் சொல்கிறார்கள் என்று தெரிவித்துள்ளார். (ப)

## லஞ்சம் தர மறுத்த கர்ப்பிணி மீது அசிட் வீசிய தாதி!

200 ரூபா லஞ்சம் கொடுக்க மறுத்த இளம் பெண் மீது தாதி ஒருவர் அசிட்டை வீசிய சம்பவம் ஆந்திராவில் பரபரப்பை ஏற்படுத்தி உள்ளது.

விஜயவாடாவை அடுத்த கிருஷ்ணா ஜில்லாவை சேர்ந்தவர் கிரிஜாபிரியா (வயது22). நிறைமாதகர்ப்பிணியான இவரை விஜயவாடா அரசு வைத்தியசாலையில் அனுமதித்தனர்.

அங்கு அவருக்கு ஆண் குழந்தை பிறந்தது. அப்போது, அங்கு பணியில் இருந்ததாதி செரிபா, தன்னுடன் சேர்த்து தாதி 2 பேர் உள்ளோம். எங்களுக்கு தலா 200 ரூபா லஞ்சமாகத் தரவேண்டும் என்று கூறியுள்ளார்.

அதற்குகிரிஜாபிரியா, தன்னுடைய குழந்தையை பார்க்க வந்தவர்கள் கொடுத்த 200 ரூபா பணம் மட்டுமே தன்னிடம் உள்ளதாகவும் அதைப் பெற்றுக் கொள்ளும் படி கூறியுள்ளார்.

இதைக்கேட்டு ஆத்திரம் அடைந்த தாதி செரிபா, கழிவறைக்கு பயன்படுத்தும்அசிட்டை எடுத்து வந்து கிரிஜா பிரியா மீது ஊற்றிக் கொல்ல முயன்றார்.

இதில், கிரிஜா பிரியாவின் கை, கால்களில் பலத்த காயங்கள் ஏற்பட்டுள்ளன. இது குறித்து, தகவல் அறிந்த வைத்தியசாலை சுகாதார அலுவலர் வைத்தியர் ராமாராவ் விசாரித்து வருகிறார். மேலும், விஜயவாடா பொலிஸார் வழக்குப் பதிவு செய்து விசாரணை நடத்தி வருகின்றனர்.

## புனேயில் பன்றிக்காய்ச்சல்; சாவு எண்ணிக்கை 80 ஆக உயர்வு

புனேயில் பன்றிக்காய்ச்சல் வேகமாகப் பரவி வருகின்றது. இப்பன்றிக் காய்ச்சல் நோயினால் சாவு அடைந்தவர்களின் எண்ணிக்கை 80 ஆக உயர்வடைந்துள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

H1N1 எனப்படும் கொடிய நச்சுக்கிருமிகளின் தாக்கத்தால் பன்றிக் காய்ச்சல் நோய் உருவாகின்றது. குறிப்பாக, மழைக் காலங்களில் உருவாகும் கொசுக்கள் இந்த நோயைப் பரப்புவதற்கான காரணியாகக் கண்டறியப் பட்டுள்ளது.

மகாராஷ்டிரா மாநிலம் புனே மாவட்டத்தில் வேகமாகப் பரவி வரும் பன்றி காய்ச்சலில் நேற்று முன்தினம் மாலை இரண்டு பேர் மரணமடைந்தனர்.

இதுகுறித்து புனே மாநகராட்சி அலுவலகம் நேற்று வெளியிட்ட செய்தி குறிப்பில், புனேயில் பன்றிக்காய்ச்சலின் தாக்கம் அதிகமாக உள்ளது. கடந்த ஜனவரி மாதம் முதல் இதுவரை 80 பேர் பன்றிக்காய்ச்சலால் இறந்துள்ளனர். மேலும் 375 பேர் பன்றிக்காய்ச்சலால் பாதிக்கப்பட்டுள்ளனர்.

மேலும்,11 பேர்பன்றிக்காய்ச்சல் நோயால் பாதிக்கப்பட்டு மருத்துவமனையில் தீவிர சிகிச்சை பெற்று வருகின்றனர் எனத் தெரிவிக்கப்படுகிறது. (ப)

# ஆப்கானிஸ்தானில் மசூதி மீது தாக்குதல்!



## 29 பேர் உயிரிழப்பு; 63 பேர் காயம்

காபூல், ஓக. 03

ஆப்கானிஸ்தானில் ஷியா மசூதி மீது நடத்தப்பட்ட தற்கொலைப் படைத் தாக்குதலில் 29 பேர் பரிதாபமாக உயிரிழந்துள்ளனர். அத்துடன் 63 பேர் காயம் அடைந்துள்ளனர்.

ஆப்கானிஸ்தான் - ஈரான் எல்லையருகே உள்ள நகரம் ஹெராத். இங்கு ஷியா முஸ்லிம்கள் வழிபடும் ஜவாத்யா என்ற மசூதி உள்ளது.

இந்த மசூதிக்குள் நேற்று முன்தினம் திடீரென இரண்டு மர்ம மனிதர்கள் நுழைந்தனர். அவர்களில் ஒருவன் தனது உடலில் வெடிகுண்டுகளை கட்டிக்கொண்டு தற்கொலைப் படையாக வந்துள்ளான். மற்றொருவனும் துப்பாக்கியுடன் வந்துள்ளான்.

மசூதி வளாகத்துக்குள் நுழைந்ததும் தற்கொலைப் படையாக வந்தவர் தன்னுடைய உடலில் உள்ள வெடிகுண்டை வெடிக்கச் செய்தான்.

மற்றொருவர் தான் வைத்திருந்த துப்பாக்கியால் சரமாரியாகச் சுட்டுள்ளார். இதில் 29 பேர் பரிதாபமாக உயிரிழந்தனர். 63 பேர் காயம் அடைந்துள்ளனர். காயம் அடைந்துள்ளவர்கள் அருகில் உள்ள மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர்.

தாக்குதல் நடத்திய இருவரும் உயிரிழந்துள்ளனர் என்று ஹெராத் நகர பொலிஸ் செய்தி தொடர்பாளர் தெரிவித்துள்ளார்.

காபூலில் உள்ள ஈராக் தூதரகம் மீது நடத்தப்பட்ட தாக்குதலுக்கு ஐ.எஸ். தீவிரவாதிகள் பொறுப்பேற்ற ஓரிரு நாளில் இந்தத் தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது என்பது குறிப்பிடத்தக்கது.

(க)

## பிரான்ஸில் குடும்ப உறுப்பினர்களை பணியில் அமர்த்த எம்.பிக்களுக்கு தடை!



பாரீஸ், ஓக. 03

பிரான்ஸ் நாட்டின் நாடாளுமன்ற எம்.பிக்கள், அமைச்சர்கள், தங்களது குடும்ப உறுப்பினர்களை உதவியாளர்பணியில் அமர்த்த தடை விதிக்கப்பட்டுள்ளது.

பிரான்ஸில் புதிய சட்டம் கொண்டுவரப்பட்டுள்ளது.

அதன்படி அமைச்சர்கள் மற்றும் எம்.பிக்கள் தங்களது நாடாளுமன்ற உதவியாளராக மனைவி மற்றும் மகள், மகனை வைத்துக் கொள்ளக் கூடாது.

அதை மீறினால் 3 ஆண்டு சிறையில் தண்டனை விதிக்கப்படும். மேலும் 40 லட்சம் ரூபா அபராதமும் வசூலிக்கப்படும் என்றும் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## லெபனான் - சிரியா கைதிகள் பரிமாற்றம்



லெபனான் தளபதி விடுவிக்கப்பட்டார்

லெபனான் மற்றும் சிரிய நாடுகளுக்கு இடையேநேற்றுக்காலை நடைபெற்ற கைதிகள் பரிமாற்றத்தில் லெபனான் ராணுவ தலைமை தளபதி நேற்று அதிகாலை விடுவிக்கப்பட்டுள்ளார்.

கடந்த 1982 ஆம் ஆண்டு தொடக்கம் 2000 ஆம் ஆண்டு வரை தெற்கு லெபனானில் நிலைகொண்டிருந்த இஸ்ரேலிய படையினரை எதிர்த்துப் போராடவெனஉருவான ஹிஸ்புல்லா இயக்கம், லெபனானின் அரசியல் கட்சியாகவும், ஆயுத மேந்திய போராளி இயக்கமாகவும் உள்ளது.

சிரியா, ஈரான் உள்ளிட்ட நாடுகளிலும் மிக வேகமாக வளர்ந்துவரும் ஹிஸ்புல்லா இயக்கத்தை அமெரிக்க ஐக்கிய நாடுகளும் இங்கிலாந்தும் பயங்கரவாத இயக்கங்களின் பட்டியலில் இணைத்துள்ளன.

பெரும்பாலும் ஷியா பிரிவு முஸ்லிம்களுக்கு ஆதரவான இந்த இயக்கத்தை சேர்ந்த ஆயிரக்கணக்கானவர்கள், அண்டைநாடான சிரியாவில் அதிபர் பஷர் அல் ஆசாத்துக்கு எதிராக போராடிவரும் மக்களை ஒடுக்க அங்கு மோதலில் ஈடுபட்டு வருகின்றனர்.

அவர்களுக்கு ஷியா ஆதரவு நாடான ஈரான் பெரும் உதவிகளைச் செய்து வருகிறது.

சிரியா மற்றும் லெபனான் எல்லைப் பகுதியில் அல்-நுஸ்ராமற்றும் ஹிஸ்புல்லா ஆகிய இரு தரப்பினரும் எதிர் தரப்பைச் சேர்ந்தவர்களைக் கைது செய்து பிணைக் கைதிகளாக பிடித்து வைக்கின்றனர். பின்னர், சமாதானப் பேச்சின் மூலமாக கைதிகள் பரிமாற்றம் நடப்பதுண்டு.

அந்தவகையில், லெபனான் நாட்டின் ஹிஸ்புல்லா இயக்கத்தை சேர்ந்த மூன்று பிணைக் கைதிகளை அல்-நுஸ்ரா அமைப்பினர் நேற்று அதிகாலை விடுவித்தனர். இதற்கு ஈடாக அல்-நுஸ்ரா தீவிரவாதிகள் மூன்று பேர் விடுவிக்கப்பட்டனர்.

## சில விடயங்களில் வடகொரியாவுடன் பேச்சு நடத்த விரும்புகிறது அமெரிக்கா!

குறிப்பிட்ட சில விடயங்களில் வட கொரியாவுடன் பேச்சுநடத்த அமெரிக்க விரும்புகிறது என்று அமெரிக்க வெளியுறவுத்துறை செயலாளர் ரெக்ஸ் டில்லெர்சன் கூறியுள்ளார்.

அமெரிக்காவிற்கு மிரட்டல் விடுக்கும் வகையில் வட கொரியா ஜனாதிபதி கிம் ஜாங் தொடர்ந்து ஏவுகணைச் சோதனை நடத்தி வருகிறார். ஒட்டுமொத்த அமெரிக்காவும் எங்கள் தாக்குதல் இலக்குக்குள் வந்துவிட்டது என்று சமீபத்தில் கிம் ஜாங் எச்சரிக்கை விடுத்திருந்தார்.

அதேவேளையில் , தென் கொரியாவுடன் இணைந்து அமெரிக்க வடகொரியா எல்லையில் போர் ஒத்திகை செய்து வருகிறது.

வடகொரியா மிரட்டலுக்கு பதிலடி கொடுக்கும் வகையில் எல்லையில் அமெரிக்க விமானங்கள் பறந்து வரும் நிகழ்வும் நடைபெற்று வருகிறது.

இந்த நிலையில், சில விடயங்களில் வடகொரியாவுடன் பேச்சு நடத்த அமெரிக்கா விரும்புகிறது என அந்த நாட்டின் வெளியுறவுத் துறை செயலாளர் ரெக்ஸ் டில்லெர்சன் கூறியுள்ளார்.

இதுதொடர்பில் அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:-



‘‘நாங்கள் அரசு மாற்றத்தை நாடவில்லை. அரசு கவிழ வேண்டும் என்றும் நாடவில்லை. வட கொரியா எல்லை நோக்கி ராணுவத்தை அனுப்புவதற்கான மன்னிப்பும் கோரவில்லை. தீபகற்பத்தின்ஒன்றிணைப்பைதுரிதப்படுத்தவும் முயற்சிக்கவில்லை.

நாங்கள் உங்களுடைய எதிரி அல்லர். ஆனால், நீங்கள் எங்களுக்கு ஏற்றுக்கொள்ள முடியாத அச்சுறுத்தலை வழங்குகிறீர்கள். அதற்கு நாங்கள் பதிலடி கொடுக்கிறோம். சில விடயங்களை அவர்கள் புரிந்து கொள்வார்கள் என்று நாங்கள் நம்புகிறோம். நாங்கள் அவர்களுடன் உட்கார்ந்து பேச விரும்புகிறோம்’’ என்றும் அவர் தெரிவித்துள்ளார்.

### உட்கார்ந்து பேசவும் தயார் என்கிறார் வெளியுறவுச் செயலர்

(க)

## சிலி நாட்டின் தலைநகரில் நிலநடுக்கம்!

சான்ட்டியாகோ, ஓக. 03

சிலி நாட்டின் தலைநகரான சான்ட்டியாகோ நகரின் வடகிழக்குப் பகுதியில் நேற்று பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டுள்ளது.

பசிபிக் பெருங்கடலின் ஓரத்தில் தென் அமெரிக்கா கண்டத்தின் வடக்கு மூலையில் அமைந்துள்ள சிலி நாடு புவியியல் அமைப்பின்படி அடிக்கடி நிலநடுக்கத்துக்குள்ளாகும் ‘நெருப்பு வளையம்’ பகுதியில் உள்ளது. இந்த நிலையில், உள்ளூர் நேரப்படி நேற்றுக் அதிகாலை 3.15 மணியளவில் பயங்கர நிலநடுக்கம் ஏற்பட்டது.

இதன் விளைவாக வீடுகள் கட்டடங்கள் குலுங்கின. தூக்கத்தில் இருந்த மக்கள் பீதியால் அலறியபடி தங்களது வீடுகளை விட்டு வெளியேறி வீதிகளில் திரண்டு நின்றனர்.

சான்ட்டியாகோ நகரின் வட கிழக்கே சுமார் 36 கிலோமீற்றர் தூரத்தில் ஏற்பட்ட இந்த நிலநடுக்கம் ரிக்டர் அளவு கோலில் 5.4 அலகுகளாக பதிவானதாக ஐரோப்பிய புவிசார் ஆய்வு மையம் தெரிவித்துள்ளது. இந்த நிலநடுக்கத்தால் ஏற்பட்ட சேதங்கள் தொடர்பாக உடனடி தகவல் ஏதும் வெளியாகவில்லை. சுனாமி எச்சரிக்கை ஏதும் விடுக்கப்படவில்லை என உள்நாட்டு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

(க)



# 2ஆவது டெஸ்ட் போட்டி;
# தொடரைச் சமநிலை செய்யுமா இலங்கை?

இலங்கைஇந்திய அணிகள் மோதும் 2ஆவது டெஸ்ட் போட்டி கொழும்பில் இன்று தொடங்குகின்றது. முதல் டெஸ்டில் படு தோல்வி அடைந்த இலங்கை அணி 2 ஆவது டெஸட்டில் அதிரடியாக விளையாடித் தொடரைச் சமன் செய்யும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

விராட் கோஹ்லி தலைமையிலான இந்திய கிரிக்கெட் அணி இலங்கையில் சுற்றுப்பயணம் செய்து விளையாடி வருகிறது.இரு அணிகள் இடையேயான 4 டெஸ்ட் போட்டித் தொடரில் காலி மைதானத்தில் நடந்த முதல் டெஸ்டில் இந்தியா 304 ஓட்ட வித்தியாசத்தில் அபார வெற்றி பெற்றது. இந்தியா - இலங்கை அணிகள் மோதும் 2ஆவது டெஸ்ட் போட்டி கொழும்பில் இன்று தொடங்குகின்றது.

முதல் டெஸ்டை போலவே இந்த டெஸ்டிலும் வென்று 2:0 என்ற கணக்கில் வென்று முன்னிலை பெறும் ஆர்வத்துடன் இருக்கும் இந்திய அணியின் எண்ணங்களுக்கு முற்றுப் புள்ளி வைத்து 1:1 என்ற கணக்கில் தொடரைச் சமன் செய்யும் என்று எதிர்பார் கப்படுகிறது.

உபுல் தரங்கா, கருணா ரத்ன, குணதிலகா, ஹெரத், பெர்னாண்டோ போன்ற சிறந்த வீரர்களும் அணியில் உள்ளனர். முதல் டெஸ்டில் ஏற்பட்ட தோல்விக்குப் பதிலடி கொடுக்கும் ஆர்வத்தில் இலங்கை அணி உள்ளது. 1:1 என்ற கணக்கில் தொடரைச் சமன் செய்ய இலங்கை வீரர்கள் கடுமையாகப் போராடுவார்கள்.

காயம் காரணமாக முதல் டெஸ்டில் விளையாடாத இலங்கை கப்டன் சந்திமால் நாளைய போட்டியில் இடம் பெறுகிறார். இதேபோல திரிமன்னேயும் அணியில் சேர்க்கப்பட்டுள்ளார். இந்த இருவரது வருகையால் அந்த அணி துடுப்பாட்டத்தில் பலம் பெறும் என்று எதிர்பார்க்கப்படுகிறது.

இரு அணிகளும் இன்று மோதும் போட்டி 40ஆவது டெஸ்ட் ஆகும். இதுவரை நடந்த 39 போட்டியில் இந்தியா 17இல், இலங்கை 7இல் வெற்றி பெற்றுள்ளன. 15 டெஸ்ட் 'ட்ரொ' ஆனது. இன்றைய போட்டி இலங்கை நேரப்படி காலை 10 மணிக்கு எஸ்.எஸ்.சி. மைதானத்தில் ஆரம்பமாகின்றது.

**இரு அணி வீரர்கள் விவரம்:-**

**இந்தியா:** விராட் கோஹ்லி (தலைவர்), தவான், அபினவ் முகுந்த், புஜாரா, ரகானே, ஹர்த்திக் பண்டையா, விருத்திமான் சகா, ரவீந்திர ஜடேஜா, அஸ்வின், முகமது ஷாமி, உமேஷ் யாதவ், ராகுல், ரோகித் சர்மா, புவனேஷ்வர் குமார், குல்தீப் யாதவ், இஷாந்த் சர்மா.

**இலங்கை:** சந்திமால் (தலைவர்), உபுல் தரங்க, கருணாரத்ன, குணதிலக, மென்டீஸ், மத்யூஸ், டிக்வெல்ல, தில்ருவன் பெரேரா, ஹேரத், பிரதீப், குஷல் பெரேரா, குணரத்ன, திரிமனே, தனஞ்செயன் டி சில்வா, லகிரு குமார, விஷ்வா பெர்னாண்டோ, நுவீன் பிரதீப், புஷ்பகுமார. சண்டகன். (ப)

# ஊக்க மருந்துப் பாவனை; அழிவில் மெய்வன்மை!


## உசேன் போல்ட் வேதனை

மெய்வல்லுனர்கள் மத்தியில் ஊக்கமருந்துப் பாவனை அதிகரித்தால் மெய்வன்மை விளையாட்டுகள் அழிவடைந்து விடும் என உலகின் அதிக வேக மனிதராக வர்ணிக்கப்படும் ஜமேக்காவின் உசேன் போல்ட் தெரிவித்துள்ளார்.

லண்டனில் எதிர்வரும் வெள்ளிக்கிழமை முதல் நடைபெறவுள்ள உலக சம்பியன்ஸிப் மெய்வல்லுனர் தொடர் குறித்து கருத்துத் தெரிவிக்கையிலேயே அவர் இதனைக் குறிப்பிட்டார். இதன்போது அவர் மேலும் கூறுகையில்,

மெய்வல்லுனர்கள் மத்தியில் ஊக்கமருந்துப் பாவனை இல்லாது செய்யப்பட வேண்டும். அல்லாத பட்சத்தில் மெய்வல்லுனர் விளையாட்டுகள் அழிவடைந்து விடும்.

மெய்வல்லுனர் போட்டிகளை முன் கொண்டு செல்வதற்கு வீரர்கள் நடைமுறை அறிந்து விழிப்புடன் செயற்பட வேண்டும் எனக் கூறினார்.



லண்டன் உலக சம்பியன்ஸிப் மெய்வல்லுனர்தொடரில் 100 மீற்றர் மற்றும் 100 மீற்றர் அஞ்சல் ஓட்டம் ஆகிய போட்டிகளில் பங்கேற்கும் உசேன் போல்ட், இத்தொடரோடு ஓய்வு பெறவுள்ளமை குறிப்பிடத்தக்கது. (ப)




# மிதாலி ராஜுக்கு கிடைத்த பரிசு

இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் கப்டன் மிதாலி ராஜூக்கு பி.எம்.டபிள்யூ. காரை, தெலுங்கான பட்மின்டன் சங்கத் துணைத் தலைவர் வி.சாமுண்டேஷ்வர் நாத் பரிசாக வழங்கினார்.

இந்திய மகளிர் கிரிக்கெட் அணியின் கப்டன் மிதாலி ராஜுக்கு பி.எம்.டபிள்யூ. காரை, தெலுங்கான பட்மின்டன் சங்கத் துணைத் தலைவர் வி.சாமுண்டேஷ்வர்நாத் பரிசாக வழங்கினார்.

இதற்கான விழா ஹைதராபாத் கச்சிபவுலியில் உள்ள கோபிசந்தி பட்மிண்டன் அக்கடமியில் நடைபெற்றது. சாமுண்டேஷ்வர்நாத் கூறும்போது, மகளிர் கிரிக்கெட்டில் அதிக ஓட்டங்களைக் குவித்து மிதாலி ராஜ் சாதனை படைத்ததும், அவருக்கு பி.எம்.டபிள்யூ. கார் பரிசாக வழங்கப்படும் என நாங்கள் அறிவித்தோம். வாக்குறுதி கொடுத்தபடி தற்போது வழங்கி உள்ளோம் என்று தெரிவித்துள்ளார்.

இதுமட்டும்அல்லாது ரியோ ஒலிம்பிக்கில் பதக்கம் வென்ற பி.வி. சிந்து, ஜிம்னாஸ்டிக்கில் 4ஆவது இடம் பிடித்த தீபா கர்மகார், பட்மின்டன் பயிற்சியாளர் கோபி சந்த் உள்ளிட்டோருக்கும் அவர்களது திறமையைப் பாராட்டி கார்களை பரிசாக ஏற்கெனவே சாமுண்டேஷ்வர்நாத் வழங்கி உள்ளார் என்பது குறிப்பிடத்தக்கது.(ப)

# சம்பள விவகாரத்திற்கு தீர்வு ஏற்பட்டாலேயே பங்களாதேஷ் தொடர்!

## ஆஸி.கப்டன் ஸ்மித் திட்டவட்டம்

கிரிக்கெட் ஆஸ்திரேலியாவுக்கும் ,ஆஸ்திரேலிய கிரிக்கெட் வீரர்கள்அமைப்புக்கும்இடையே நடைபெற்று வரும் சம்பள விவகாரம் முடிவுக்கு வந்தால்தான் பங்களாதேஷ் தொடருக்குச் செல்வோம் என்று ஆஸ்திரேலிய கப்டன் ஸ்டீவ் ஸ்மித் திட்டவட்டமாகத் தெரிவித்துள்ளார்.

நீண்ட நாள்களாக இதைத் தான்கூறிக்கொண்டுவருகிறோம், முதலில் ஒப்பந்தம். ஆஸ்திரேலியா ஏ அணியினர் தென் ஆப்பிரிக்கா தொடரைப் புறக்கணித்துள்ள போது நாங்கள் மட்டும் பங்களாதேஷ் தொடருக்குச் சென்றால் அது நியாயமாகாது.

கிரிக்கெட் ஆஸ்திரேலியாவுக்கும் இதைத் தெரியப்படுத்தியிருக்கிறோம், அவர்களுக்குத் தெரியும். நான் பாட் ஹோவர்டிடம் தனிப்பட்ட முறையிலும் எடுத்துக் கூறினேன், முதலில் ஒப்பந்தம் பிறகு கிரிக்கெட் என்று.

பேச்சு முன்னேற்றம் உள்ளது. எனக்குத் தனிபட்ட முறையில் இவை கடினமான கணங்கள். இவை யெல்லாம் முடிந்த பிறகு நான் பாட் ஹோவார்ட், ஜேம்ஸ்சதர்லேண்ட் ஆகியோரை நான் கையாள வேண்டும், எனவே என்ன மாதிரியான பாதையில் நான் பயணிக்கிறேன் என்பதில் நான் கவனமாக இருக்க வேண் டும் என்று தெரிவித்துள்ளார்.



# 2024 ஒலிம்பிக் போட்டிகள் பாரிஸில் நடைபெறும்




2024ஆம் ஆண்டுக்கான கோடைக்கால ஒலிம்பிக் போட்டிகள் பாரிஸிலும், 2028ஆம் ஆண்டுக்கான போட்டிகள் அமெரிக்காவின் லொஸ் ஏஞ்சல்ஸிலும் நடைபெறவுள்ளதாக தகவல்கள் வெளியாகியுள்ளன.

2020ஆம் ஆண்டிற்கான போட்டிகள் ஜப்பானில் நடைபெறவுள்ளது. 2024ஆம் ஆண்டுக்கான போட்டிகளை நடத்துவது குறித்து பாரிஸ் மற்றும் லொஸ் ஏஞ்சல்ஸ் நகர்களுக்கிடையே போட்டி நிலவி வந்த நிலையிலேயே இத்தகவல் வெளியாகி யுள்ளது.

எனினும், இத்தகவல் உறுதிபடுத்தப்படாத நிலையில், இது தொடர்பான அதிகார பூர்வத் தகவல்களை சர்வதேச ஒலிம்பிக் கவுன்சில் விரைவில் வெளியிடும் என எதிர்பார்க்கப்படுகிறது.




## அடம் பிடிக்கும் பிரபல வீரரின் மகன்

இன்னும் தனக்கு நான்கு தம்பி, தங்கை வேண்டும் என்று பிரபல உதைபந்து வீரரான கிறிஸ்டியன் ரோனால்டோவின் மகன் கூறியுள்ளார்.

உதைபந்தாட்ட வீரர் ரொனால்டோ இன்னும் திருமணம் புரிந்து கொள்ளவில்லை. இருப்பினும் இரண்டு மகன்கள் ஒரு மகள் உள்ளனர்.

முதல் மகன் கிறிஸ்டியானோ ஜூனியர் அவரின் காதலிக்குப் பிறந்தவர். இதைத் தொடந்து ரொனால்டோவுக்கு அண்மையில் இரட்டை குழந்தைகள் பிறந்தன. ஆனால் குழந்தை பெற்றெடுத்தவர் அமெரிக்காவைச் சேர்ந்த வாடகைத் தாய்.

ரொனால்டோ போர்ச்சுகல் மற்றும் ரியல்மாட்ரிட் அணிகளுக்காக விளையாடும் போது, ஏழாம் எண் ஜெர்சி அணிந்துதான் விளையாடுவார். அது அவரின் அதிர்ஷ்ட எண்.

இந்நிலையில் மூத்த மகனான கிறிஸ்டியானோ, ஜெர்சிஎண்ணுக்குப்பொருத்தமாக வீட்டில் 7 சகோதர-சகோதரிகள் வேண்டுமென்று ஆசைப்படுவதாகவும், அதனால், மகனின் ஆசையைப் பூர்த்தி செய்யும்விதத்தில் தன் குழந்தைகளின் எண்ணிக்கையை ஏழாக உயர்த்த ரொனால்டோ திட்டமிட்டுள்ளார் எனக் கூறப்படுகிறது.

# சர்ச்சையான உலகக் கிண்ண தொடர்

## மௌனம் கலைத்த சுழற்பந்து ஜாம்பவான்!



கடந்த 2011ஆம் ஆண்டு நடைபெற்ற உலகக்கிண்ண கிரிக்கெட் தொடர் குறித்து பல்வேறான விமர்சனங்கள் எழுந்துள்ள நிலையில், இப்போட்டியில் இலங்கை அணி தோல்வியடைந்தமைக்கு அணியினால் மேற்கொள்ளப்பட்ட தவறான கணக்கீடுகளே காரணம் என அணியின் முன்னாள் சுழற்பந்து ஜாம்பவான் முத்தையா முரளிதரன் குறிப்பிட்டுள்ளார்.

இந்தியாவில் நடைபெற்ற அந்த உலகக்கிண்ண கிரிக்கெட் தொடரில், சூதாட்டம் இடம்பெற்றதாக இலங்கை அணியின் முன்னாள் தலைவர் அர்ஜூன ரணதுங்க குற்றஞ்சாட்டியிருந்தார். இதனால் பலதரப்பிலும் இவ் விவகாரம் காரசாரமாக விமர்சிக்கப்பட்டது.

இந்நிலையில், இவ் விவகாரம் குறித்து முதல்முறையாக முரளிதரன் மனம் திறந்துள்ளார். இது குறித்து அவர் கூறுகையில்; இந்திய அணியுடன் இடம்பெற்ற இந்த போட்டியில் இலங்கை அணியின் தோல்விக்கு அணியினால் மேற்கொள்ளப்பட்ட தவறான கணக்கீடுகளே காரணம்.

இலங்கை அணி இரண்டாவதாக துடுப்பாடியிருந்தால் இறுதிப் போட்டியில் வெற்றி பெற்றிருக்கக் கூடிய வாய்ப்புக்கள் அதிகமாக அமைந்திருக்கும் என்றும் தெரிவித்துள்ளார்.

மும்பையில் நடைபெற்ற இந்திய மற்றும் இலங்கை அணிகளுக்கிடையிலான இறுதிப்போட்டியில், நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்று முதலில் துடுப்பெடுத்தாடிய இலங்கை அணி, நிர்ணயிக்கப்பட்ட 50 ஓவர்கள் நிறைவில் 6 விக்கெட் இழப்புக்கு 274 ஓட்டங்களைப் பெற்றுக்கொண்டது.

அதனைத் தொடர்ந்து 275 என்ற வெற்றி இலக்கை நோக்கி பதிலுக்குக் களமிறங்கிய இந்திய அணி 48.2 ஓவர்கள் நிறைவில் 4 விக்கெட் இழப்புக்கு வெற்றி இலக்கை கடந்து 6 விக்கெட்டுகளால் வெற்றிபெற்றது. போட்டியின் ஆட்டநாயகனாக டோனி தெரிவுசெய்யப்பட்டார் என்பது குறிப்பிடத்தக்கது.



## அப்ரிடியின் தொண்டு நிறுவனத்திற்கு அன்பளிப்புச் செய்த கோஹ்லி

இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி, தான் கையெழுத்திட்ட துடுப்பாட்ட மட்டையை பாகிஸ்தான் முன்னாள் அணித் தலைவர் அப்ரிடியின் தொண்டு நிறுவனத்திற்கு நன்கொடையாக வழங்கியுள்ளார்.

இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான கிரிக்கெட் போட்டி பரம எதிரிகளுக்கு இடையிலான மோதல் என்று வர்ணிக்கப்படுவது வழமை. மைதானத்திற்குள்ளேயும், வெளியேயும் வீரர்களும் அப்படித்தான் நடந்து கொள்வார்கள். இந்திய ரசிகர்களும், பாகிஸ்தான் ரசிகர்களும் அந்தக் கண்ணோட்டத்தில்தான் போட்டியை ரசிப்பார்கள்.

இரு அணிகளும் மோதும்போது ஒரு வீரர் சதம் அடித்தாலோ அல்லது சாதனை படைத்தாலோ எதிரணி வீரர்கள் உற்சாகமூட்டமாட்டார்கள். முறைத்துக் கொண்டேதான் இருப்பார்கள்.

ஆனால், இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி அதில் இருந்து சற்று மாறுபட்டு காணப்படுகிறார். மொகமது ஆமிர் தடைக்காலம் முடிந்து மீண்டும் விளையாட வந்த காலத்தில் அவருக்கு ஆதரவு தெரிவித்தார். ரி20 உலகக் கோப்பை தொடரில் இந்தியா - பாகிஸ்தான் அணிகளுக்கு இடையிலான போட்டி கொல்கத்தாவில் நடைபெற்றது.

அப்போது ஆமிருக்கு கோஹ்லி துடுப்பாட்ட மட்டையைப் பரிசாக அளித்தார். பாகிஸ்தான் அணியின் அதிரடி வீரரும், முன்னாள் கப்டனும் ஆன ஷாகித் அப்ரிடி சர்வதேச போட்டியில் இருந்து ஓய்வு பெற்றதும், இந்திய அணித் தலைவர் விராட் கோஹ்லி, இந்திய வீரர்கள் அனைவருடைய கையெழுத்திட்ட தனது ஜெர்சியைப் பரிசாக வழங்கினார்.

தற்போது அப்ரிடி நடத்தும் தொண்டு நிறுவனத்திற்கும் தனது கையெழுத்திட்ட துடுப்பாட்ட மட்டையை விராட் கோஹ்லி நன்கொடையாக வழங்கியுள்ளார்.



## ஹேரத்தை பின்தள்ளிய அஷ்வின் இரண்டாமிடத்திற்கு முன்னேற்றம்

இந்திய மற்றும் இலங்கை அணிகளுக்கு இடையிலான முதலாவது டெஸ்ட் போட்டியின் நிறைவைத் தொடர்ந்து பந்து வீச்சாளர்களின் தரவரிசையில் இரண்டாமிடத்தில் இருந்த ரங்கன ஹேரத் மூன்றாம் இடத்திற்கு பின்தள்ளப்பட்டதுடன், ரவிச்சந்திரன் அஸ்வின் இரண்டாம் இடத்திற்கு முன்னேறியுள்ளார்.

அதன்படி முதலிரண்டு இடங்களிலும் முறையே இந்திய வீரர்களான ரவீந்திர ஜடேஜா, ரவிச்சந்திரன் அஷ்வின் ஆகியோருடன் மூன்றாவது இடத்தில் ரங்கன ஹேரத் காணப்படுகின்றார். இதன் காரணமாக, ஆசிய சுழற்பந்து வீச்சாளர்கள் தரவரிசைப் பட்டியலில் ஆதிக்கம் செலுத்தி வருகின்றனர்.

சகலதுறை வீரர் அஞ்சலோ மத்தியூஸ் முதல் இன்னிங்ஸில் பெற்றுக் கொண்ட அரைச் சதத்தின் உதவியுடன் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் இரண்டு நிலைகள் முன்னேறி 17 ஆம் இடத்தில் காணப்படுகின்றார். மேலும், திமுத் கருணாரத்ன 36 ஆம் இடத்திற்கும், பந்து வீச்சில் அசத்திய நுவன் பிரதீப் 30ஆவது இடத்திற்கும் முன்னேறியுள்ளனர்.

அத்துடன் இங்கிலாந்து மற்றும் தென்னாபிரிக்க அணிகளுக்கு இடையிலான மூன்றாவது டெஸ்ட் போட்டி கடந்த திங்கட்கிழமை நிறைவடைந்தது. அப்போட்டியில் சகலதுறையிலும் சிறப்பாட்டத்தை வெளிப் படுத்திய பென் ஸ்டோக்ஸ் துடுப்பாட்ட வீரர்களுக்கான தரவரிசையில் 25 ஆவது நிலைக்கு முன்னேறியதுடன் சகலதுறை வீரர்களின் பட்டியலில் வெர்னன் பிலெண்டரை பின்தள்ளி ஐந்தாம் இடத்தைக் கைப்பற்றிக் கொண்டார்.

இந்திய அணி காலி மைதானத்தில் பெற்ற வெற்றியுடன் மூன்று போட்டிகளை கொண்ட டெஸ்ட் தொடரில் 1:0 என முன்னிலை பெற்றுள்ளதுடன், தென்னாபிரிக்காவை 239 ஓட்டங்களினால் தோற்கடித்த இங்கிலாந்து அணி நான்கு போட்டிகளைக் கொண்ட தொடரில் 2:1 என முன்னிலை வகிக்கின்றது.

இதேவேளை, இவ்விரண்டு தொடர்களிலும் திறமையை வெளிக்காட்டி வரும் பல வீரர்கள் தரவரிசையில் முன்னேற்றம் கண்டுள்ளனர். இலங்கை - இந்தியப் போட்டியில் அபாரமாக துடுப்பெடுத்தாடி 190 ஓட்டங்கள் விளாசிய ஷிகர் தவான் 21 இடங்கள் முன்னேறி துடுப்பாட்ட வீரர்களுக்கான தர வரிசையில் 39 ஆவது நிலையைத் தனதாக்கிக் கொண்டார். சேதஷ்வர் புஜாரா மற்றும் விராட் கோஹ்லி ஆகியோர் தொடர்ந்தும் நான்காம் மற்றும் ஐந்தாம் இடங்களைத் தக்கவைத்துக் கொண்டதுடன், ஆஸ்திரேலிய வீரர் ஸ்டீவன் ஸ்மித் முதலிடத்தில் காணப்படுகின்றார்.

காலைக்கதிர் Kalaikkathir



## பொலிஸ்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

பொலிஸ் தலைமையகம் குறிப்பிட்டுள்ளது.

சிரேஷ்ட பொலிஸ் அத்தியட்சகர்கள், பொலிஸ் அத்தியட்சகர்கள் உள்ளடங்கிய 13 ஆயிரம் பொலிஸார் இந்த நடவடிக்கைக்குப் பயன்படுத்தப்பட்டனர்.

இதேவவேளை, இந்த விசேட பொலிஸ் நடவடிக்கையின்போது தேடப்பட்டு வந்த 17 சந்தேக நபர்கள் கைது செய்யப்பட்டுள் ளனர் என்பதோடு மேலதிக விசாரணைகளுக்காக ஆயிரத்து 56 பேர் கைது செய்யப்பட்டுள்ளனர்.

மது, போதைப்பொருள் வைத்திருந்தமை, அனுமதிப்பத்திரம் இன்றி வாகனம் செலுத்தியமை, மது போதையில் வாகனம் செலுத்தியமை மற்றும் இரவு வேளையில் பாதுகாப்பற்ற முறையில் வாகனம் செலுத்தியமை போன்ற குற்றங்களை அடிப்படையாகக் கொண்டு மேற்படி கைதுகள் இடம்பெற்றன. அவர்களுக்கெதிராக சட்ட நடவடிக்கை எடுக்கப்பட்டுள்ளதாக பொலிஸ் தலைமையகம் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

## வடக்கில்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நடவடிக்கைகள் மற்றும் குற்றச் செயல்களுடன் இந்த முன்னாள் புலி உறுப்பினர்களுக்குத் தொடர்பு உண்டு எனத் தெரிவிக்கப்படுகிறது.

வடக்கின் பிரதான அரசியல்வாதி ஒருவரின் ஆலோசகராக கடமையாற்றி வரும் நபர் புலிகளுடன் நெருங்கிய தொடர்பு பேணியவர் எனவும், வன்னிப் போரின்போது வெளிநாடு தப்பிச் சென்று பின்னர் நாடு திரும்பியவர் எனவும் தெரிவிக்கப்படுகின்றது. தமிழ்த் தேசியக் கூட்டமைப்பைக் கொண்டு அழுத்தம் கொடுத்து அதன் மூலம் கேந்திர நிலையங்களிலிருந்து படையினர் வெளியேற்றப்பட்டு வருவதானால் வடக்கில் குற்றச் செயல்களின் எண்ணிக்கை அதிகரித்துள்ளது எனவும் அந்தச் சிங்கள நாளிதழ் சுட்டிக்காட்டியுள்ளது.

## சந்தேகத்தை..

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

காரணத்தினால் இந்தச் சந்தேகம் எழுந்ததாகவும் அவர் கூறியுள்ளார்.

புங்குடுதீவு மாணவி வித்யா படுகொலைசெய்யப்பட்டசம்பவம் தொடர்பிலான வழக்கு ட்ரயல் அட்பார் தீர்ப்பாயத்தில் மூன்று மேல் நீதிமன்ற நீதிபதிகள் முன்னிலையில்தொடர்ந்துஇடம்பெற்று வருகின்றது.

சப் இன்ஸ்பெக்டர் நிஷாந்த நேற்று தொடர்ந்தும் சாட்சியம் அளித்தார்.

## மாகாண...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

சயந்தன், அயூப் அஸ்மின், அ. பரஞ்சோதி மற்றும் வர்த்தகர்கள், பொது மக்கள், ஜெயசேகரத்தின் ஆதரவாளர்கள் எனப் பலர் கலந்துகொண்டனர்.

கடந்த மாகாண சபைத் தேர்தலில் தமிழ்த் தேசியக் கூட்டமைப்பில் ஈ.பி.ஆர். எல்.எவ். பிரதிநிதியாகப் போட்டியிட்ட ஜெயசேகரம் அதில் வெற்றி பெறவில்லை.

இந்தத் தேர்தலில் கூட்டமைப்புக்கு கிடைத்த போனஸ் ஆசனத்தில் ஏற்பட்ட வெற்றிடத்துக்கு இலங்கைத் தமிழரசுக் கட்சி ஜெயசேகரத்தை நியமித்திருந்தது. அந்தப் பதவியையே நேற்று அவர் ஏற்றுக் கொண்டார். (உ)

## பொலிஸ் மீது....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

திகதி உரிய அடையாள அணிவகுப்பிற்கு உட்படுத்து மாறும் பணித்தார்.

கடந்த ஞாயிற்றுக் கிழமை இடம்பெற்ற இந்த வாள் வெட்டுச் சம்பவம் தொடர்பாக யாழ்ப்பாணத்தில் விசேட அதிரடிப்படையினர் குவிக்கப்பட்டு தேடுதல் நடவடிக்கைகள் முன்னெடுக்கப்படுகின்றன.

நேற்று முன்தினம் காலையில் மானிப்பாய்ப் பகுதியைச் சேர்ந்த ஜீவராஜ் (வயது 23) என்பவரும் மதுசன் (வயது 20) என்பவரும் கைது செய்யப்பட்டிருந்தனர். அவர்கள் தொடர்பிலேயே நீதிமன்றம் இந்த உத்தரவை விடுத்தது.

நேற்றுமுன்தினம் மாலைக்குப் பின்னர் மேலும் மூவர் கைது செய்யப்பட்டுள்ளனர் என்றும் –

பொலிஸ் விசாரணைக்கு உட்படுத்தப்பட்டிருக்கும் இந்த மூவரும் பெரும்பாலும் இன்று நீதிமன்றில் முற்படுத்தப்படுவார்கள் என்றும் கூறப்பட்டது. (உ)

## புளொட்....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாவட்ட மட்டங்களில் இந்த அணியைச்செயற்படுத்துவதற்கு அவர்கள்தீர்மானித்திருக்கின்றனர் என அறியவருகின்றது.

இந்த மாவட்ட மட்டச் செயற்பாட்டின் முதற்கட்டமாக இந்த மூன்று கட்சிகளும் நேற்று மாலை வவுனியாவில் சத்தம் சந்தடியின்றி – ஊடகங்களுக்குத் தெரியப்படுத்தாமல் ஒன்று கூடி நிலைமைகளை ஆராய்ந்திருக்கின்றன.

நேற்று மாலை வவுனியா, ரயில் நிலையம் அருகில் உள்ள விருந்தினர் விடுதி ஒன்றில் இச் சந்திப்பு இடம்பெற்றுள்ளது. தமிழ்த் தேசியக் கூட்டமைப் பின் தமிழரசுக்கட்சி தவிர்ந்த ஏனைய கட்சிகளான புளொட், ரெலோ, ஈ.பி.ஆர்.எல்.எவ் ஆகிய கட்சிகளின் வவுனியா மாவட்ட பிரதிநிதிகள் இந்தச் சந்திப்பில் பங்குபற்றினர்.

இந்த ஒன்றுகூடலில் சமகால அரசியல் நிலைமைகள் குறித்துத் தாங்கள் ஆராய்ந்தார்கள் எனவும், மாவட்டங்கள் ரீதியில் மூன்று கட்சிகளும் ஒன்றிணைந்து செயற்பட முடிவெடுத்துள்ளன எனவும், எதிர்காலத்தில் மாதாந்தம் இப்படியான ஒன்றுகூடல்கள் தொடருமெனவும் இக் கூட்டத்தில் கலந்து கொண்ட ஒரு பிரதிநிதி குறிப்பிட்டார்.

மாற்றுத் தலைமை பற்றிய கருத்துக்கள் முன்வைக்கப்பட்டு வரும் நிலையிலும், புளொட்டுக்கு வழங்கப்படுமென எதிர்பார்க்கப்பட்ட வடக்கு மாகாண சபையின் சுழற்சிமுறை ஆசனம் சத்தம் சந்தடியின்றி தமிரசுக் கட்சியின் சார்பான ஒருவருக்கு வழங்கப்பட்டுள்ள சூழலும் இடம்பெற்றுள்ள இந்தச் சந்திப்பு முக்கியத்துவம் வாய்ந்ததாகக் கருதப்படுகிறது.

தமிழரசுக் கட்சியின் தன்னிச்சையான செயற்பாடு காரணமாக இந்த மூன்று கட்சிகளும் தனித்து இயங்குவதற்கு முயற்சிகளை ஆரம்பித்துள்ளன என் பதையே இக்கூட்டம் காட்டுவதாகத் தெரிவிக்கப்பட்டது.

இக்கூட்டத்தில் ரெலோ மாவட்டப் பொறுப்பாளர் குரூஸ், பாபு மற்றும் தற்சமயம் மாகாண சபை உறுப்பினர் பதவியை இழந்துள்ள மயூரன், ஈ.பி.ஆர்.எல்.எவ்வின் பதில் மாவட்டப் பொறுப்பாளர் மதிகரன் (றேகன்), சிவசக்தி ஆனந்தன் எம்.பி., புளொட் சார்பில் மாவட்டப் பொறுப்பாளர் சந்திரகுலசிங்கம் மோகன், மாகாண சபை உறுப்பினர் லிங்கநாதன், சிவம் உட்படப் பலர் பங்குபற்றினர் எனத் தெரியவந்தது. (உ)

## அரசியல்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

மாகாணசபை உறுப்பினர் எஸ்.சிவயோகன் தலைமையில் சென்ற குழுவினரே நேற்று காலை 10.30 மணிக்கு முதலமைச்சரைச் சந்தித்தது. இதன் போது யாழ்ப்பாணம், கிளிநொச்சி, முல்லைத் தீவு மாவட்டங்களில் இருந்து வந்த தமிழ் அரசியல் கைதிகளின் உறவினர்கள் மேற்படி சந்திப்பில் கலந்துகொண்டிருந்தனர்.

## நல்லாட்சி...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இலங்கையின் சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் தமிழ் அரசியல் கைதிகளான தங்கள் உறவுகளை விடுதலை செய்ய நடவடிக்கை எடுக்குமாறு கோரி அவர்களின் உறவினர்கள் நேற்று வடமாகாண முதலமைச்சர் சி.வீ.விக்னேஸ்வரனை அவருடைய அலுவலகத்தில் சந்தித்தனர்.

இந்த சந்திப்பின் நிறைவில் ஊடகங்களுக்கு கருத்து தெரிவிக்கும்போதே திருமதி ஜோசப் செபஸ்தியான் மேற்கண்டவாறு கூறியிருந்தார். அவர் மேலும் குறிப்பிடுகையில் –

கடந்தசிலதினங்களுக்குமுன்னர் பாதுகாப்பு இராஜாங்க அமைச்சர் ருவான் விஜயவர்த்தன சிறைகளில் தடுத்துவைக்கப்பட்டிருக்கும் 84 அரசியல் கைதிகளின் பெயர்களை வெளியிட்டிருக்கின்றார். அதில் எனது கணவருடைய பெயர் இல்லை.

அப்படியானால் கடந்த 4 வருடங்களாக சிறையிலடைக்கப்பட்டிருக்கும் எனது கணவர் என்ன குற்றச்சாட்டின் அடிப்படையில் தடுத்துவைக்கப்பட்டிருக்கின்றார்? அவர் மீது எந்த குற்றச்சாட்டும் இல்லை என்றால் எனது கணவனை உடனடியாக விடுதலை செய்யவேண்டும். எனது கணவன் தொடர்பாக பல இடங்களில், பல தடவைகள் முறைப்பாடுகளை கொடுத்த போதும் ஆறுதல் வார்த்தைகளே கிடைக்கின்றன. ஆனால் எனது கணவன் கிடைக்கவில்லை.

மேலும் எனது கணவனை 4 வருடங்களாகஎந்தகுற்றச்சாட்டும் இல்லாமல் தடுத்து வைத்திருக்கும் இந்த அரசாங்கம் இந்த 4 வருடங்களில் நாங்கள் இழந்த சந்தோசத்தை திருப்பி தருமா? இதேவேளை தமிழ் நாடாளுமன்ற உறுப்பினர்கள் மற்றும் மாகாணசபை உறுப்பினர்களிடம் நாங்கள் கேட்பது ஒன்றே. அதாவது 'நல்லிணக்கம்', 'நல்லாட்சி' என இனி பேசக்கூடாது.

உண்மையில் நல்லாட்சி மற்றும் நல்லிணக்கம் போன்றவற்றுக்கான உண்மையான அர்த்தம் இந்த அர சாங்கத்துக்கு தெரியாது. அவர்களுக்கு தெரிந்திருந்தால் தமிழ் மக்கள் தங்கள் உரிமைகளுக்காக வீதியில் இறங்கி போராடும் நிலை வந்திருக்காது. கொட்டகைகளைபோட்டு உண்ணாவிரதம் இருக்கும் நிலை வந்திருக்காது.

இதேபோல் ஜனாதிபதி கூறியிருக்கின்றார் தான் க.பொ.த உயர்தர பரீட்சை எழுதும்போது கையில் விலங்கு போடப்பட்ட நிலையிலேயே எழுதினார் என்றும் குற்றச்சாட்டுக்கள் இல்லாமல் தடுத்துவைக்கப்பட்டுள்ளவர்களின் நிலை தனக்கு தெரியும் என்றும்.

அவ்வாறாயின் எந்தவிதமான குற்றச்சாட்டும் 4 வருடங் களாக சுமத்தப்படாமல் தடுத்து வைக்கப்பட்டிருக்கும் எனது கணவனை விடுதலை செய்ய முடியாமல் போனது எதனால்? – எனவும் கேள்வி எழுப்பினார்.

## நம்ப....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

நேற்று மாலை நடைபெற்றது. இதன்போது விருந்தினராகக் கலந்து கொண்டு கருத்து வெளியிடுகையிலையே மாவை சேனாதிராசா மேற்கண்டவாறு தெரிவித்தார்.

அங்கு அவர் மேலும் தெரிவித்தவை வருமாறு:–

போர்க்காலத்திலும் போருக்குப் பின்னரான காலத்திலும் பல்வேறு சேவைகளை வணிகர் கழகத்தினூடாக மக்களுக்கு வழங்கி வந்தவர் ஜெயசேகரம். பொருளாதார ரீதியான முன்னேற்றத்திற்கும் பல நடவடிக்கைகளை மேற்கொண்டு வந்தவர். அத்தகைய செயற்பாடுகள் தொடர்ந்தும் முன்னெடுக்கப்பட வேண்டியுள்ளன.

பொருளாதார ரீதியாக மற்றும் சமூக ரீதியாக அழிவடைந்திருக்கின்ற எமது பிரதேசத்தைக் கட்சியெழுப்ப வேண்டிய தேவை இருக்கின்றது. பொருளாதார ரீதியான முன்னேற்ற நடவடிக்கைகளை மேற்கொள்வது தொடர்பில் சர்வதேச நாடுகளும் புலம் பெயர் அமைப்புக்களும் எம்முடன் பேசியிருக்கின்றன. அதற்கமைய ஒரு கூட்டுச்செயற்பாட்டை முன்னெடுக்க வேண்டு மென நாம் கோரியிருக்கின் றோம்.

இவ்வாறு பல பிரச்சினைகளும் பல தேவைகளும் இருக்கின்ற நிலையில் அவற்றை நிவர்த்தி செய்வதற்குரிய நடவடிக்கைகளை நாம் முன்னெடுத்து வருகின்றோம்.

தமிழ் மக்களின் அடிப்படைப் பிரச்சினைகள் முதல் அரசியல் பிரச்சினைகள் வரை அனைத்துக் குறித்தும் அவற்றுக்குரிய தீர்வுகளைப் பெற்றுக் கொள்வது குறித்தும் பேசி வருகின்றோம். அவற்றுக்கான நடவடிக்கைகளையும் மேற்கொண்டுவருகின்றோம். இவ்வாறான நிலைமையில் தான் சில, பல குழப்பங்களும் ஏற்படுத்தப்பட்டுக் கொண்டிருக்கின்றன.

புதிய அரசமைப்பு வரவிருக்கின்ற நிலையில் தென்னிலங்கையிலுள்ள பௌத்த பிக்குகளும் ஊழல் மோசடிகாரர்களுமே குழப்ப நடவடிக்கைகளை மேற்கொள்கின்றனர். அவ்வாறானவர்கள் தற்போது அமைக்கப்பட்டிருக்கின்ற ஆட்சியை கவிழ்க்க முயல்கின்றனர்.

இன்றைய நிலையில் சர்வதேசம் எமக்கு ஆதரவாக இருக்கின்றது. அத்தோடு பிரதான கட்சிகளான ஐக்கிய தேசியக் கட்சியும், சிறிலங்கா சுதந்திரக் கட்சியும் இணைந்து ஆட்சியில் அமர்ந்திருக்கின்றன. இதுவொரு நல்ல சந்தர்ப்பம். இப்படியானதொரு சந்தர்ப்பம் இதற்கு முன் எமக்கு கிடைத்ததில்லை. ஆகையினால் தான் நாம் இந்தச் சந்தர்ப்பத்தை சரிவரப் பயன்படுத்துவதற்காகச் செயற்படுகின்றோம்.

குறிப்பாக எமது கட்சித் தலைவர் தந்தை செல்வநாயகம் சொன்னமை போன்று 'நம்ப நட; நம்பி நடவாதே'! என்ற அடிப்படையில் நடக்கின்றோம். ஆதலால் இன்று முன்னெடுக்கப்படுகின்ற நடவடிக்கைகளை நாங்களாகவே வலிந்து முறித்துக் கொள்ளக் கூடாது. அவ்வாறு நாமாகவே

பக்கம் 03 »

## அரசமைப்புக்கு....

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

இந்த 20 ஆவது திருத்தம் தற்போதைய அரசமைப்புக்கு வர விருப்பதாகக்கூறப்படுகின்றது.

சகல மாகாண சபைக்குமான தேர்தல்களை ஒன்றாக நடத்துவதற்கு வழிசெய்யும் சட்டத்துக்கு அமைச்சரவை அனுமதி வழங்கி யிருக்கின்றது என்றும் –

இது தொடர்பான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வரும் என்றும் –

அமைச்சரவை கூட்ட முடிவுகளை அறிவிக்கும் கூட்டத்தில் அமைச்சர் கயந்த கருணாதிலக அறிவித்தார். அனைத்து மாகாணங்களுக்குமான தேர்தல்களை ஒரே நேரத்தில் நடத்துவதாயின் ஒன்றில் தற்போது பதவிக்காலம் முடிவுறும் சபைகளின் பதவிக் காலத்தைநீடித்து, ஏனைய சபைகளின் பதவிக் காலம் முடிவுறும் போது அவற்றுடன் சேர்த்துத் தேர்தலை நடத்த வேண்டும்.

இல்லையேல், ஏனைய மாகாண சபைகளின் பதவிக் காலத்தை நேரத்துடன் முடிவுறுத்தி, அவற்றுக்கான தேர்தலையும் முற்கூட்டியே மற்ற மாகாண சபைகளுடன் நடத்த வேண்டும்.

இரண்டு வழியில் எதைப் பின் பற்றுவதானாலும் அதற்கேற்ப தற்போதைய அரசமைப்புவாசகங்களில் திருத்தம் செய்யப்படவேண்டியிருக்கும் என சட்ட வட்டாரங்கள் சுட்டிக் காட்டின. (உ)

## தேவைக்குப்...

(முதலாம் பக்கத் தொடர்ச்சி)

யாழ்.மாவட்டத்தில் வாள் வெட்டு சம்பவங்கள் அதிகரித்திருக்கும் நிலையில் அதனைக் கட்டுக்குள் கொண்டுவர முப்படையினரும் களத்தில் இறக்கப்படுவார்கள் என பொலிஸ்மா அதிபர் பூஜித ஜெயசுந்தர யாழில் கூறியிருந்தார். இந்தக் கருத்து தொடர்பாக கேட்ட போதே முதலமைச்சர் மேற்கண்டவாறு கூறியுள்ளார்.

இது தொடர்பாக அவர் மேலும் கூறியவை வருமாறு:–

முப்படையினரையும் களமிறக்கப்போகிறார் எனப்பொலிஸ்மா அதிபர் கூறவில்லை. பொலிஸாருக்கு உதவியாக விசேட அதிரடிப்படையையும் இராணுவத்தையும் வேண்டுமெனில் மக்கள் விருப்பப்பட்டால் களமிறக்க விருப்பதாகக்கூறினார். அவர்கள் தொடர்புகொள்ள தொலைபேசி இலக்கங்களையும் தந்து வைத்தார். யார் வேண்டுமானாலும் குற்றச்செயல்கள் பற்றி தமக்கு முறைப்பாடுசெய்யலாம் என்றார்.

வடக்கிலிருந்து இராணுவ வெளியேற்றத்தை நான் இப்பொழுதும் கோருகின்றேன். ஆனால் குற்றங்கள் நடைபெறும் பொழுது அவற்றைத் தடுக்க உரிய நடவடிக்கை எடுக்க வேண்டியது சட்டம், ஒழுங்குக்கு பொறுப்பான அமைச்சரின் கடமையாகும். நேற்றைய தினம் நான் கூட்டத்தில் பேசும்போது பொலிஸ்மா அதிபருக்கு பின்வருமாறு கூறியிருந்தேன் –

"இராணுவத்தில் இருந்து ஓடிப் போனவர்கள் தெற்கிலே எவ்வாறு பாரிய குற்றங்களைப் புரிந்தார்களோ அதேபோல் யுத்த பயிற்சி பெற்றவர்கள் வடக்கிலும் அவ்வாறான குற்றச் செயல்களில் ஈடுபட வாய்ப்பிருக்கின்றது. குற்றச் செயல்கள் எங்கு நடைபெற்றாலும் எமது எல்லா வளங்களையும் உள்ளேற்று அவற்றைத் தடுக்கவோ உரிய விதத்தில் நடவடிக்கை எடுக்கவே வேண்டும்."

எனவே இராணுவத்தை வெளியேற்ற வேண்டும் என்ற கொள்கையைக் கொண்டிருக்கும் ஒருவர் எது நடந்தாலும் அவர்களுடைய ஒத்துழைப்பைக் கோரக்கூடாது என்று அதற்கு அர்த்தமில்லை. அப்படியானால் எது நடந்தாலும் நாங்கள் சும்மா இருக்கவேண்டும் என்றுபொருள்படும்.

மேலும் இராணுவத்தை அவசரத்திற்கும் அழைகக் கூடாது அவர்கள் களமிறக்கப்படுவதை எதிர்க்கவேண்டும் என கேட்பவர்கள் குற்ற செயல்களில் ஈடுபடுபவர்களுக்கு சாதகமானவர்களாகவே இருப்பர் – என்றார்.

காலைக்கதிர்
Kalaikkathir



# இளைஞர்களின் வன்முறைகளுக்கு வடமாகாண சபையும் பொறுப்பாளி!

## எதிர்க்கட்சித் தலைவர் தவராசா சாடல்



யாழ்.நகரில் அண்மைக் காலமாக அதிகரித்து வரும் இளைஞர்களின் வன்முறைச் செயற்பாடுகளுக்கு வட மாகாண சபையும் பொறுப்புக் கூற வேண்டியுள்ளது. இவ்வாறு வட மாகாண சபையின் எதிர்க்கட்சித் தலைவர் சி. தவராசா ஊடகங்களுக்கான அறிக்கையிற் குறிப்பிட்டுள்ளார்.

அவர் தனது அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளவை வருமாறு:-

ஏறத்தாழ ஏழு லட்சம் மக்கள் வாழும் யாழ்.மாவட்டத்தில் ஒரு சில நபர்களின் வன்முறைச் செயற்பாட்டை வைத்துக் கொண்டு யாழ்ப்பாண மக்கள் வன்முறையை நோக்கிச் செல்கிறார்கள் எனத் தெற்கில் பிரசாரம் முடுக்கி விடப்பட்டுள்ளது.

அதேபோல் புனர்வாழ்வு பெற்ற ஏறத்தாழ 12 ஆயிரம் முன்னாள் விடுதலைப் புலிப் போராளிகளில் விரல் விட்டு எண்ணக் கூடிய ஒரு சிலரின் செயற்பாட்டை வைத்துக் கொண்டு முன்னாள் போராளிகளுக்கு அவதூறு ஏற்படுத்தும் வகையில் அரச தரப்பிலிருந்து கருத்துக்கள் வெளிவந்துள்ளமை கண்டிக்கத்தக்க விடயமாகும்.

அவ்வாறான வன்முறைச் செயற்பாடுகள் இளைஞர்களின் விரக்தி நிலையின் விளைவேயொழிய, அவர்களில் ஒரு சிலர் முன்னாள் போராளிகள் என்பதற்காக எல்லா முன்னாள் போராளிகளையும் சந்தேகக் கண்கொண்டு பார்ப்பதோ, அவர்களைப் புண்படுத்தும் முகமாகக் கருத்துகளை வெளியிடுவதையோ அரசு தவிர்த்துக் கொள்ள வேண்டும். இல்லையேல், இது சும்மா இருப்பவர்களையும் தூண்டும் செயலாகவும் அமைந்து விடும்.

மூன்று சிரேஷ்ட பொலிஸ்மா அதிபர்கள் மீது பெரிய குற்றங்கள் சுமத்தப்பட்டு, ஒருவர் சிறைத் தண்டனை அனுபவித்துக் கொண்டிருக்கின்றார், இன்னொருவர் விளக்கமறியலிலிருந்து பிணையில் நிற்கின்றார், மற்றையவர் விளக்கமறியலில் உள்ளார். இவர்களின் செயற்பாட்டுக்காக முழு பொலிஸ் திணைக்களத்துக்கே அவதூறு ஏற்படுத்தும் வகையில் கருத்துகளை வெளியிட முடியுமா?

மக்களால் தேர்ந்தெடுக்கப்பட்ட நிர்வாகத்தின் கீழ் கொண்டு வரப்பட்டு இன்று மூன்று வருடங்கள் ஒன்பது மாதங்கள் ஆகின்றன. இந்த நாற்பத்தைந்து மாத காலத்திற்குள் வடக்கில் வேலைவாய்ப்புகளை ஏற்படுத்தக் கூடிய முதலீடுகளை வரவழைக்கக் கூடிய எந்தவித வேலைத்திட்டங்களையும் வட மாகாண சபை செய்யவில்லை. மாறாக வரவிருந்த முதலீட்டு வாய்ப்புகளைக் கூடத் தடுத்த அல்லது அசமந்தப் போக்கால் கைநழுவ விட்ட செயற்பாடுகளே நடந்தேறியுள்ளன. அந்த வகையில் முன்னாள் போராளிகள் உள்ளடங்கலாக வட மாகாண இளைஞர்களின் விரக்திக்கு வட மாகாண சபையும் பொறுப்புக் கூறியே ஆக வேண்டும்.- என்றுள்ளது. (இ)

## ஆறுதல் நிறுவனத்தில் தகவல் தொழில்நுட்பம்; பயிற்சிபெற வாய்ப்பு

இளையோர்கள் தகவல் தொழில்நுட்பத் துறையில் உட்புகுவதற்கான அரியவாய்ப்புகளை ஆறுதல் நிறுவனம் ஏற்படுத்திக் கொடுத்துள்ளது.

சிறுவர் இளையோர் மாதர் என்போரின் மகிழ்வுறு வாழ்வுக்கான கல்விச் செயற்றிறன் மேலோங்க மனித நேய செயற்றிட்டங்களோடு 2006 ஆம் ஆண்டு ஏப்ரல் மாதம் ஆறுதல் நிறுவனம் ஆரம்பிக்கப்பட்டது.

தூரநோக்கும் துணிவும் கொண்டு தரம்மிக்க தகுதி வாய்ந்தமனிதவளமாற்றங்களை ஏற்படுத்தி ஒளிமயமான எதிர்காலத்தை நோக்கி ஆறுதல் நிறுவனம் இன்று பல செயற்றிட்டங்களை முன்னெடுத்துப் பயணிக்கிறது.

முன்னேறிவரும் கணினியுகத்தில் IT தொடர்பாடல் ஆங்கிலம் ஆகிய திறன் விருத்திச் செயற்பாடுகளில் இளையோர் தம் அறிவை வளர்த்துக் கொள்ளவும் தொழில் வாய்ப்புக்களைப் பெற்றுக் கொள்ளவும் ஆறுதல் நிறுவனம் இப்பொழுதே அரிய உயர் சந்தர்ப்பத்தை ஏற்படுத்திக் கொடுக்க முன்வந்துள்ளது.

இது குறித்த விவரங்களை நேற்றைய (02.08.2017) 'காலைக்கதிர்' பத்திரிகை விளம்பரத்தின் வாயிலாக அறிந்து கொள்ள முடியும்.

## ஆலய பொதுக்கூட்டம்

தொல்புரம் மடத்துப் பிள்ளையார் சுப்பிரமணிய சுவாமி ஆலய அன்னதான சபையின் 19 ஆவது வருடாந்தப் பொதுக் கூட்டம் எதிர்வரும் 6 ஆம் திகதி ஞாயிற்றுக்கிழமை மாலை 4மணிக்கு ஆலயமண்டபத்தில் நடைபெற வுள்ளது.

கூட்டத்தில் புதிய நிர்வாக சபை தெரிவு இடம்பெறவுள்ளதுடன் முக்கியமான விடயங்கள் கலந்துரையாடப்படவுள்ளமையால் அனைவரையும் கலந்து கொள்ளுமாறு அறிவிக்கப்பட்டுள்ளது.

## இசை இறுவட்டு வேலணை ஆலயத்தில் சனியன்று வெளியீடு

வேலணை, ஒக.03

வேலணை வடக்கு, இலந்தைவனம் ஸ்ரீ சித்தி விநாயகர் ஆலயம் மீது பாடப்பட்ட 'இலந்தை வனப்பாடல்கள் எனும் இசை இறுவட்டு வெளியீட்டு விழா நாளை மறுதினம் சனிக்கிழமை காலை 8.30 மணிக்கு ஆலய மண்டபத்தில் ஓய்வு பெற்ற ஆசிரிய ஆலோசகர் சோ.பரமானந்தன் தலைமையில் இடம்பெறவுள்ளது.

ஆசியுரையை நல்லை திருஞானசம்பந்தர் ஆதீன குருமுதல்வர் ஸ்ரீலஸ்ரீ சோமசுந்தர பரமாசாரிய சுவாமிகளும் அறிமுக உரையை பருத்தித்துறை பிரதேச செயலர் கவிஞர் இ.த.ஜெயசீலனும் வெளியீட்டுரையை யாழ்ப்பாணப் பல்கலைக்கழக முன்னாள் கலைப்பீடாதிபதி பேராசிரியர் இரா.சிவசந்திரனும் நிகழ்த்தவுள்ளனர். இறுவட்டின் முதல் பிரதியை தினக்குரல் ஸ்தாபகரும் வேலணை கிழக்கு பெருங்குளம் முத்துமாரி அம்பாள் ஆலய பரிபாலன சபைத் தலைவருமான எஸ்.பி.சாமி பெற்றுக் கொள்ளவுள்ளார்.

முன்னாள் ஆலய அறங்காவலர் சபைத் தலைவர் அமரர்கா.வேலாயுதநாதன் நினைவாக இது வெளியிடப்படவுள்ளது. (இ)

## சுவிஸிலுள்ள இலங்கையர்களை நாடு திரும்புமாறு அரசு கோரிக்கை

சுவிற்சர்லாந்திலுள்ள இலங்கையர்களை நாடு திரும்புமாறும் நாட்டின் அபிவிருத்திக்கு பங்களிப்பு வழங்குமாறும் இலங்கை அரசு கோரியுள்ளது.

புனர்வாழ்வு, புனரமைப்பு மற்றும் சிறைச்சாலைகள் மறு சீரமைப்பு, இந்து சமய விவகார அமைச்சர் டி.எம்.சுவாமி நாதன் கோரிக்கை விடுத்துள்ளார்.

இலங்கைக்கான சுவிற்சர்லாந்து தூதுவர் Heinz Walker - Nederkoorn இன் இல்லத்தில் நடைபெற்ற நிகழ்வு ஒன்றில் உரையாற்றிய போதே அமைச்சர் இதனைக் குறிப்பிட்டுள்ளார்.

தற்போது சுவிற்சர்லாந்தில் 50ஆயிரத்துக்கும் மேற்பட்ட இலங்கையர்கள் வாழ்ந்து வருகின்றனர் என்று அவர் மேலும் குறிப்பிட்டார்.

## சாவகச்சேரி கோவிற்குடியிருப்பில் உவர் நீர் தடுப்பு அணை அமைக்குமாறு கோரிக்கை



சாவகச்சேரி கோவிற்குடியிருப்புப் பிரதேசத்தில் உவர் நீர் தடுப்பு அணை அமைக்குமாறு பொதுமக்களால் சாவகச்சேரி பிரதேசசெயலகத்திடம் கோரிக்கை விடுக்கப்பட்டதைத் தொடர்ந்து அவ்விடயம் தென்மராட்சி ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டத்தில் கலந்துரையாடப்பட்டது.

கோவிற்குடியிருப்பு பிரதேசத்தில் மகிழங்கேணி பகுதியில் கடற்கரையை மிகவும் அண்டிய பகுதியில் குடிமனைகள் காணப்படுகின்றன. எனவே உவர் நீர்த்தடுப்பு அணை அவசியம் தேவைப்படுகின்றது என மக்கள் தெரிவிக்கின்றனர். மேலும் அந்த இடத்தில் வீட்டுத் திட்டங்கள் வழங்குவதற்கும் தீர்மானிக்கப்பட்டுள்ளமை குறிப்பிடத்தக்கது. (எ-21)

## இந்திய சுதந்திரதினம், நல்லூர் உற்சவத்தை முன்னிட்டு

## யாழ்.இந்தியத் தூதரகத்தின் பல்வேறு நிகழ்வுகள் ஏற்பாடு

இந்திய சுதந்திர தினத்தின் 70ஆவது ஆண்டு நிறைவையொட்டியும் நல்லூர் கந்தசுவாமி கோவில் வருடாந்த மகோற்சவத்தை முன்னிட்டும் யாழ்.இந்திய துணைத் தூதரகம் பல்வேறு நிகழ்வுகளை ஏற்பாடு செய்துள்ளது.

அந்த நிகழ்வுகள் வருமாறு:-

★ஒகஸ்ட் 12 : MOM (தமிழாக்கம்) திரைப்படம் ராஜா திரையரங்கு - 2 இல் மதியம் 2.30 மணிக்கு பொது மக்களுக்காக இலவசமாக திரையிடப்படும்

★ஒகஸ்ட் 16 : இந்தியா பெங்களூரைச் சேர்ந்த மஞ்சுநாத் சகோதரர்களின் வயலின் இசைக் கச்சேரி மாலை 6.30 மணிக்கு நல்லூர், சங்கிலியன் தோப்பில் இடம்பெறும். அனுமதி இலவசம்.

★ஒகஸ்ட் 17 : இசை ஆசிரியர்கள் மற்றும் மாணவர்களுக்கென பிரத்தியேகமாக நடத்தப்படும் மஞ்சுநாத் சகோதரர்களின் வயலின் பயிற்சிப் பட்டறையும் வயலின் இசைக் கச்சேரியும் வவுனியா ஸ்ரீ கந்தசாமிகோவில் மண்டபத்தில் முற்பகல் 10 மணிக்கு இடம்பெறும். (அனுமதி இலவசம்)

★ஒகஸ்ட் 12 முதல் 21 வரை: யாழ் இந்திய துணைத் தூதரகத்தினதும் யாழ்ப்பாண மாநகர சபையினதும் ஏற்பாட்டில் பத்து நாள்கள் தொடர் புத்தகக் கண்காட்சி நல்லூர் பருத்தித்துறை வீதியில் அமைந்துள்ள சுகாதாரப் பணிமனையில் முற்பகல் 10 மணி முதல் இரவு 10 மணி வரை இடம்பெறும். இங்கு இந்தியா மற்றும் இலங்கையைச் சேர்ந்த கவிதா பதிப்பகம் (இந்தியா), கற்பகம் புத்தகாலயம் (இந்தியா), அருணா பதிப்பகம் (இந்தியா), பூபால சிங்கம் புத்தகசாலை(யாழ்ப்பாணம்) ஆகியவற்றின் பல்துறைசார் புத்தகங்கள் காட்சிப்படுத்தப்படும். (இ)

## வரலக்ஷ்மி விரத அபிஷேக ஆராதனை

உரும்பிராய்,ஒக.03

உரும்பிராய் ஸ்ரீ கௌரி அம்பாள் ஆலயத்தில் நாளை வெள்ளிக்கிழமை அம்பாளுக்கு விசேட அபிஷேக ஆராதனைகள் இடம்பெற்று காலை 8 மணிக்கு வரலக்ஷ்மி காப்பு கட்டும் நிகழ்வுகள் இடம்பெறுவதோடு நண்பகல் 12 மணிக்கு அன்னதானம் வழங்கப்படும் என்று ஆலய பரிபாலன சபையினர் தெரிவித்துள்ளனர்.

★★★

யாழ்.வண்ணை வட கிழக்கு கலட்டி ஸ்ரீ வீரகத்தி விநாயகர் ஆலயத்தின் வரலக்ஷ்மி விரதம் நாளை வெள்ளிக்கிழமை முற்பகல் 10.30 மணிக்கு இடம்பெறும். அபிஷேகம், மூலமூர்த்தி பூஜை என்பன இடம்பெற்று விநாயகப்பெருமான்வீதியுலா வந்து அதனைத்தொடர்ந்து வரலக்ஷ்மி காப்பு வழங்கப்படும். (ப)

★★★

பொன்னாலை ஸ்ரீ வரதராஜப் பெருமாள் ஆலய வரலக்ஷ்மி விரத ஆராதனைகள் நாளை வெள்ளிக்கிழமை நடைபெற்று அன்றையதினம் காலை 7 மணிக்கு மகா லக்ஷ்மிக்கு அபிஷேகம் மற்றும் பூசை என்பனவற்றைத் தொடர்ந்து வரலக்ஷ்மி காப்பு நூல் வழங்கும் நிகழ்வும் இடம்பெறும். (இ)

காலைக்கதிர்
Kalaikkathir






ஊடகவியலாளர்களுக்கான விருது வழங்கும் விழாவில் ஆண்டின் சிறந்த பத்தி எழுத்தாளருக்கான பி.ஏ.சிறிவர்த்தன விருது 2016 ஐ வீரகேசரி பத்திரிகையின் உதவி செய்தியாளர் ஆர்.ராம்குமார் பெற்றுக் கொண்ட போது...

## வயோதிப மாது கிளிநொச்சி விபத்தில் சாவு

கிளிநொச்சி – கனகபுரம் வீதியில் சேவியர் கடைச் சந்திப் பகுதியில் நேற்று இடம்பெற்ற விபத்தில் வயோதிபப் பெண் ஒருவர் உயிரிழந்தார். முன்னால் சென்று கொண்டிருந்த ஓட்டோ வண்டி ஒன்றின் மீது, பின்னால் சென்ற மற்றுமொரு ஓட்டோ மோதியதில் விபத்து இடம்பெற்றது. விபத்தில் ஓட்டோவில் பயணித்த கருணாநிதி சின்னம்மா என்ற வயோதிபப் பெண்ணே உயிரிழந்தார் எனப் பொலிஸார் கூறியுள்ளனர்.




## தாயகம் வந்து சேர்ந்த பயணி கட்டுநாயக்காவில் உயிரிழப்பு

### மனைவியைக் காண்பதற்கு சில நிமிடங்கள் முன்னதாக

கட்டுநாயக்க விமான நிலையத்தில் நேற்றுக் காலை வந்திறங்கிய பயணி ஒருவர் திடீரென உயிரிழந்துள்ளார் என கட்டுநாயக்க விமான நிலைய பொலிஸார் தெரிவித்துள்ளனர்.

வெளிநாட்டிற்கு மனைவியை அழைத்துச் செல்வதற்காக விமானத்தில் வந்திறங்கிய இவர் மனைவியை சந்திக்கவிருந்த சில நிமிடங்களுக்கு முன்னரே உயிரிழந்துள்ளார் எனக் கூறப்பட்டது.

திடீரென ஏற்பட்ட மாரடைப்பு காரணமாக இவர் உயிரிழந்தார் என விமான நிலைய மருத்துவ சிகிச்சைப் பிரிவு கூறியுள்ளது.

கண்டி – தெல்தெனிய பிரதேசத்தை சேர்ந்த 49 வயதான அப்ரல் வாஹியட் என்ற நபரே இவ்வாறு உயிரிழந்துள்ளார்.

இவர் இன்று அதிகாலை 4 மணியளவில் சவுதி அரேபியாவின் ஜெத்தா நகரில் இருந்து வந்துள்ளார் எனத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

சவுதியில் நிரந்தரமாக வசித்து வரும் இவர், மனைவியைத் தன்னுடன் திரும்ப அழைத்துச் செல்லும் நோக்கில் இங்கு வந்துள்ளார் எனக் கூறப்பட்டது.

## சமுர்த்திப் பயனாளிகள் காரைநகரில் போராட்டம்



காரைநகர், ஓக. 03

காரைநகர் பிரதேச செயலகத்திற்கு முன்னால் சமுர்த்திப் பயனாளிகள் நேற்றுக் காலை முதல் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

கடந்த 10 வருடங்களாக சமுர்த்தி நிவாரணம் பெற்று வந்த காரைநகர் பகுதி மக்களே இந்தப் போராட்டத்தில் ஈடுபட்டனர்.

மூன்று மாதத்திற்கு முன்னர் இடம்பெற்ற சமுர்த்தி மீளாய்வின் போது தாம் புறக்கணிக்கப்பட்டனர் எனவும் தமக்கு சமுர்த்தி நிவாரணம் வழங்கப்பட வேண்டும் எனவும் தெரிவித்தே இந்தப் போராட்டத்தில் அவர்கள் ஈடுபட்டனர்.

தாம் வறுமைக்கோட்டிற்கு கீழ் வாழ்ந்து வருவ கின்றனர் எனவும், தமக்கு சமுர்த்திநிவாரணம்கிடைக்க உரியதரப்பினர்நடவடிக்கை எடுக்க வேண்டுமெனவும் போராட்டத்தில் ஈடுபட்டுள்ள நூற்றுக்கும் மேற்பட்ட மக்கள் தமது ஆதங்கத்தை வெளிப்படுத்தினர்.

## மகப்பேற்று விடுமுறையில் உள்ளேன் ஆகவே என்னை விட்டுவிடுங்கள்!

### ஹிருணிகா எம்.பி. ஊடகங்களிடம் கெஞ்சல்

கொழும்பு, ஓக. 03

தாம் மகப்பேற்று விடுமுறையில் இருக்கிறார் எனவும் ஆகவே தம்மை விட்டுவிடுமாறும் ஊடகங்களிடம் நாடாளுமன்ற உறுப்பினர் ஹிருணிகா பிரேமசந்திர கோரிக்கை விடுத்துள்ளார்.

தனது முகநூல் கணக்கின் ஊடாக அவர் இவ்வாறு கோரிக்கை விடுத்துள்ளார்.

நாடாளுமன்றில் தாம் உரையாற்றினார் என சில இணையத் தளங்களில் செய்தி வெளியிடப்பட்டுள்ளதாக அவர் தெரிவித்துள்ளார்.

“இந்த முட்டாள்தனமான வதந்தி. இணைய தளங்களுக்கு என்ன பிரச்சினை என்று எனக்கு புரியவில்லை. எவ்வாறு இந்த ஊடகங்கள் போலியான செய்திகளை பிரசுரிக்கின்றன. தொடர்பு இல்லாத தலைப்பில் நான் நாடாளுமன்றில் உரையாற்றினேன் எனச் செய்தி வெளியிடப்பட்டுள்ளது” –என அவர் குறிப்பிட்டுள்ளார்.

தாம் மகப்பேற்று விடுமுறையில் இருக்கிறார் எனவும் கொஞ்சக் காலத்திற்கு இந்த சர்ச்சைகளிலிருந்து தாம் விடுபட்டிருக்க விரும்புகிறார் எனவும் அவர் தெரிவித்துள்ளார்.

“உங்கள் அழுக்கு விளையாட்டுக்களில் என்னை இணைத்துக் கொள்ளவேண்டாம். நிம்மதியாகவும் அமைதியாகவும் இருக்க தயவு செய்து இடமளியுங்கள். என்னை விட்டுவிடுங்கள்” – என அவர் கோரியுள்ளார்.

ஹிருணிகா பிரேமசந்திர கருவுற்றிருப்பதால் அண்மைய நாடாளுமன்ற அமர்வுகள் எதிலும் பங்கேற்கவில்லை என்பது குறிப்பிடத்தக்கது.

## நயினாதீவு - குறிகட்டுவான் படகுச் சேவை பகிஷ்கரிப்பில்!



நயினாதீவு–குறிகட்டுவான் தனியார் படகு உரிமையாளர்கள் நேற்று முதல் பகிஷ்கரிப்பில் ஈடுபட்டுள்ளனர்.

உரிய அனுமதி பெறாமல் தனியார் நிறுவனமொன்றினால் படகுச் சேவை ஒன்று ஆரம்பிக்கப்பட்டுள்ளதை ஆட்சேபித்தே இப் பகிஷ்கரிப்பு மேற்கொள்ளப்பட்டது.

மக்களுக்கு சிறப்பான போக்குவரத்துச்சேவையை – வயது முதிர்ந்தவர்கள் முதல் யாவரும் சிரமத்திற்குள்ளாகாமல் –இலகுவாகப் பயணம் செய்யக் கூடிய விதமாகத் தரமான படகுகள் மூலமாக 30ரூபா கட்டணத்தில் காலை முதல் மாலை வரை 30 நிமிடங்களிற்கு ஒரு தடவை என்ற ரீதியில் சேவையை தனியார் படகு உரிமையாளர்கள் வழங்கி வருகின்றனர்.

அத்துடன் வீதி அபிவிருத்தி அதிகாரசபை மூலமாகவும் நாளாந்தம் இரு தடவைகள் மேற்கொள்ளப்படும் பாதை சேவை போக்குவரத்திற்கு பாரியளவிலான பங்களிப்பை வழங்கிவருகிறது.

இந்நிலையில் திடீரென நயினாதீவு–குறிகட்டுவான் சொகுசு படகு சேவை அதிக கட்டணத்தில் உரிய அனுமதி பெறாமல் வேறு ஒரு தனியார் நிறுவனத்தினால் ஆரம்பிக்கப்பட்டுள்ளது.

இதனால், தனியார் படகு உரிமையாளர்களின் வாழ்வாதாரம் மட்டுமல்லாமல், அந்தப் படகுகளில் வேலை வாய்ப்பைப்பெற்ற நயினாதீவு இளைஞர்களின் வாழ்வும் பாதிக்கப்பட்டுள்ளது.

அவர்களின் குடும்பங்களும் இதையே நம்பி வேலைவாய்ப்பில்லாத சூழலில் இடம்பெயராமல் நயினாதீவில் வாழ்ந்து வருகின்றன.

இத்தகைய நிலையில் சொகுசு படகு சேவை ஆரம்பித்துள்ளமை பலரது வாழ்வாதாரத்தைக் கேள்விக் குறியாக்கியுள்ளது.

இதனைக் கண்டித்தே நேற்று முதல் பகிஷ்கரிப்பை தனியார் படகு உரிமையாளர்கள் மேற்கொள்கின்றனர்.

## தவணைப் பரீட்சையில் வினாத்தாளுடன் விடைத்தாளும் சேர்த்தே வழங்கப்பட்டதாம்!

கிளிநொச்சி ஓக. 03

கிளிநொச்சி கல்வி வலயத்தினால் நடத்தப்படுகின்ற இரண்டாம் தவணைப்பரீட்சையில், நேற்று இடம்பெற்ற தரம்பதினொன்றுக்கான சைவசமயப் பாட பரீட்சை வினாத்தாளுடன் விடைத்தாளும் வழங்கப்பட்டுள்ளது.

பாடசாலைகளில் தற்போது இரண்டாம் தவணை பரீட்சைகள் இடம்பெற்று வருகின்றன. இப் பிரச்சினையானது கிளிநொச்சி வலய பாடசாலைகளில் மாத்திரமே இடம்பெற்றுள்ளது.

பரீட்சைக்காக வினாத்தாள்கள் மாணவர்களுக்கு வழங்கப்படுவதற்கு வினாத்தாள் பொதி பாடசாலை பரீட்சை மண்டபத்தில் பிரிக்கப்பட்டு வழங்கிய போது வினாத்தாள்களுடன் விடைத்தாளும் காணப்பட்டுள்ளன. இதனை தொடர்ந்து அனைத்து வினாத்தாள்களிலும் காணப்பட்ட விடைகளை நீக்கிவிட்டு பரீட்சை நடத்தப்பட்டுள்ளது.

இச்செயற்பாடு குறித்து மாணவர்களும் பெற்றோர்களும் விசனம் தெரிவித்துள்ளனர். வினாத்தாள்கள் அச்சிடப்பட்ட பின்னர் அதற்குரிய ஆசிரியர்கள் அதனை சரிபார்க்காமையினாலேயே இத்தவறு இடம்பெற்றுள்ளதாக அவர்கள் தெரிவித்தனர். இவ்வாறாக இடம்பெறும் தவறுகளினால் மாணவர்களின் கல்வி நடவடிக்கைகள் பாதிப்படைவதாகச் சுட்டிக்காட்டப்படுகின்றது.

வடமாகாணக் கல்வி அமைச்சினால் இப்பரீட்சை வினாத்தாள்கள் வழங்கப்பட்டு பரீட்சைகள் நடத்தப்படுகின்றன. எனவே இது தொடர்பில் வட மாகாண கல்வி அமைச்சர் க.சர்வேஸ்வரனிடம் வினவிய போது, கிளிநொச்சி வலயத்தில் மட்டுமே அவ்வாறு நடைபெற்றுள்ளது என்றும். தற்போது உடனடியாக அவை மீளப்பெறப்பட்டு பரீட்சைகள் நடத்தப்பட்டுள்ளன – என்றும் தெரிவித்தார் எனக் கூறப்பட்டது.



யாழ்ப்பாணப் பல்கலைக்கழகம் மற்றும் உலகத் தமிழ்ப் பண்பாட்டு இயக்கம் ஆகியன இணைந்து ஏற்பாடு செய்துள்ள 13ஆவது சர்வதேச மாநாடு யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கிலும், ரில்கோ ஹோட்டலிலும் எதிர்வரும் சனி, ஞாயிற்றுக் கிழமைகளில் இடம்பெறவுள்ளது. அதற்கான ஆயத்த கலந்துரையாடல் ஒன்று நேற்று யாழ். பல்கலைக்கழகத்தில் இடம்பெற்றபோது...

இப்பத்திரிகை யாழ்ப்பாணம் இல.30 இந்துக் கல்லூரி வீதியிலுள்ள சிவராம் பப்ளிகேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தின் பணிமனையில் தயாராகி 672B கே.கே.எஸ் வீதியிலுள்ள அவர்களது அச்சகத்தில் 03.08.2017 இல் அச்சிடப்பட்டுவெளியிடப்பெற்றது.